

கல்கி
KALKI
25-10-1970
40 காசு
சிறுகதைச்
சிறப்பிதழ்


சேம்பியன் குழந்தை
கிரீஷ் எட்டு மாதங்களில் தானே எழுந்து நிற்க ஆரம்பித்து விட்டான். உறுதியான எலும்புகள், பொலிவான சருமம், சுட்டும் விழிச்சுடர்... குழந்தைகளில் சேம்பியன் என்றால், அது அவன்தான். அவனது துள்ளும் ஆரோக்கியத்தின் பெரும் இரகசியம், ஒரு விசேஷமான குழந்தை உணவு.
அறிமுகப் படுத்திய இரண்டாண்டுகளுக்குள் அமுல்ஸ்ப்ரே விற்பனையில் மற்றெந்த ப்ராண்டையும் மிஞ்சி, குழந்தை உணவுகளிலே முதலிடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது. விசேஷமான ஊட்டத்தை அளிப்பதற்காக, அது ஒரு விசேஷ செய்முறைப் படி விசேஷமான ஆக்க முறையில் (ஸ்ப்ரே-ட்ரையிங்) தயாரிக்கப் படுகிறது. ஆம், உங்களுடைய அருமைக் குழந்தைக்காக, சீரணிக்க எளிதான அமுல் ஸ்ப்ரே சமச்சீர் ஊட்டச் சத்தை வாரி வழங்குகிறது: அவசியமான வைட்டமின்களும், கனிப் பொருட்களும்; மூளையும் உடலும் நன்கு வளர்வதற்காக அதிகமான தரம் மிகுந்த புரதம்.
சேம்பியன் குழந்தை உணவு
Amulspray
அமுல்ஸ்ப்ரே
தாய்ப் பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது.
ASP/AS-


CAMY
GENEVA
கேமி கடிகாரம்
நாளுக்கு 24 மணி
நேரமும், வருடம் 365
நாட்களும் கவர்ச்சி-
யையும், துல்லியமான
இயக்கத்தையும்
வழங்குகிறது.
பல மாடல்களிலிருந்து
தேர்ந்தெடுங்கள் —
எல்லாம் நியாயமான
விலை கொண்டவை.




TRADE MARK
S.F.F. KMU

தயாரிப்பாளர் :

சுந்தரம் பயர் ஒர்க்ஸ் பாக்டரி

கும்பகோணம் (தஞ்சை ஜில்லா)


அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!
பியர்ஸ் சருமக் களை ... கன்னிப் பருவக் களை
PEARS
TRANSPARENT
SOAP
பியர்ஸ்—அசல் கிளிசரின் …

இதோ, சிறிய

சிறிய மூர்த்தி, பெரிய கீர்த்தி! 165 லீட்டர்கள் கொள்திறன் உள்ள இந்த அருமையான புதிய ஃப்ரிஜ் வடிவத்திலும் அமைப்பிலும் கோத்ரெஜ் கம்பெனியின் புகழ்பெற்ற தொழில் நுட்பத் திறமைக்கு தக்க சான்று. விற்பனைக்குப் பிறகு இதற்கு கோத்ரெஜின் திறம்பட்ட சர்வீஸ் கிடைக்கும். விலை ரூ. 2181.40 மட்டுமே.

255 லிட்டர்கள் கொள்திறன் உள்ள பெரிய கோத்ரெஜின் எல்லா சிறப்பம்சங்களையும் நீங்கள் இந்த விலை குறைவான சிறிய கோத்ரெஜில் பெறலாம்.

இரண்டல்ல, மூன்று பூச்சுகள்

இதன் காபினெட் வெள்ளை நிறத்துடன் கூடியது. மேல் பாகத்தில் ஃபார்மைக்கா பதிக்கப்பட்டுள்ளது. உட்புறம் அழகான இளம் பச்சை நிறத்துடன் கூடியது மற்றும் விட்ரியஸ் எனாமல் மூலாம் கொண்ட எஃகினால் ஆனது. ஆகவே கீறல்கள் ஏற்படாது மற்றும் சுகாதார முறையில் சுத்தமாக இருக்கிறது.

துருப்பிடிக்காத ஷெல்ஃபுகள்

இதன் ஷெல்ஃபுகளைத் தேவைக்கேற்றபடி சுழட்டிப் பொருத்த முடியும். இவை அலுமினியப் பூச்சுடன் கூடியவை மற்றும் துருப்பிடிக்காதவை. காய்கறி வைக்கும் 'டிரே' விட்ரியஸ் எனாமல் பூச்சுடன் கூடியதுதான். ஃப்ரீசர் அறையும் வெண்ணெய் வைக்கும் பெட்டியும் ஃப்ரிஜின் முழு அளவுக்கு அகலமானவை. ஃப்ரீசரின் மூடி அலுமினிய மூலாமுடன் கூடியது. இதற்கு ஸ்பிரிங்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஐஸ் கட்டிகளை எடுக்க கருவி


கோத்ரெஜில் மட்டுமே ஐஸ் கட்டிகளை எடுப்பதற்கு கருவி இருக்கிறது.

எல்லா சீல்களும் திருகாணிகளும் துருவோ அரிப்போ ஏற்படாத உலோகத்தால் செய்யப்பட்டவை.

இதன் கம்ப்ரெசர் யூனிட் அதிர்வு மிகவும் குறைவானது. வோல்ட்டேஜின் ஏற்றத் தாழ்வுக்கு ஈடு கொடுக்கக் கூடியது.

ஏழு முட்டைகளை வைக்கக்கூடிய கண்டெய்னர் இருக்கிறது.

8 நிலைகளில் சரிபடுத்தக்கூடிய தெர்மோஸ்டாட் உள்ளதால் குளிர்ச்சியை விருப்பம்போல் கட்டுப்படுத்த முடியும்.



கோத்ரெஜ் ரிஃப்ரிஜெரேட்டர

எல்லா கோத்ரெஜ் ரிஃப்ரிஜெரேட்டர்களுக்கும் 5 வருட உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. வாரத்தில் என்றும் திறமையான சர்வீஸ் கிடைக்கும்.

இலவசப் பிரசுரத்தைப் பெற இந்த விலாசத்துக்கு எழுதுங்கள்: விளம்பர இலாகா, கோத்ரெஜ் அண்ட் பாய்ஸ் மானுஃபாக்சரிங் கோ. பிரைவேட் லிமிடெட் லால்பாக், பம்பாய்-12.

இந்தப் பிரமாதமான சிறிய கோத்ரெஜை பம்பாயிலும் சென்னையிலும் ஷோ ரூம்களில் காணலாம். சீக்கிரமே மற்ற நகரங்களிலும் பார்க்கலாம்.

* விலை எக்சைஸ் டியூட்டி உள்பட, உள்ளூர் வரிகள் தனி.

Godrej® கோத்ரெஜ்



கல்கி பொருளடக்கம்

சாதாரண, ஐப்பசி 8 ❋ 1970 அக்டோபர் 25

□

சிறுகதைச் சிறப்பு இதழ்

□

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை(இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



மலர் 30
இதழ் 13

வாய்ச் சிலம்பமும் வாண வேடிக்கையும்

ஏழைமையை அகற்றுதல்; அனைவருக்கும் வேலை கிடைக்கச் செய்தல்; நியாயமான ஊதியத்துக்கு வழி செய்தல்; தேச வருமானமும் தனிநபர் வருமானமும் உயரச் செய்தல்; எல்லா மக்களுக்குமான பொதுப் பணிகளை ஒழுங்காக வகுத்து வளர்த்தல் — இவையே எல்லா அரசியல் கட்சிகளுடையவும், பொருளாதார அறிஞர்களுடையவும் பொது இலட்சியமாகும். இந்த நோக்கங்களைப் பொறுத்த மட்டில் 'வலதுசாரி', 'இடதுசாரி' என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த இலட்சியங்களை ஒழுங்கான, அமைதியான உபாயத்தால் அடைவதா; அல்லது வன்முறை, ஒழுங்கீனம், குழப்பம் இவற்றோடுகூடிய திடீர் தீவிரச் செயல்களால் அடைவதா என்பது குறித்தே இந்தியாவில் அரசியல் கட்சிகள் பிரிந்திருக்கின்றன.

ஆளும் காங்கிரஸ் கட்சியும், இடதுசாரி எனப்படும் மற்ற கட்சிகளும் இரண்டு மாயப் பிரசார கோஷங்களில் தீவிரமாக இறங்கியுள்ளன. 'இடதுசாரிச் சக்திகளின் ஐக்கியப் பான்மை' என்பது இவற்றில் ஒன்று. 'சோஷலிஸம்' என்பது மற்றது. 'இடதுசாரிச் சக்திகளின் ஐக்கியப் பான்மை'க்காகத்தான் வங்காளத்திலும், கேரளத்திலும் நடந்த ஒழுங்கீனத்தை மத்திய சர்க்கார் மெத்தனமாகப் பார்த்துக் கொண்டே இருந்தது. இப்போது மார்க்ஸிஸ்டுகளுக்கும், ஆளும் காங்கிரஸுக்குமிடை முரண்பாடு ஏற்பட்டு விட்டதால், பிரதமரும் சோஷலிஸத்தை அமைதி முறையில் உருவாக்கும் பணிக்குத் தம்மை ஆசாரியராக்கிக் கொண்டது போல் வேஷமிடுகிறார். ஆனால், வங்காளத்தில் சட்டமும், சமூக ஒழுங்கும் அடியோடு நொறுங்கி விழுந்ததற்கும், தேசம் எங்கணுமே இவை பொதுவாகப் பலவீனமுற்றதற்கும் இதே பிரதமரும் ஸ்ரீ சவானும்தான் முக்கியமான பொறுப்பேற்க வேண்டும். வங்காளத்தில் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்பட்டுவிட்ட போதிலும், நக்ஸலைட்டு பிரச்னையைத் தீர்ப்பதில் இன்னும் அரை மனசாகவேதான் இருந்து வருகிறார்கள்.

'இடதுசாரி ஐக்கிய'த்தின் விளைவுகளில் நக்சல்பாரிகளின் நேரடி வன் செயல்கள் மிகவும் அபாயகரமானவை. மற்றொரு விளைவும் தேசத்துக்கு மகத்தான தீங்கு இழைக்கிறது. இதுதான், சங்கமாகக் கூடிச் செயலாற்றும் தொழிலாளரிடம் காணப்படும் பிடிவாதமும், கட்டுப்பாடின்மையும், தேசப் பற்றின்மையுமாகும். தொழிற் சங்கங்களின் பூசல்களினால் எப்போது பார்த்தாலும் வேலை நிறுத்தமும், கதவடைப்பும் நடந்து கொண்டேயிருந்தால் உற்பத்தி எப்படிப் பெருகும்? பொருளாதார முன்னேற்றம் எப்படி ஏற்படும்? இந்தச் சங்கடங்களைத் தனியார் துறையில் மட்டுமின்றி, அதைவிடப் பயங்கரமாகத் துர்க்காபூர் உருக்காலை, கல்கத்தா துறைமுக டிரஸ்ட் முதலிய அரசாங்க நிறுவனங்களிலும் கண்டோம்.

படிப்பில் சிறப்புப் பெற முடியாத மாணவர்கள் இடதுசாரி இயக்கங்களில் 'மாவீரர்'களாகிக் கல்வி நிலையங்களிலும் வேலைநிறுத்தம் செய்கின்றனர். அநேகமாக இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் இவர்களால் உயர் கல்வி நிறுவனங்கள் ஸ்தம்பிதமாகியிருக்கின்றன.

அடுத்த பிரசார கோஷம் 'சோஷலிஸம்'. இது ஒரு முழு மோசடி. மக்களை ஏய்க்கவே இது உபயோகிக்கப்படுகிறது. சர்க்கார் ஒன்றே முதலாளியாக இருப்பதுதான் சோஷலிஸம் எனக் கூறப்படுகிறது. தனியாரின் முதலாளித்துவத்தினால் உண்மை சோஷலிஸத்தைத் தேசம் நெருங்கக்கூடும். ஆனால் சர்க்காரின் முதலாளித்துவத்தினால் நிச்சயமாக சோஷலிஸ லட்சியம் ஈடேறாது. சர்க்கார் முதலாளித்துவ முறையில் சர்க்காரிடம் அரசியல் அதிகார சக்தி, பொருளாதார ஆதிக்க சக்தி இரண்டும் தரப்படுகின்றன. இதன் விளைவாகத் தொழிலாளரின் சகல சுதந்திரமும் நாசமாகும். சர்க்கார் ஏக முதலாளியாகி விட்டால், அதன்பின் தொழிலாளர்கள் ஊதிய

உயர்வுக்காகவும் நியாயமான இதர கோரிக்கைகளுக்காகவும் கூடப் போராடும் சுதந்திரத்தை இழப்பர். ஆனால், இப்போதைக்கு இந்திய அரசியலில் நிலவும் குழப்பச் சூழலில், சர்க்கார் தொழிலகங்கள் திறமையாகச் செயலாற்றுவதைப் பாதிக்குமளவுக்குத் தொழிலாளரைத் 'தூக்கி'விடும் போக்கும் தூண்டிவிடும் போக்கும் காணப்படுவது வாஸ்தவமே.

மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளை முதலாளித்துவ நாடுகள் என்கிறார்கள். இந்நாடுகளில் இந்தியாவைக் காட்டிலும் அதிக ஜனநெரிசல் (நாட்டின் விஸ்தீரணத்தை வைத்துப் பார்க்கும்போது) உள்ளது. அப்படியிருந்தும் அங்கு அனைவருக்கும் வேலை தர முடிகிறது. அதுவும் போதாமல், மற்ற நாடுகளிலிருந்தும் அவை தொழிலாளரைத் தருவித்துக் கொள்கின்றன! இந்தியாவில் கோடானு கோடியார் வேலையற்றிருக்கும்போது ஜெர்மனியிலும் ஜப்பானிலும் இப்படி நடப்பது விந்தை அல்லவா? இதிலிருந்தே, தனியாரின் சுதந்திர ஊக்கத்தைக் குலைத்து, அவர்களை லைசென்ஸ் — பெர்மிட்டுக்காக 'க்யூ'வில் நிறுத்தி வைப்பது நம் பொருளாதார வளர்ச்சியை எப்படிப் பாதித்துள்ளது என உணரலாம்.

'இடதுசாரி ஐக்கியம்', 'சோஷலிஸம்' ஆகிய இரு கோஷங்களால் ஏற்படும் விபரீத விளைவுகளின் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காக, பிரதமர் தமது அதிகார சக்தியையும் சாதுரியத்தையும் காட்டி வாண வேடிக்கைகள் நடத்தி மக்கள் கவனத்தைத் திருப்பப் பார்க்கிறார்.

இந்த வாண வேடிக்கைகளில் ஒன்றே பாங்குகளை அரசாங்க உடைமையாக்கியது. இதன் விளைவுகள் இன்னும் உணரப்படவில்லை. சிறு தொழில்களுக்கும், ஏழை வர்த்தகர்களுக்கும் பாங்குக் கடனில் வட்டிச் சலுகை காட்ட வேண்டும் எனப் பொறுப்பின்றிப் பேசப்படுகிறது. மற்றச் சர்க்கார் நிறுவனங்கள் போல் பாங்குகளும் படுநஷ்டப்படுவதைத் தவிர்க்க வேண்டுமாயின், இவ்வாறு சிலருக்கு வரிச் சலுகை தருவதை ஈடுகட்டுவதற்காக நன்கமைந்த தொழில் நிறுவனங்களிடம் இப்போதைக் காட்டிலும் அதிக வட்டி வாங்க வேண்டி இருக்கும். இதனால் அவற்றின் உற்பத்திச் செலவு அதிகமாகும்; அதன் விளைவாக, விலைகள் மேலும் உயரும். பெரிய வர்த்தகர்களுக்கு மட்டுமின்றி, நடுத்தர, சிறிய வர்த்தகர்களுக்கும் எளிதில் கடன் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது உண்மையே. ஆயினும், கடனைத் திர்க்கும் திறனையே கருதாமல் கடன் வழங்கினால், முடிவில் தேசிய ரீதியில் நிதி நிலைமை படுத்துவிடும். தனித் தனி டைரக்டர்களின் போர்டுகள் பாங்குகளை நிர்வகித்தபோது, பாங்குகள் அனைத்தும் ஒருமொத்தமாகத் திவாலாகிவிடும் ஆபத்து இருக்கவில்லை. இப்போது பாங்குகள் வெவ்வேறு பெயர்களில் நடத்தப்பட்டாலும், அவை யாவும் ஒரேவிதமான உத்தரவுகளுக்கும், ஒரே விதமான அரசியல் ஆதிக்கத்துக்கும் உட்பட்டிருப்பதால், சீரழிவு ஏற்படுமாயின் அது அத்தனை பாங்குகளையும் ஒரே சமயத்தில் தாக்கிவிடும்.

மத்திய சர்க்காரின் வாண வேடிக்கைகளில் இன்னொன்று, மன்னர்களை அங்கீகரிக்க மறுத்ததாகும். நீதி மன்றத்தின் விசாரணையிலுள்ள இவ்விஷயமாக விமரிசிப்பதற்கில்லை.

நில உடைமையைக் குறைப்பது மற்றுமொரு வாண வேடிக்கை. இது குறித்து ஏகக் கூச்சல் எழுப்பப்படுகிறது. நில உடைமை விஷயமாக அடிக்கடி தலையிடுவது விவேகம் தானா என்று முதன் மந்திரிகளில் பலர் விசேஷ மகாநாட்டில் ஐயம் தெரிவித்தது மகிழ்ச்சிக்குரிய விஷயம். இப்போது அநேகமாக எல்லா ராஜ்யங்களிலுமே விதிக்கப்பட்டுள்ள நில வரம்பு, நவீன விவசாய முறையை மேற்கொள்ள முடியாமல் செய்து விட்டது. நில உடைமையை இன்னமும் குறைத்தால் விவசாய முன்னேற்றத்துக்கு அது மகத்தான அடியாக இருக்கும். ரசாயன உரத்தாலும், வலுவான வித்துக்களை வழங்குவதாலும் இந்தப் பாதிப்பைச் சரிசெய்துவிட முடியாது.

தற்போது செய்யப்படும் வாண வேடிக்கைகள் எதுவும் ஏழைமையை அகற்றவோ, வேலை வாய்ப்பை உண்டாக்கவோ, சமூக நலனை விருத்தி செய்யவோ, சமுதாய உறுதிப்பாட்டைக் காக்கவோ அனுமாத்திரமும் உதவா; உண்மை சோஷலிஸத்துக்குத் துணை செய்யா.

'மக்களில் சிலரைக் காலம் முழுதும் ஏமாற்றலாம்; மக்கள் முழுமையையும் சில காலம் ஏமாற்றலாம்; ஆனால் காலம் முழுவதும் மக்கள் முழுமையையுமே ஏமாற்ற முடியாது' என்பதை நம்பியிருப்போமாக!

(அடிப்படை: ஸ்ரீ க. சந்தானம் அவர்கள் 24–10–70 'ஸ்வராஜ்யா'வில் எழுதியுள்ள கட்டுரை.)



வருந்துகிறோம்

வழக்கறிஞர் ஸ்ரீ வி. தியாகராஜய்யரவர்களின் மறைவு குறித்து வருந்துகிறோம். பிரபல வக்கீலாகவும், நீதிபதியாகவும், அஃபீஷியல் அஸைனியாகவும் அவர் சிறப்புப் பணி ஆற்றினார். முக்கியத்வம் படைத்த பல வழக்குகளில் அவர் வாதிட்டு வெற்றி கண்டார். மதிப்புக்குரியவராக வாழ்ந்தார். அன்புடனும், எளிமையுடனும் பழகினார். சட்டத்துறை இளைஞர்களுக்கு விசேஷ ஊக்கம் தந்தார். தெய்வ பக்தியும் தார்மிக சிந்தையும் படைத்தவராக நிறை வாழ்வு வாழ்ந்தார். அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு நமது அநுதாபங்கள்.

ராஜாஜியின் கருத்துக்கள்

கம்யூனிஸக் கிழக்கு ஜெர்மனியிலிருந்து வாங்கப்பட்ட டிராக்டர்கள் பற்றி நிறையப் புகார்கள் எழுந்துள்ளன. இவ்விஷயத்தை ஆராய நுட்பத்தொழில் நிபுணர் குழு ஒன்றை யூனியன் சர்க்கார் ஆந்திரப் பிரதேசத்துக்கு அனுப்பியது. குழுவினர் டிராக்டர்களில் உள்ள பலவிதமான குறைபாடுகளைக் குறிப்பிட்டிருக்கின்றனர். இவை சரியாக வேலை செய்யாததால், இவற்றை வாங்கிய பல விவசாயிகள் இவற்றைத் திருப்பித் தந்து விட்டுப் பணத்தைக் கேட்பதாகவும், வக்கீல் நோட்டீஸ் விடுவதாகவும் ஆந்திரப் பிரதேச மார்க்கெட்டிங் மந்திரி கூறுகிறார். இந்த டிராக்டர் ஒன்றின் விலை ரூ. 15,000.

கிழக்கு ஜெர்மனியிலிருந்து முப்பத்துமூன்று பொறி இயல் நிபுணர்கள் சில மாதங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்து இவற்றில் எழுபத்தொரு டிராக்டர்களை ரிப்பேர் செய்து சென்றார்கள். ஆனால் மறுபடியும் இவற்றில் ஐம்பது கருவிகள் பழைய கோளாறுகளுக்கு ஆளாகி விட்டன. இவற்றில் பழுதான உறுப்புக்களைப் புதிதாகப் பெறவும் முடிவதில்லை. இவ்வாறு ஆந்திர அமைச்சர் கூறுகிறார்.

கிழக்கு ஜெர்மனி இதற்குச் சொல்லும் சமாதானம் யாதெனில், நம் விவசாயிகளுக்குச் சரியாகக் கருவிகளை இயக்க யாரும் சொல்லித் தரவில்லை; போதிய நுட்பத் தொழிலறிவு விவசாயிகளுக்குக் கற்பிக்கப்படவில்லை என்பதேயாகும். இந்தச் சமாதானம் திருப்தி தருவதாக இல்லை. நிலத்தில் இறங்கும் முன்பே சீர்கெட்டுவிடும் கருவிகள்தாம் இந்தியாவுக்குக் கிடைக்கின்றனவா ? இந்தியாவிலோ, வேறெங்கோ நல்ல டிராக்டர்களைப் பார்த்து வாங்குவதற்கு முடியாதா?

★

இந்திய மக்களுக்குத் தங்கள் வகுப்பினரிடமும், குடும்பத்திடமும் உள்ள பற்றை ஒப்புக்கொண்டு அது தேச நலனுக்கு உதவுமாறு வளர்க்க வேண்டும் என நான் சமீபத்தில் எழுதியிருந்தேன். இதற்குத் தொடர்பாகப் பேராசிரியர் பார்கின்ஸன் கூறியிருப்பதாவது: ''மேல் நாட்டு மனிதன், தான் ஒரு தனிநபர் என்பதையே முக்கியமாகக் கருதுபவன். கிழக்கு நாட்டவனோ தான் ஒரு ஜாதியை, இனத்தை, குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற உணர்ச்சி அதிகம் உள்ளவன். இந்த மறுக்கவொண்ணாத மாறுபாட்டுக்கு ஜனத்தொகை, மதம், மரபு, சரித்திரம் யாவுமே காரணமாகும். மேல் நாட்டில் ஓர் இளைஞன் ஒரு யுவதியைச் சந்திக்கிறான், காதலிக்கிறான், அதில் இடுக்கண் நேர்கிறது, கடைசியில் எவ்வாறேனும் அவளைப் பெறுகிறான், மணந்து கொள்கிறான், அதோடு திரை விழுகிறது. ஆசியாவில் நடப்பதென்ன? யுவதியின் பெற்றோர் நண்பர்களைக் கொண்டு யுவனின் பெற்றோரிடம் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். இதில் இடையூறுகள் நேருகின்றன. பிறகு சமரசம் ஏற்படுகிறது. கலியாணம் நிச்சயமாகிறது. அதன்பின்தான் யுவன் யுவதியைச் சந்திக்கிறான். தாம்பத்தியம் என்ற அந்தரங்கத் தொடர்பை இவ்விதம் மூன்றும் மனிதர்கள் எப்படி ஏற்படுத்த முடியும் என ஐரோப்பியன் நினைப்பான். இதற்கு விடை மிக எளிதானது. ஆசிய இளைஞனும் யுவதியும் ஐரோப்பியரைப் போன்ற தனி நபர் அல்ல. அவர்களது தாம்பத்தியத் தொடர்பும் மேல்நாட்டிலிருப்பது போன்றதல்ல. மேல்நாடுகளில் ஒரு மகன் மணம் செய்து கொண்டால், உடனே தகப்பனின் வீட்டிலிருந்து விடைபெற்றுத் தனிக் குடித்தனம் போட்டு விடுகிறான். கீழை நாடுகளிலோ மகன் மணமானபின் மனைவியையும் தன் தந்தையின் வீட்டில் வசிக்கவே அழைத்து வருகிறான். 'யுவனும் யுவதியும் மணந்தனர், எல்லாம் சுபமாக முடிந்தது' என்று மேல்நாட்டில் கதை சொல்லப்பட்டாலும், உண்மையில் திருமணத்துக்குப்பின் இப்படிப்பட்ட சுபமான சூழ்நிலை காணப்படுவதில்லை. ஏனெனில், இங்கு தாம்பத்தியம் என்பது இரண்டே பேரைப் பொறுத்த காதல் உணர்ச்சி ஒன்றையே அடிப்படையாகக் கொண்டது. கீழை நாடுகளில் அவ்விருவர் மட்டுமின்றிச் சுற்றத்தாரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஒரு ஜப்பானிய யுவன் அல்லது யுவதி தன் பாட்டனாரைப் பார்த்து அவரது உதாரணத்தைப் பின்பற்ற முடிகிறது. பாட்டியிடம் அறிவுரை கேட்க முடிகிறது. தகப்பனாரிடம் உதவி கேட்க இயலுகிறது. தாயாரிடம் அநுதாபம் பெற முடிகிறது. மாமாவிடம் நிதி உதவி கேட்க முடிகிறது. அத்தையிடம் பண்புகளைக் கற்க முடிகிறது. அண்ணனிடம் ஆலோசனை பெற முடிகிறது. தம்பியைக் கூட்டுச் சேர்த்துக் கொள்ள முடிகிறது. சகோதரியிடம் சில்லறை வேலைகள் வாங்க முடிகிறது. அத்தான், அம்மாஞ்சி போன்றவர்களுடன் சந்தோஷமாகப் பொழுதுபோக்க முடிகிறது. ஆனால் மேல்நாட்டு யுவன் இத்தனை அம்சங்களையும் தன் மனைவியிடமே எதிர்பார்க்கிறான்; அதேபோல் அந்த யுவதியும் இவ்வளவு இனங்களுக்கும் கணவன் ஒருவனையே சார்ந்திருக்கிறாள். ஆனால் இது பகுத்தறிவுக்குப் பொருந்தாத தாம்பத்தியம். காதல் உறவு ஒன்று மட்டும் இத்தனை சுமையைத் தாங்க முடியுமா ? இப்படிப்பட்ட தனித் தன்மைக்காக மேல் நாட்டினர் பெரிய அபராதம் செலுத்த நேருகிறது. மன நெரிசல், நரம்புத் தளர்ச்சி, அதற்காகப் போதை மருந்து, மனநோய் வைத்தியம், இளமைக் காலக் கோளாறுகள், ஆசாபங்கம், விவாக ரத்து — இப்படி அபராதம் செலுத்தப்படுகிறது.

''இது குடும்ப நிலை. பொது வாழ்விலும் மேல் நாடுகளில் அவரவரும் தனித்து நிற்க முனைவதால், கடைசியில் ஒவ்வொருவரும் சர்க்காரின் தயவிலேயே வாழ வேண்டியதாகிறது. சர்க்காரின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கச் சமூகப் பிரிவுகள் என்ற ஆதிகாலக் கவசம் மேல் நாட்டினருக்கு இல்லை.''

ராமாயணம்

ராஜாஜி


67. ராவணன் பிரார்த்தனையும் சீதையின் பதிலும்

தருமம், புருஷனுடைய நினைவு இவை இரண்டையும் பற்றிக் கொண்டு துக்கப் பெருங்கடலில் மிதந்து கொண்டு உயிரை வைத்திருந்த சீதையைப் பார்த்து ராவணன் சொன்னான்:

''அழகியே! ஏன் கூச்சப்பட்டுத் தேகத்தை மறைத்துக் கொள்கிறாய்! உன் மேல் எனக்கு உண்டாகியிருக்கும் அன்பை நீ அறியாயோ? உன் அன்பை நான் பிச்சை கேட்கிறேன். நீ பயப்பட வேண்டியதில்லை. என்னிடத்தில் உனக்கு உள்ளூறப் பிரியம் உண்டாகும் வரையில் உன்னை நான் தொடமாட்டேன். நீ பயப்பட வேண்டாம். என் விருப்பத்துக்குச் சமமாக உனக்கும் என் பேரில் விருப்பம் உண்டாக வேண்டும் என்பது என்னுடைய ஆசை. உண்மையான அன்போடு நீ என்னை ஒப்புக் கொள்ள வேண்டும். வீணாகத் துக்கத்துக்கு ஏன் உன் உடலை இரையாக்கி வருகிறாய்? அழகியே! உனக்குச் சமமான சௌந்தரிய ஸ்திரீ உலகத்தில் இல்லை. நீ இப்படி ஆபரணமின்றி நல்ல வஸ்திரமின்றித் தரையில் படுப்பதும் தலைமயிரை வாரிப் பின்னாமல் விட்டு உபவாசம் இருப்பதும் வேண்டாம். பெண் ரத்தினமே! இப்படி உன் அழகையும் வயதையும் வீணாக்காதே. என்னிடம் வந்து சேர்ந்து விட்டாய். இனி நீ கஷ்டப்படலாகாது. சகல போகங்களையும் அனுபவிக்கலாம். பூரண சந்திரனைப் போன்ற உன் முகத்தைப் பார்த்தால் என் கண்களை வேறு திக்கில் செலுத்த முடியவில்லை. உன் உடலில் எந்த அங்கத்தைப் பார்த்தாலும் என் திருஷ்டி அங்கேயே பற்றி நிற்கிறது. இந்த அழகைப் பெற்ற நீ இப்படித் துக்கப்படுவது தகாது. என்னைப் புருஷனாக அடைந்து, சகல போகங்களையும் அடைந்து அனுபவித்து மகிழ்ச்சி அடைவாய். பயப்படாதே! யோசிக்காதே! நீயே பட்டமகிஷியாக இருப்பாய். என் அந்தப்புரம் முழுவதும் உனக்கு அடங்க நீ ஆள்வாய். என் செல்வம், ராஜ்யம் அனைத்தும் பெற்றுக் கொண்டு அனுபவிப்பாய். இந்த லங்கையும் நானும் உன் சொத்தாவோம். இந்தப் பூமண்டலம் முழுதும் உனதாகும். என் பலம், வீரம், தைரியம் இவற்றைத் தேவாசுரர்கள் அறிவார்கள். அவர்கள் என்னால் அடிபட்டுத் தோற்றுத் தலை வணங்கி நிற்கிறார்கள்.

''உன் அழகுக்குத் தகுந்த ஆபரணங்களும் வஸ்திரங்களும் கொண்டு உன்னை அந்தப்புர ஸ்திரீகள் அலங்கரிப்பார்கள். அலங்கரிக்கப்பட்ட உன்னைப் பார்த்து நான் மகிழ்வேன். உன் இஷ்டப்படி நீ தான தருமம் செய்யலாம். அனைவர் பேரிலும் அதிகாரம் செலுத்துவாய். என் பிரஜைகளும் பந்துக்களும் உன்னை அண்டிச் சந்தோஷமாக இருப்பார்கள். காட்டில் அலைந்து திரியும் ராமனை ஏன் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? ஊரை விட்டுப் பதவியை விட்டு மரவுரி தரித்து அலையும் ஒருவனையா நீ விரும்புவது? நம்புவது? அவனால் என்ன செய்ய முடியும்? ராஜ்யலக்ஷ்மியும், ஜயலக்ஷ்மியும் அவனை விட்டு விலகினது உனக்குத் தெரியுமே. அவன் இப்போது பிழைத்திருப்பதே சந்தேகம். உன்னை ராமன் இனிக் கண்ணால் பார்க்கவும்கூட முடியாது; கிட்ட நெருங்க முடியாது.

''கருடன் சர்ப்பத்தைப் பிடிப்பது போல் நீ என் உள்ளத்தை அபகரித்து விட்டாய். நான் தப்ப முடியாது அலைகிறேன். ஆபரணமும் நல்ல வஸ்திரமுமின்றி நீ இப்போது இருக்கும் நிலையிலுங்கூட உன்னைப் பார்த்த பிறகு, சுந்தரியே! என் மனைவிகளுடன் கலந்திருக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. நான் என்ன செய்வேன்? அந்தப்புரத்தில் கணக்கில்லாத அழகிகள் இருக்கிறார்கள். உன்னைப் பார்த்தபின் அவர்கள் எனக்கு வேண்டியிருக்கவில்லை. அவர்களுக்கெல்லாம் நீயே அரசியாக இருந்து அவர்களுடைய சேவையைப் பெற்றுச் சுகமாக இருப்பாய். எந்த விதத்தில் ராமன் எனக்குச் சமம் ஆவான்? தவத்திலும் பலத்திலும் புகழிலும் செல்வத்திலும் எல்லாவற்றிலும் நான் அவனுக்கு மேம்பட்டவன் என்பது உனக்குத் தெரியவில்லையா? பயத்தை அகற்றுவாய். உலகம் முழுதும் நாம் இருவரும் சுகமாகத் திரிவோம். சகல ஐசுவரியமும் என்னுடன் அனுபவிப்பாய். ஆனந்தமாய்க் காலம் கழிப்பாய். சுந்தரியே! மனம் இரங்கு!



கடற்கரை வனங்களில் சந்தோஷமாக விளையாடுவோம். ஒப்புக் கொள்.''

இவ்வாறு ராவணன் தன் அடங்கா ஆசையை வெளியிட்டுச் சிதையை இறைஞ்சினான்.

ராவணன் பேசி நிறுத்தினதும் ஒரு துரும்பைக் கிள்ளித் தனக்கும் அவனுக்கும் இடையில் வைத்து, களங்கமற்ற நகை நகைத்து மெதுவாகப் பேச ஆரம்பித்தாள் :

'' என்னைப் பற்றிய எண்ணத்தை உடனே விலக்குவாய். என்னை நீ விரும்புவது தகாத காரியம். உன் மனைவிகளை விரும்பி அவர்கள்பால் மனத்தைச் செலுத்து. நீ சொல்லுவதை என்னால் ஒரு நாளும் செய்ய முடியாது. நான் பிறந்த குலத்தையும் நான் புகுந்த குலத்தையும் தெரிந்து கொள்வாய். இத்தகைய யோசனை என்னிடம் செல்லுமா? தகாத எண்ணத்தை வைத்து வளர்த்துக் கொண்டு துயரப் படாதே.''

இப்படி அவனைப் பார்த்துச் சொல்லி விட்டு, வேறு திசையில் முகத்தைத் திருப்பி மேலும் பேசலானாள்:

''வேறொருவன் மனைவியாகிய நான் உனக்கு மனைவியாக முடியாது. தருமத்தைப் புறக்கணிக்காதே. அயோக்கிய மார்க்கத்தில் செல்லாதே. நல்லவர்கள் போகும் வழியில் செல்வாய். நான் சொல்வதைக் கேள். உன் மனைவிகளை நீ எவ்வாறு காத்து வருகிறாய்? யோசித்துப் பார். அப்படியே அல்லவா மற்றவர்களும் தங்கள் மனைவிகளைக் காக்கப் பார்ப்பார்கள். மற்றவர்களும் உன்னைப் போலவே என்பதை நினைவில் வை. பிறத்தியாருடைய ஸ்திரீகளை விரும்பாதே. உன் மனைவிகளுடன் சுகம் பெற்றுத் திருப்தியடை. இது உனக்கு நன்மையாகும். உனக்கு உரிமையான ஸ்திரீகளுடன் திருப்தி அடையாமல் மற்றவர்கள் பேரில் மனத்தைச் செலுத்தினையானால் அவமானமும் துக்கமும் அடைவாய். நிச்சயம்.

''உனக்கு நல்ல புத்தி சொல்லுகிறவர்கள் யாரும் இல்லையா? ஏன் இவ்வாறு கெட்ட காரியங்களில் புகுந்து நீயும் கெட்டுப் போகிறாய்? உன் ஜனங்களுக்கு நாசம் தருவித்துக் கொடுக்கிறாய்? அரசன் தன் மனத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்திக் கொள்ளாமற் போனால் அவனுடைய நாடும் நகரமும் செல்வமும் எல்லாம் அழிந்து போகும். இந்த லங்கையும் அதனுடைய பெருஞ் செல்வமும் உன் ஒருவனுடைய குற்றத்தால் முற்றிலும் நாசமாகப் போகிறது. அறிவாய். உன்னுடைய பொறுப்பைத் தெரிந்து கொண்டு உன் துஷ்ட எண்ணத்தை விட்டு விட்டு உன்னுடைய நாட்டையும் ஜனங்களையும் ராஜதானியையும் காப்பாற்றுவாய். இல்லையேல் நீ அழிவாய். உன்னால் வருத்தப்பட்டவர்கள், 'கொடியவன் போனானே' என்று சந்தோஷப்படுவார்கள். எனக்கு நீ சொல்லும் ஐசுவரியங்களும் போகங்களும் ஒன்றும் வேண்டியதில்லை. அவற்றை வைத்து எனக்கு நீ ஆசை காட்ட வேண்டாம். பயனில்லை. ராகவனை மணந்த நான் அவனை விட்டு விலக மாட்டேன். அவன் கையைப் பிடித்த நான் வேறு ஒருவன் கையைத் தீண்ட மாட்டேன். முடியாது; சக்கரவர்த்தித் திருமகனுக்கு நான் உரியவள். வேதம் படித்த விரதம் தீர்த்த பிரம்மசாரிக்கு வேதம் எப்படி உரிமையோ, அவ்விதம் நான் ராமனுக்கு உரியவள். என்னை வேறொருவன் கண் எடுத்துப் பார்த்தல் தகாது.

''உனக்கு நல்லுபதேசம் சொல்லுகிறேன், கேள். ராமனிடம் மன்னிப்புக் கேட்டு அவன் கோபத்தினின்று தப்பித்துக் கொள். வீணாக உன் நாசத்தைத் தேடிக் கொள்ளாதே. ராமன் நிச்சயமாக மன்னிப்பான். சரணமடைந்தவர்களைக் கைவிட மாட்டான். அவனுடைய மன்னிப்பைச் சம்பாதித்துக் கொள். அதற்கு வழி தேடு. உன்னுடைய நாசத்துக்கு வழி தேட வேண்டாம். அதோ ராமனுடைய வில்லின் ஓசை கேட்கிறது. அதனின்று தப்ப மாட்டாய். யமன் பக்கத்தில் நிற்கிறான். உன்னைத் தூக்கிப் போக வந்து விட்டான். தெரிந்து கொள். ராம லக்ஷ்மணர்களுடைய பெயர் எழுதிய பாணங்கள் சீக்கிரமே வந்து இந்த லங்கையை எரித்து அழிக்கப் போகின்றன. ஜன ஸ்தானத்தில் இருந்த ராக்ஷசர்களை அடையாளத்துக்கு ஒருவன் இல்லாமல் என் வீர ராமன் ஒழித்துவிட்டதைக் கண்டு பயந்து நீ திருடனைப் போல் வந்து ராம லக்ஷ்மணர்கள் ஆசிரமத்தில் இல்லாத காலம் பார்த்துப் புகுந்து என்னைக் கொண்டு வந்தாயல்லவா? நீ அவர்கள் எதிரில் ஒரு கணம் நிற்க முடியுமா ? புலியிருக்குமிடம் சிறு நாய் போக முடியுமா? அந்த வாசனையைக் கண்டே அஞ்சித் தூர விலகும். ஈரத் தரையிலிருந்து நீரைச் சூரியன் உறிஞ்சி விடுவது போல் உன் உயிரை ராமனும் லக்ஷ்மணனும் உறிஞ்சிவிடப் போகிறார்கள். ஓடி மலையில் ஒளிந்து கொள்வாயா? அல்லது கடலில் மறைந்து கொண்டு தப்பித்துக் கொள்ளப் பார்ப்பாயா? அதுவும் முடியாது. அழிய வேண்டிய முகூர்த்தத்தில் மரம் இடி விழுந்து அழிவது போல் நீ அவர்களால் கொல்லப்படுவாய். தப்பமாட்டாய்.'' இவ்வாறு சீதை கடினமான மொழிகளோடு முடித்தாள். (தொடரும்)


காபியுடன் சுவைத்து மகிழ
பிரிட்டானியா
மாரி
பிஸ்கட்டுகள்
BRITANNIA
MARIE
BISCUITS
பிரிட்டானியா மாரி பிஸ்கட்டுகள்
மித இனிப்பானவை; மொரமொரப்
பானவை; ஊட்டச் சத்துள்ளவை.
மேலும் காபியுடன் உண்ண
மிகச் சுவையானவை.
பிரிட்டானியா என்றுமே உயர்தரம்
BBC-1003



Sunsilk cares –
with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair... revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk – more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-146

இல்லங்களில் வளர் செல்லங்கள்

நட்சத்திரக் குதிரை!

இந்திய ஹாக்கி ஃபெடரேஷன் செயலாளர் திரு தயாகிஷன் மிக்க அன்புடன் வளர்த்து வரும் அழகிய குதிரை பாங்கோ, ஒரு நாயைப் போன்று யஜமான விசுவாசமுள்ள பிராணி. வெள்ளையும் கரும் பழுப்பும் கலந்த கவர்ச்சியான மேனி. குளம்பிலிருந்து முழங்காலுக்கு மேல் சுமார் ஆறு அங்குல உயரத்துக்கு நான்கு கால்களிலும் ஒரே சீராக வெள்ளைக் காலுறை அணிந்ததுபோல் தூய வெண்மை. அதற்கு மேலே பழுப்பு நிறம். குதிரையைப் பார்க்கப் போகும் வழியில், "ஒரு நிமிஷம் பொறுங்கள்! என் செல்லப் பிராணிக்குச் சாக்லேட் வாங்கி வருகிறேன்" என்றார் தயாகிஷன். குதிரையை அணுகியதும், சாக்லேட் மீது சுற்றியுள்ள காகிதத்தைப் பிரித்து விட்டு, சாக்லேட்டை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு, "பாங்கோ! சாப்பிடு!" என்றார் தயாகிஷன். பாங்கோ வெகு நாசூக்காகச் சாக்லேட்டைப் புசித்தது. "எங்கே, ஒரு முத்தம் கொடு!" என்று முகத்தை நீட்டினார். பாங்கோ அவருக்கு நன்றியோடு முத்தம் கொடுத்தது (படம்).

"குதிரைகளிடம் பொதுவாக நம் முகத்தைக் காட்டுவது ஆபத்துத்தான். மூக்கைக் கடித்துவிடும். ஆனால் பாங்கோ அப்படியில்லை. நன்கு பழக்கியிருக்கிறேன்" என்றார் தயாகிஷன். சாதாரணப் பயிற்சி அன்று!

"இடது காலைத் தூக்கு!" என்று ஆங்கிலத்தில் கூறியவுடன் பாங்கோ தன் இடது முன்னங் காலைத் தூக்குகிறது. அப்புறம் வலது காலைத் தூக்கும்படி யஜமானர் பணித்தவுடன் அதையும் நிறைவேற்றுகிறது. 'அப்' என்று சற்று உரத்த குரலில் கூறியவுடன் இரு முன்னங் கால்களையும் உயரத் தூக்கி எழும்பி நிற்கிறது.

"இக்குதிரையை எங்கே வாங்கினீர்கள்? எப்போது?" என்று கேட்டேன்.

"மூன்று வருடங்களுக்கு முன்பு வாங்கினேன். பெங்களூர் – மைசூர் சாலையில் ஒரு வக்கீலின் எஸ்டேட்டில் இதனைப் பார்த்தேன். முன்னங் கால்கள் இரண்டையும் கயிற்றினால் இறுகப் பிணைத்திருந்தார்கள். அடங்காப் பிடாரியாக இருந்ததாம். அதன் நிறம் என்னை மிகவும் கவர்ந்தது. நான் விலைக்குக் கேட்டதும் அவர் உடனே விற்று விட்டார். மிகக் குறைந்த விலைக்குத்தான் வாங்கினேன். ஒரு வாரம் வரை அதற்கு அன்புடன் சாக்லேட் கொடுத்துக் கொடுத்துப் பழக்கினேன். இன்று ஆண்டுக்கு ஐயாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கிறான், பாங்கோ" என்றார்.


"எப்படி அவ்வளவு பெருந் தொகை சம்பாதிக்கிறது? ஒருகால் – குதிரைப் பந்தயத்தில் பங்கெடுத்துக் கொள்கிறதோ?"

"முன்பு குதிரைப் பந்தயங்களிலும் ஓடியது. இப்போது பாங்கோ ஒரு பெரிய சினிமா நட்சத்திரம்! 'பெட்ட ஹளி' என்ற கன்னடப் படத்தில் இவன் நடிப்பு மிகப் பிரமாதம். வேறு பல படங்களிலும் நடித்திருக்கிறான் பாங்கோ. சொன்னால் சொன்னபடி செய்வான். என் கைகளைக் கயிற்றால் பிணைத்தால் அவிழ்த்துவிடத் தெரியும், பாங்கோவுக்கு. வீட்டுக்குள் மாடிப் படியேறி என் அறைக்குள் வருவான். என்னோடு சேர்ந்து தேநீர் அருந்துவான். பாங்கோவின் விசுவாசமும் நன்றியுணர்வும் மிகவும் பாராட்டுக்குரியன" என்றார் தயாகிஷன்.

"இதற்கு மாதம் எவ்வளவு செலவாகும்?"

"இருநூறு ரூபாய் ஆகும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 'மதராஸ் இக்வெஸ்ட்ரியன் (குதிரைச் சவாரி) அகாடமி' என்று ஒரு நிறுவனம் தொடங்கினோம். நான்தான் அதன் செயலாளர். மாணவர்கள் பலர் இங்கு மாலை வேளைகளில் வந்து குதிரைச் சவாரி பழகுகின்றனர். பாங்கோவை இந்தக் கழகத்துக்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறேன். ஆண்டுக்கு நூறு பேர் குதிரைச் சவாரி பழக வேண்டும் என்பது அவா. குதிரையேற்றம் பயில்வோரிடமிருந்து மாதம் இருபது ரூபாய் வசூலிக்கிறோம். மிகக் குறைந்த கட்டணம் இது" என்றார் தயாகிஷன்.

"தீனி போட்டால் தின்றுவிட்டுப் படுத்துறங்கும் பிராணிகள் எல்லாமே 'செல்லப் பிராணிகள்' என்று கூற முடியாது. நம் அன்பையேற்று நம்மிடம் அன்பாகப் பழகுபவைதாம் 'செல்லப்பிராணி'களாகும். அந்த வகையில் பார்த்தால் பாங்கோ எனக்கு ஓர் உற்ற நண்பனுக்குச் சமம்" என்று பெருமிதத்துடன் கூறினார் தயாகிஷன்.



பேட்டி : 'பாணன்'


ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
CINTHOL
TOILET POWDER
வியர்வை துர்நாற்றத்-
திருந்தும், அதனுல்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 (ஹெக்ஸாக்ளோ-
ரோஃபீன்) கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
Interpub/GP/5 Tam

விளங்கும் விஞ்ஞானம்

உயரம் போதுமா?

சராசரி மனிதனின் உயரம் ஆறு அடி. பத்தடி, பன்னிரண்டு அடி உயரமுள்ளவனாக இருந்தால் பல விஷயங்களுக்குச் சௌகரியமாயிருக்கும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் அது உண்மையில் தொல்லை ஐயா, தொல்லை!

ஆறடி உயரமுள்ள மனிதன் 168 பவுண்டு எடை உள்ளவனாய் இருந்தால் பன்னிரண்டு அடி உயரம் உள்ளவனின் எடை இரு மடங்கு, அதாவது 336 பவுண்டு என்று கணக்குப் போடாதீர்கள். அது தப்புக் கணக்கு. நீங்கள் பன்னிரண்டு அடிக்கு உயர்ந்தால் உங்கள் எடை 1344 பவுண்டாக இருக்கும்! உங்கள் கால்களால் இவ்வளவு எடையைத் தாங்க முடியுமா என்பது சந்தேகம். ஒரு வேளை நிற்க முடிந்தாலும் இங்குமங்கும் நகர இயலாமல் போய் விடும்.

உடலைக் குளிர்விப்பது வியர்வையே. பன்னிரண்டு அடி உயரத்துக்கு ஏற்பத் தேவையான அளவு வியர்த்துவிடப் போதிய தோல் பரப்பு உங்கள் சரீரத்தில் இராது. ஆகவே, உஷ்ணமான சீதோஷ்ண நிலையில் உங்கள் பாடு திண்டாட்டமாகி விடும்.

யானைகளுக்கு இந்தப் பிரச்னை உண்டு. முறம் போன்ற பெரிய காதுகள் பிரச்னையைத் தீர்க்க உதவுகின்றன. ஆப்பிரிக்க யானை தலையோடு ஒட்டியிராமல் காதுகளைக் கிட்டத் தட்ட நேர் கோணத்தில் நிற்கச் செய்வதன் மூலம் குளிர்விக்கும் தோல் பிரதேசத்தைப் பதினைந்து சதம் அதிகமாக்கிக் கொள்கிறது.

நீரில் நீங்கள் வாழக் கூடுமானால் இந்தத் தொல்லை யெல்லாம் இல்லை. உங்களுடைய எடையை நீர் தாங்கிக் கொள்வதால் உடல் இலேசானது போலிருக்கும். சரீரம் பெரிதாக ஆக நீச்சலடிக்கும் திறனும் அதிகரிக்கிறது. பெரிய உடல் தண்ணீரில் சீக்கிரத்தில் சில்லிட்டுப் போகாது. இப்படிப் பல சௌகரியங்கள். ஆகவே, நூறு டன் எடையுள்ள ஒரு வகைத் திமிங்கிலம் நீரில் வாழ்வதாக இருப்பதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை.

சிலருக்குத் தோன்றலாம் — ஆறடி எதற்கு? வாமனரைப் போலிருந்தால் நன்றாயிருக்குமே என்று. மூன்றடி உயரத்தில் தேகத்தின் எடை இருபது பவுண்டுதான். உங்கள் தோற்றத்தை வைத்துப் பார்க்கும் போது உங்களுக்கு உள்ள சக்தி அபரிமிதமாகத்தான் இருக்கும். குடுகுடுவென்று ஓடுவது மிக எளிதாகத் தோன்றும். ஆனால் இலேசான குளிரைக் கூடத் தாங்க முடியாது போகும். உடம்பை உஷ்ணமாக வைத்துக் கொள்ள அடிக்கடி ஏதாவது தின்று கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில், இப்போது உங்கள் சரீரத்தில் தோலின் மேல் பரப்பு தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது. ஆகவே, உடல் வெகு சீக்கிரம் குளிர்ந்து போகிறது.

சிறிய பிராணிகளுக்கு இது பெரும் பிரச்னை. சிறு பறவைகள், சுண்டெலிகள் முதலியன அவற்றின் உடல் எடையைப்போல் இரு மடங்கு எடையுள்ள உணவைத் தினந்தோறும் உட்கொள்ள வேண்டும். கடுங்குளிர் காலம் வந்தால் சில சின்னஞ் சிறு பறவைகளுக்கு எவ்வளவு உட்கொண்டாலும் போதாதென்ற பரிதாப நிலை ஏற்பட்டு விடுகிறது.


இம்மாதிரியான சிறிய உருவத்தில் இருக்கும்போது தண்ணீரிலும் வாழ நேர்ந்துவிட்டால் ரொம்பக் கஷ்டம். பறவையின் சிறகுகளில் நீர் இறங்குவதால் அதற்குச் சில்லென்று இருப்பது ஒருபுறமிருக்க அது தூக்கிக் கொண்டு திரிய வேண்டிய நீரின் கனம் வேறு ஓர் உபத்திரவம். இதற்காக வென்றே இயற்கை அவற்றுக்கு 'பிரீன்' சுரப்பி என்ற அவயவத்தை அளித்திருக்கிறது. இதிலிருந்து வெளிப்படும் வழுவழுப்பான கொழுப்பு சிறகுகள்மீது பரவிவிட நீர், சிறகுகளில் இறங்காமல் முத்துக்களாய் உதிர்ந்து விடும்.

சிறிய உருவத்தால் ஏற்படும் நன்மைகளைப் பார்ப்போம். சிறு பறவை பெரிய பறவையை விடச் சுலபமாகப் பறக்கிறது. உருவில் சிறுத்திருந்தால் கீழே விழுந்தாலும் அதிக ஆபத்தில்லை. நூறு மாடிக் கட்டடத்தின் உச்சியிலிருந்து ஒரு சுண்டெலி கீழே விழுந்தால் அதற்கு ஒரு தீங்கும் நேராது.

இதைவிடச் சிறிதாக மிகச் சிறிய உருவத்தை எடுத்துக் கொள்வதானால் உஷ்ணமான ரத்தத்தைத் துறந்துவிடத் தயாராக வேண்டும். மீன், தவளை, பட்டுப் பூச்சி போன்றவை உஷ்ண ரத்தம் உடையவையல்ல. இவற்றின் சரீர வெப்பம் ஒரே நிலையில் இல்லாது சூழ்நிலைக்கு ஏற்ப மாறும்.

அந்த வாழ்க்கையில் ஒரே ஒரு சிக்கல் உண்டு. எல்லாக் காரியங்களையும் குளிர் காலத்தில் செய்வதைவிட ஐந்து மடங்கு வேகத்துடன் வெய்யில் காலத்தில் செய்ய வேண்டும்!

— மைக்கேல் ஆர்னல்டு



படம்: 22 மீட்டர் நீளமுள்ள இந்த இராட்சச எலும்புக் கூடு திமிங்கில இனத்தைச் சேர்ந்த கடல்வாழ் பிராணிக்குரியதாகும். ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசைச்சேர்ந்த ஃப்ராங்க்பர்டில் உள்ளபழம் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கும் இந்த எலும்புக் கூட்டைப் பாதுகாக்க அவ்வப்போது ரசாயன திரவம் பூசவேண்டியிருக்கிறது. இதற்கு ஏணி வைத்து ஏறித்தான் பணியாற்ற வேண்டியிருக்கிறது. — யூ. பி. எஸ்.

The best mills use Nirlon yarn

NIRLON YARN is the artist in the chameleon world of fashion. Fabrics made from NIRLON YARN are soft as swansdown, supple and rich-textured. In a dazzling array of prismatic colours.

JOY SILK MILLS highlight the pants scene with this colour-splashed suit in Lifebond fabric. NEW ORIENTAL MILLS present a slick little number in their expressive fabric.



மின்சார மூளை பஞ்சநாத்

“ஏண்டா, உனக்குக் களிமண்மூளையோ? நான் சொல்றது ஒண்ணும் புரிஞ்சுக்கலையே!” என்று பள்ளியில் ஆசிரியர் கோபிப்பதுண்டு. ரொம்பச் சாதாரண விஷயம், தெரிந்த விஷயம் சமயத்தில் நமக்குப் பளிச்சென்று எட்டாது. நண்பன் எடுத்துச் சொன்னதும், ‘ஆஹா! நமக்கு ஏன் இந்தச் சாதாரண விஷயம் எட்டவில்லை? நாம் ஏன் அதை நினைத்துப் பார்க்கவில்லை?’ என்று வியப்போம். நம் மூளைக்குள் ஏதோ ஒரு நரம்பு இணைப்பு அச்சமயம் சரியாக இயங்காதது தான் காரணம். நம் தலைக்குள் மிக நுண்ணிய நரம்புகள் மின்சார இணைப்புக் களைப் போல் இயங்குகின்றன. சிறிய சிறிய செய்திகளெல்லாம் அவற்றில் ஒளிந்து கொண்டிருக்கின்றன. நமக்கு ஏதாவது பிரச்னை எழும்போது சில சமயம் ‘ஷார்ட் ஸர்க்யூட்’ ஏற்பட்டுச் சரியான தகவலை வழங்காமல் தடைப்படுத்தி விடுகிறது. இவ்வித மூளைத் தடைக்கு அபரிமிதமான பயம், சந்தோஷம், துக்கம் போன்ற உணர்ச்சிகள் காரணம். இவை அறிவு அலைகளை எழவிடாமல் தடுத்து விடுகின்றன சில தருணங்களில்.

பள்ளி ஆசிரியர் வர்ணித்த களிமண் மூளை கிடக்கட்டும், ஒரு மின்சார மூளையை இப்போது சந்திப்போம்:


திரு பஞ்சநாத் என்ற நபரின் உருவில் இருக்கிறது அந்த மின்சார மூளை. இவருடைய வீடு முழுக்க ஒரே ‘ஒயர்’ மயம்; இவரது கண்டுபிடிப்புக்களான புதிய புதிய மின் கருவிகள் அறைகளை அலங்கரிக்கின்றன. நவராத்திரியின்போது கொலுப் பொம்மைகளை அலங்கரிப்பது போல் தம் மின்சார விந்தைகளைக் காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்.


சென்னை கீழ்ப்பாக்கம் சர்க்கார் குடியிருப்பு ஜே—1 இல்லத்தில் நுழைந்ததும் மின் இணைப்புப் பாப்பா முதலில் உங்களுக்கு முகமன் கூறி வரவேற்கிறது. மின்கருவிப் பெட்டி ‘பூவா தலையா’வென்று நாணயத்தைச் சுண்டிப் பார்க்கிறது. மின்சாரப் பூச்சி கொல்லி, பூச்சிகளைப் பதம் பார்க்கிறது. ‘இப்படியா, அப்படியா?’ என்று சஞ்சலப்பட்டுத் தடுமாறும் சில பேர்வழிகளுக்கு முடிவெடுக்க உதவும் எலக்ட்ரானிக் கருவியும் இங்கு இருக்கிறது. வேலிகளுக்கு மின்சாரம் பாய்ச்சி ‘ஷாக்’ கொடுக்கும் ‘ஃபென்ஸ் சார்ஜர்’ காண்கிறோம். திருடர்கள் வந்தால் அலற ஒரு மின்கருவியும் உண்டு. ரேடியோ இசைக்கேற்ப பாண்ட் மாஸ்டர் கையை ஆட்டி மகிழ்விக்கிறார். இரண்டு எலெக்ட்ரோடுகளைக் கக்கத்துக்குள் வைத்துக் கொண்டால் அங்குள்ள கருவியில் நமது இதய ஒலியைத் தெளிவாகக் கேட்கலாம். புகை பிடித்தலின் தீமையை உணர்த்த மண்டை ஓடு ஒன்று புகைத்து மூக்கால் புகை விடுகிறது—மின் இணைப்பினால்! பேய் உருவம் ஒன்று நம் கேள்விக்குப் பதில் அளிக்கிறது: பாடச் சொன்னால் பாடுகிறது. தாய்மார்கள் குழந்தைகளைத் தொட்டிலில் போட்டுவிட்டு அடுப்படி வேலைகளைக் கவனிக்கப் போய் விட்டால், தொட்டில் தானாகவே ஆடி, குழந்தையைத் தூங்க வைக்கிறது. அலிபாபா குகை, மின் இணை அணை, வானத்துக் கம்பியில் ஓடும் பெட்டி, ஒளியை வைத்து எண்ணிக்கை கணக்கிடும் அற்புதம் — இப்படிப் பலவித மின்சார விந்தைகளைக் காட்டி, அயர வைக்கிறார். இவர் அப்படியொன்றும் மின்சாரத் துறைப் பட்டதாரியும் இல்லை. பொழுதுபோக்குக்காக ஆரம்பமாகி இப்படிக் கண்காட்சியாக உருவெடுத்திருக்கிறது.

மாயவரம் மண் பிரசித்தமாயிற்றே! அங்கு பிறந்த திரு பஞ்சநாத் குத்தாலம் உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்றார். அண்ணாமலை சர்வ கலாசாலையில் இன்டர் படிக்கும்போது விடுதலைப் போர் குறுக்கிட்டது. கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி. மாயவரத்தில் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நிருபராகப் பணியாற்றி யிருக்கிறார். இவர் இப்பொழுது சென்னை போக்குவரத்து இலாகாவில் சூப்பிரண்டெண்ட்.


‘மின்சார மூளை’ பஞ்சநாத், சதா சர்வ காலமும் இந்த ஒலி, ஒளி, மின்சார இணைப்புக்களில் ஈடுபட்டுப் புதிய கருவிகளை உருவாக்குவதில் இன்பம் காண்கிறார். இவருக்கு வாய்த்த இரு புதல்வர்களும் இவரது சரியான வாரிசுகள் என்பதை நிரூபிக்கிறார்கள். சுப்பிரமணிய சிவா (புரட்சி வீரரல்ல!)— பாரத் எலெக்ட்ரானிக்ஸில் பணி புரிகிறார். அடுத்தவன் நடராஜன் இன்ஜினியரிங் கல்லூரியில் பயின்று வருகிறான். தந்தை தம் தயாரிப்புக்களில் ஓர் அறையை நிரப்பினால், மற்ற இரு அறைகளை நிரப்ப மைந்தர்கள் முழுமூச்சுடன் முன் வருகிறார்கள். இத்தனைக்கும் ‘ஹோம் டிபார்ட்மெண்ட் அப்ருவல்’ வேண்டாமா? ‘மாயவரம் மாமி’ ஓடி ஓடிப் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு உபசாரம் செய்வதிலிருந்தே அந்த அம்மாளின் அனுமதி பரிபூரணமாகக் கிட்டியிருக்கிறது என்று புரிந்து கொள்கிறோம்.

— பி. எஸ். எம்.




சிதம்பர ரகசியம்
கதை:
கோமதிசுவாமிநாதன்
சித்திரம்:
ராஜு
13


அப்படிச் சொல்லுடா ராஜாகண்ணா!
ரங்கதுரை - மோகனா தனிமையில் விடப்பட்டதும்...
மறு நாள் காலை — வாசலில்...
சின்னச் சாமியுடன் கூடவே ரங்கதுரையும் வர...
தொடரும்



அன்றாட வாழ்வோடு இணைந்தது சிமெண்ட்

தண்ணீர்த் தொட்டிகள்,
வடிகால்களுக்குத்
தேவையான குழாய்கள்,
நடைபாதைகள்,
காம்பவுண்டுச் சுவர்கள்
எல்லாம் சிமெண்டால்
கட்டப்படுகின்றன

உறுதிக்கும்
நீடித்த
உழைப்பிற்கும்
உன்னதமானது

செட்டிநாடு சிமெண்ட்

CHETTINAD BRAND

தயாரிப்பாளர்கள்:
செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் லிட்.
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1
போன்: 27256
தந்தி: "BESTCEMENT"

தொழிற்சாலை: புலியூர் (கரூர்) திருச்சி ஜில்லா.
போன்: 144. தந்தி: "CEMENT"



முப்பதாம் அத்தியாயம்

குற்றச்சாட்டு

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் உள்ளமும் உடலும் சிலநாளாகப் பெரிதும் நைந்து போயிருந்தன. புயல் அடித்த இரவு அவர் தூங்கவேயில்லை என்று இளையபிராட்டி முதன் மந்திரியிடம் கூறியது மிகைப்படுத்திக் கூறியதல்ல. அன்று பகற்பொழுதும் அவர் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டுதானிருந்தது. பிற்பகலில் சின்னப் பழுவேட்டரையர் வந்து அவருடைய சஞ்சலத்தை அதிகப்படுத்தி விட்டார். முக்கியமாக, முதன் மந்திரி அநிருத்தர்மீது அவர் பல குற்றங்களைச் சுமத்தினார். அவர் தஞ்சைக்கு வந்தது முதல் கோட்டைக்குள் ஜனங்கள் வருவது பற்றிய கட்டுத் திட்டங்கள் எல்லாம் உடைந்து விட்டன என்று கூறினார். முதன் மந்திரியைப் பார்ப்பதற்கு வருகிறோம் என்ற வியாஜத்தினால் கண்டவர்கள் எல்லாம் கோட்டைக்குள் நுழைகிறார்கள் என்றும் இதனால் சக்கரவர்த்தியின் பாதுகாப்புக்கே பங்கம் விளையலாம் என்றும் குறிப்பிட்டார். இந்த இரண்டு குற்றங்களையும் கேட்ட சக்கரவர்த்தி தமக்குத் தாமே புன்னகை செய்து கொண்டார். அவற்றை அவர் முக்கியமாகக் கருதவில்லை.

ஆனால் மேலும் காலாந்தக கண்டர் சுமத்திய குற்றங்களைப் பற்றி அவ்விதம் அலட்சியம் செய்ய முடியவில்லை. அன்று வெளியிலே இருந்து வந்த ஜனங்களுக்கும் வேளக்காரப் படையினருக்கும் வீதியில் விவாதம் முற்றிப் பெருங் கலவரமாகிவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டதென்றும், அச்சமயம் நல்ல வேளையாகத் தாம் அங்கே செல்ல நேர்ந்தபடியால் விபரீதம் எதுவும் நேரிடாமல் தடுத்து இரு சாராரையும் சமாதானப்படுத்தி அனுப்பியதாகவும் கூறினார். முதன் மந்திரி அநிருத்தர் ஒழுக்கத்தில் மிகச் சிறந்தவர் என்று நாடெல்லாம் பிரசித்தமாயிருக்க, அவருடைய நடவடிக்கை அதற்கு நேர்மாறாயிருக்கிறதென்றும், கோடிக் கரையிலிருந்து யாரோ ஒரு ஸ்திரீயைப் பலவந்தமாகக் கைப்பற்றி அவர் கொண்டு வந்திருக்கிறார் என்றும், பழுவூர் அரண்மனைப் பல்லக்கையும், ஆட்களையும் இந்தக் காரியத்துக்கு உபயோகப்படுத்தியதாகவும், எதற்காக என்பது தெரியாமல் தாம் ஆட்களையும் பல்லக்கையும் அனுப்பி விட்டதாகவும், ஏதாவது அபகீர்த்தி ஏற்பட்டால் அது பழுவூர்க் குடும்பத்தின் தலையிலே விடியும் என்றும் கூறினார். கடைசியாக, இன்னொரு சந்தேகாஸ்பதமான சம்பவத்தைப் பற்றியும் சொன்னார். ''பெரிய பழுவேட்டரையர் அரண்மனைக்கு யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி வருவதாக அறிந்து நான் கவலை கொண்டிருந்தேன். அவன் இளையபிராட்டியைப் பார்க்க வருவதாகவும் அறிந்தபடியால் நடவடிக்கை எடுக்கத் தயக்கமாக இருந்தது. ஆயினும், அந்த அரண்மனையின் மீது ஒரு கண் வைத்திருக்கும்படி ஓர் ஒற்றனை நியமித்திருந்தேன். இன்றைக்கு யாரோ ஒருவன் பொக்கிஷ மந்திரியின் அரண்மனைத் தோட்டத்தில் பின்புறமாகச் சுவர் ஏறிக் குதித்ததைப் பார்த்ததாக அந்த ஒற்றன் வந்து சொன்னான்.

உடனே அவனைக் கைப்பற்றி வர சில ஆட்களை அனுப்பினேன். அவர்கள் ஒருவனை அரண்மனைத் தோட்டத்தில் கையும் மெய்யுமாகப் பிடித்து வந்தார்கள். யார் என்று பார்த்தால், முதன் மந்திரியின் அருமைச் சீடனாகிய ஆழ்வார்க்கடியான் என்று தெரியவந்தது. 'எதற்காகச் சுவர் ஏறிக் குதித்தாய்?' என்று கேட்டதற்கு அவன் மறுமொழி சொல்ல மறுத்து விட்டான். 'முதன் மந்திரியின் கட்டளை' என்றான். சக்கரவர்த்தி! இப்படியெல்லாம் இந்த அநிருத்தப் பிரம்மராயர் செய்து வந்தால் தஞ்சைக் கோட்டைப் பாதுகாப்புக்கு நான் எப்படிப் பொறுப்பு வகிக்க முடியும்? என் தமையனாரும் ஊரில் இல்லாதபடியால் இதையெல்லாம் தங்கள் காதில் போட வேண்டியதாயிற்று!''

இவ்வாறு சின்னப் பழுவேட்டரையர் முறையிட்டது சக்கரவர்த்தியின் மனக் குழப்பத்தை அதிகமாக்கிற்று. ''ஆகட்டும்; இன்று மாலை அநிருத்தர் இங்கே வருகிறார். இதைப் பற்றியெல்லாம் விசாரிக்கிறேன். முக்கியமாக, கோடிக் கரையிலிருந்து ஒரு பெண்ணைப் பல வந்தமாகப் பிடித்து வரச் சொன்ன விஷயம் என் மனத்தைப் புண்ணாக்கியிருக்கிறது. அது உண்மைதானே தளபதி! சிறிதும் சந்தேகம் இல்லையே?'' என்று கேட்டார்.

''சந்தேகமே யில்லை. பல்லக்குத் தூக்கிகளும், அவர்களுடன் வந்த வீரர்களும் நேற்று நள்ளிரவில் என்னிடம் வந்து சொன்னார்கள். தஞ்சைக் கோட்டையை அணுகியபோது புயலில் சிக்கிக் கொண்டார்களாம். சாலையின் மரம் ஒன்று பெயர்ந்து விழுந்து சிலருக்கு அபாயம் ஏற்பட்டதாம். சிவிகை மீது விழாமல் தப்பியது பெரும் புண்ணியம்



என்று சொன்னார்கள். நல்லவேளையாக, ஸ்திரீஹத்தி தோஷம் ஏற்படாமற் போயிற்று! இதைப் பற்றி விசாரிப்பதோடு ஆழ்வார்க்கடியான் காரியத்தையும் சக்கரவர்த்தி தீர விசாரணை செய்ய வேண்டும்!'' என்று தெரிவித்துவிட்டு, காலாந்தககண்டர் சக்கரவர்த்தியிடம் விடைபெற்றுச் சென்றார். அநிருத்தர் வரும் சமயத்தில் அங்கே இருக்கச் சின்னப் பழுவேட்டரையர் விரும்பவில்லை. தாறுமாறாகச் சம்பந்தமில்லாத கேள்வி ஏதேனும் தம்மை முதன் மந்திரி கேட்டுத் திணறச் செய்யக் கூடும் என்ற அச்சம் அவர் மனத்துக்குள்ளே இருந்தது. முக்கியமாக, சக்கரவர்த்தியிடம் புயலினால் அவதிக்குள்ளான ஜனங்களுக்கு உதவுவதற்காகப் பொக்கிஷசாலையைத் திறந்து விடும்படி அநிருத்தர் தம் முன்னாலேயே உத்தரவு வாங்கிவிட்டால் பெரிய தொல்லையாகப் போய்விடும். நாளைக்குத் தமையனாரின் முன்னால் எப்படி முகத்தைக் காட்டுவது?

அநிருத்தருடைய வரவை அன்று காலையிலிருந்தே சக்கரவர்த்தி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில்தான் முதன் மந்திரி வந்தார். அவருடைய திட நெஞ்சமும் இப்போது சிறிது கலங்கிப் போயிருந்தது. அவர் எவ்வளவோ ஜாக்கிரதையுடன் போட்டிருந்த திட்டம் தவறிப் போய் விட்டது. மந்தாகினியைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைக்கும், பின்னர் சக்கரவர்த்தியைப் போய்ப் பார்க்கலாம் என்று அவர் அரண்மனைக்குப் போவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார். பிற்பகலில் ஆழ்வார்க்கடியான் வந்து பெரிதும் தர்மசங்கடமான செய்தியைத் தெரியப்படுத்தினான். ஊமை ராணி போயிருக்கக்கூடும் என்று தான் ஊகித்த குறுகிய சந்து வழியில் சென்றதாகவும், ஒரு ஸ்திரீ பழுவேட்டரையர் அரண்மனைத் தோட்டத்து மதில் சுவரில் ஏறிக் குதித்ததுபோல் தோன்றியதென்றும், அவள் ஊமை ராணியாயிருக்கக் கூடும் என்று எண்ணி அவனும் அந்த மதில் சுவரில் ஏறிக் குதித்ததாகவும், தோட்டத்தில் தேட ஆரம்பிப்பதற்குள்ளே சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் வந்து பிடித்துக் கொண்டதாகவும் கூறினான். ''அவர்களிடம் உண்மைக் காரணத்தைக் கூற முடியவில்லை, ஐயா! அதனாலேதான் தங்களுடைய பெயரைக் கூறி விடுதலை பெற்று வர வேண்டியதாயிற்று!'' என்றான்.

இந்த விவரம் முதன் மந்திரிக்குப் பெருங் கவலையை உண்டாக்கிற்று. ''இந்தத் தஞ்சாவூர்க் கோட்டையில் இவ்வளவு அரண்மனைகள் இருக்கிறபோது, பெரிய பழுவேட்டரையரின் மாளிகையிலேதானா அவள் பிரவேசிக்க வேண்டும்? பகிரங்கமாக ஆள் விட்டுத் தேடச் சொல்லக் கூட முடியாதே? ஆனாலும் பார்க்கலாம். பெரிய பழுவேட்டரையர் ஊரில் இல்லாதது ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று. அரண்மனையைச் சுற்றிலும் காவல் போட்டு வைக்கலாம். அவ்வரண்மனைக்கு உள்ளேயும் எனக்கு ஓர் ஆள் இருக்கிறான். அவனுக்கும் சொல்லியனுப்புகிறேன். இருந்தாலும் இந்த ஓடக்காரப் பெண் எவ்வளவு தர்மசங்கடத்தை உண்டாக்கி விட்டாள்?'' என்றார் முதன் மந்திரி.

''சுவாமி! ஓடக்காரப் பெண் குறுக்கிட்டிரா விட்டாலும் ஊமை ராணி தங்கள் விருப்பத்தின்



படி நடந்திருப்பாள் என்பது நிச்சயமில்லை. எப்படியாவது ஓடிப் போகத்தான் முயன்றிருப்பாள்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''எனக்கென்னவோ ஒரு நம்பிக்கை இருக்கிறது. இத்தனை தூரம் வந்தவள் சக்கரவர்த்தியைப் பார்க்காமல் போக மாட்டாள் என்று. நம்மால் முடிந்த முயற்சிகளையெல்லாம் செய்து பார்க்கலாம். ஆனால் இனிமேலும் சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்குப் போகாமல் காலம் தாழ்த்துவது முறையன்று. நீயும் அந்த ஓடக்காரப் பெண்ணை அழைத்துக் கொண்டு என்னுடன் வா. இரண்டு இளவரசர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் சக்கரவர்த்திக்குத் தெரியப்படுத்திவிட வேண்டும். சின்ன இளவரசரைக் கடலிலிருந்து கரை சேர்த்த ஓடக்காரப் பெண் நேரில் அதைப் பற்றிச் சொன்னால் சக்கரவர்த்திக்கு நம்பிக்கை உண்டாகலாம்'' என்றார்.

முதன் மந்திரி அநிருத்தரும், அவருடைய சீடனும் பூங்குழலியும் சக்கரவர்த்தியின் அரண்மனைக்குச் சென்றார்கள். அரண்மனை முகப்பிலேயே இளைய பிராட்டியும் வானதியும் அவர்களுக்காகக் காத்திருந்தார்கள். ஊமை ராணி அகப்படவில்லை என்ற செய்தி இளையபிராட்டிக்குக் கலக்கத்தை அளித்தது. அவள் பெரிய பழுவூர் மன்னரின் அரண்மனைத் தோட்டத்தில் புகுந்த செய்தி கலக்கத்தை அதிகப்படுத்தியது. இதிலிருந்து விபரீத விளைவு ஏதேனும் ஏற்படாமலிருக்க வேண்டுமே என்ற கவலையும் ஏற்பட்டது.

''ஐயா! பெரிய பழுவூர் மன்னரின் மாளிகையிலிருந்து வெளியேறுவதற்குச் சுரங்க வழி இருக்கிறதாமே? அதன் வழியாகப் போய்விட்டால்?''

முதன் மந்திரிக்கு வந்தியத் தேவனின் நினைவு வந்தது. ''தாயே! அந்த வழியைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாக இருக்குமா? எல்லாரும் வாணர் குலத்து வாலிபனைப் போன்ற அதிர்ஷ்டசாலியாயிருப்பார்களா? ஆயினும் கோட்டைக்கு வெளியிலும் ஆட்களை நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்!'' என்றார்.

பின்னர் ஆழ்வார்க்கடியானையும் பூங்குழலியையும் இளைய பிராட்டியுடன் விட்டு விட்டு முதன் மந்திரிமட்டும் சக்கரவர்த்தி படுத்திருந்த இடத்துக்குச் சென்றார். சக்கரவர்த்திக்கும் அவர் அருகில் வீற்றிருந்த வான மகாதேவிக்கும் வழக்கமான மரியாதைகளைச் செலுத்தி விட்டுப் புயலினால் சோழ நாடெங்கும் நேர்ந்துள்ள சேதங்களைப் பற்றி விசாரித்துத் தக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்ததனால் சீக்கிரமாக வர முடியவில்லை என்று சக்கரவர்த்தி சுந்தரசோழரிடம் தெரியப்படுத்திக் கொண்டார்.

அந்த ஏற்பாடுகளைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டதில் சக்கரவர்த்திக்குச் சிறிது திருப்தி உண்டாயிற்று.

''தனாதிகாரி இல்லாத சமயத்தில் நீங்களாவது இப்போது இங்கு இருந்தீர்களே! அது நல்லதாய்ப் போயிற்று! ஆனால் இது என்ன நான் கேள்விப்படுவது? கோடிக்கரையிலிருந்து யாரோ ஒரு ஸ்திரீயைப் பலவந்தமாகப் பிடித்து வந்திருக்கிறீராமே? சற்று முன் கோட்டைத் தளபதி சொன்னார். பிரம்மராயரே! இம்மாதிரி நடவடிக்கையை உம்மிடம் நான் எதிர்பார்க்கவில்லையே? ஒருவேளை இதற்கு மிக அவசியமான காரணம் ஏதேனும் இருந்திருக்கலாம். அப்படியானால் எனக்குத் தெரிவிக்கலாமல்லவா? அல்லது எல்லாருமே நான் நோயாளியாகி விட்டபடியால் என்னிடம் ஒன்றுமே சொல்ல வேண்டியதில்லை, என்னை எதுவும் கேட்க வேண்டியதுமில்லை என்று வைத்துக் கொண்டு விட்டீர்களா? அருள்மொழிவர்மன் கடலில் மூழ்காமல் தப்பிக் கரை சேர்ந்து நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் இருப்பதாகக் குந்தவை கூறுகிறாள். அதைப் பற்றிச் சந்தோஷப்படுவதா, வருத்தப் படுவதா என்று எனக்குத் தெரியவில்லை. கரை ஏறியவன் ஏன் இவ்விடத்துக்கு வரவில்லை? அவன் தப்பிப் பிழைத்துப் பத்திரமாக இருக்கும் செய்தியை ஏன் இதுவரை எனக்கு ஒருவரும் தெரியப்படுத்தவில்லை? — மந்திரி! என்னைச் சுற்றிலும் நான் அறியாமல் என்னவெல்லாமோ நடைபெறுகிறது. என்னுடைய ராஜ்யத்தில் எனக்குத் தெரியாமல் பல காரியங்கள் நிகழ்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் உயிரோடிருப்பதைக் காட்டிலும்.....'' என்று சக்கரவர்த்தி கூறி வந்தபோது அவர் தொண்டை அடைத்துக் கொண்டது; கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது.

குறுக்கே பேசக் கூடாதென்ற மரியாதையினால் இத்தனை நேரம் சும்மாயிருந்த அநிருத்தர் இப்போது குறுக்கிட்டு, ''பிரபு! நிறுத்துங்கள்! தங்களுடன் எனக்கு நட்பு ஏற்பட்டு நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு நாளும் தங்களுடைய நலனுக்கு எதிரான காரியங்கள் எதுவும் செய்யவில்லை. இனியும் செய்ய மாட்டேன். தங்களுக்கு வீண் தொல்லை கொடுக்க வேண்டாம் என்ற காரணத்துக்காக இரண்

CCM's

டூ பை டூ
உங்களதே!

மிர்ராபோ

அழகுக்கு அழகு ஊட்டும் கசங்காத
2 x 2 ஃபுல் வாயில்கள். சாதா,
தளிர்வண்ணம், கெட்டிவண்ணங்களில்
ரவிக்கைத் துணிகள் உள்ளன.

மற்றும் ஸ்டேலாங்கர், ஸ்ட்ரேஞ்சர் பாப்ளின் ஷர்டிங்குகளும் கிடைக்கும்.

தி கோயம்பத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட்

கோயம்பத்தூர்



விநியோகிப்பவர்கள்: வெங்கடேஷ் வஸ்திராலயா, கோயம்பத்தூர்-2 & சென்னை-1

CCM ரீடெய்ல் ஷோரூம்கள்:
17/93, ஒப்பணக்காரத் தெரு
கோயமுத்தூர்-1
387, மெயின் ரோடு, கோவில்பட்டி

பிரத்யேக ரீடெய்ல் ஷாப்:
SP. S. S. க்ளாத் ஷாப்
11-12, கிழக்கு சித்திரை வீதி
மதுரை-1

டொரு விஷயங்களைத் தங்களிடம் சொல்லாமல் விட்டிருக்கலாம். அது குற்றமாயிருந்தால் மன்னித்துவிடுங்கள். இப்போது தாங்கள் கேட்டவற்றுக்கெல்லாம் மறுமொழி சொல்கிறேன். கருணை கூர்ந்து அமைதியாயிருக்க வேண்டும்'' என்று இரக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

''முதன் மந்திரி! இந்த ஜன்மத்தில் எனக்கு இனி மன நிம்மதி இல்லை. அடுத்த பிறவியிலாவது மன அமைதி கிட்டுமா என்று தெரியாது. என் அருமை மக்களும் என் ஆருயிர் நண்பராகிய முதன் மந்திரியும் எனக்கு எதிராகச் சதி செய்யும்போது...''

''பிரபு! தங்களுக்கு எதிராகச் சதி செய்பவர்கள் யார் என்பதைச் சீக்கிரத்தில் அறிந்து கொள்வீர்கள். அந்தப் பாதகத்துக்கு நான் உடந்தைப்பட்டவன் அல்ல. இந்த முதன்மந்திரி பதவியை இப்போது நான் பெயருக்காகவே வைத்துக் கொண்டிருக்கிறேன். பெரிய பழுவேட்டரையரிடமே இந்தப் பதவியைக் கொடுத்து விடுகிறேன் என்று முன்னமே பல தடவை சொல்லியிருக்கிறேன். இப்போதும் அதற்குச் சித்தமாயிருக்கிறேன். என்பேரில் சிறிதளவேனும் தங்களுக்கு அதிருப்தி இருந்தால்....''

''ஆம், முதன் மந்திரி, ஆம்! எந்த நேரத்திலும் என்னைக் கைவிட்டுப்போய் விட நீங்கள் எல்லோருமே சித்தமாயிருக்கிறீர்கள். என் மூச்சுப் போகும் வரையில் என்னுடன் இருந்து என்னுடன் சாகப் போகிறவள் இந்த மலையமான் மகள் ஒருத்திதான். நான் செய்திருக்கும் எத்தனையோ பாவங்களுக்கு மத்தியில் ஏதோ புண்ணியமும் செய்திருக்கிறேன். ஆகையினால்தான் இவளை என் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றேன்!'' என்றார் சக்கரவர்த்தி.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சக்கரவர்த்திக்கு அருகில் கட்டிலில் வீற்றிருந்த வான மகாதேவிக்கு விம்மலுடன் அழுகை வந்து விட்டது. அவள் உடனே எழுந்து அடுத்த அறைக்குச் சென்றாள்.

''மன்னர் மன்னா! மலையமான் மகளைப் பற்றித் தாங்கள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம். அவருடைய திருவயிற்றில் பிறந்த மக்களும் தங்களிடம் இணையற்ற பக்தி விசுவாசம் கொண்டிருக்கிறார்கள்...''


''ஆனாலும் என் வார்த்தையை அவர்கள் மதிப்பதில்லை. என் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில்லை. எனக்குத் தெரியாமல் ஏதேதோ செய்கிறார்கள். நீரும் அவர்களோடு சேர்ந்து கொள்கிறீர்! அருள்மொழி வர்மன் கடலிலிருந்து தப்பிப் பிழைத்து நாகப்பட்டினம் புத்தவிஹாரத்தில் இருப்பது உமக்கு முன்னமே தெரியும் அல்லவா? ஏன் என்னிடம் சொல்லவில்லை?''

''மன்னிக்க வேண்டும் பிரபு! அந்த விவரம் நேற்று வரையில் எனக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்க வில்லை. இளவரசரின் உயிருக்கு ஆபத்து நேரிட்டிராது என்று மட்டும் உறுதியாயிருந்தேன். அவர் பிறந்த வேளையைக் குறித்துச் சோதிடக்காரர்கள் எல்லோரும் கூறியிருப்பது பொய்யாகிவிடாதல்லவா ?''


''முதன் மந்திரி ! சோதிட சாஸ்திரத்தினால் நேரக் கூடிய தீங்குகளுக்கு அளவேயில்லை. இந்த ராஜ்யத்திலிருந்து சோதிடக்காரர்கள் எல்லோரையுமே அப்புறப்படுத்திவிட எண்ணுகிறேன். அருள்மொழியின் ஜாதகத்தைக் குறித்துச் சோதிடக்காரர்கள் கூறியிருப்பதை வைத்துக் கொண்டுதான் நான் உயிரோடிருக்கும் போதே அவனைச் சிம்மாதனத்தில் ஏற்றி விடுவதற்கு எல்லாரும் பிரயத்தனப்படுகிறார்கள். நீரும் அவர்களைச் சேர்ந்தவர்தானே?''

''சத்தியமாக இல்லை பிரபு! அதற்கு மாறாக, சின்ன இளவரசர் சிறிது காலத்துக்கு இந்தச் சோழ நாட்டுக்குள் வராமலிருந்தாலே நல்லது என்று எண்ணினேன். இலங்கைக்குப் போயிருந்தபோது இளவரசரிடம் அவ்விதமே சொல்லி விட்டு வந்தேன். ஆனால் நான் இப்பால் வந்தவுடன் பழுவேட்டரையர்களின் ஆட்கள் இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வர இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். தாங்களும் அதற்குச் சம்மதம் அளித்திருக்கிறீர்கள். இந்தச் செய்தி நாடு நகரமெல்லாம் பரவியிருக்கிறபடியால் ஜனங்கள் பழுவேட்டரையர்கள்மீது ஒரே கோபமாயிருக்கிறார்கள். அவர்கள்தான் இளவரசரை ஏற்றி வந்த கப்பலை வேண்டுமென்று கடலில் மூழ்கடித்து விட்டதாக ஜனங்களிடையில் பேச்சாயிருக்கிறது.''

''பொய், முதன் மந்திரி! பொய்! எல்லாம் முழுப் பொய்! பார்த்திபேந்திர பல்லவன் எல்லாம் என்னிடம் கூறிவிட்டான். பழுவேட்டரையர்கள் அனுப்பிய கப்பலில் இளவரசன் வரவில்லை. பார்த்திபேந்திரனுடைய கப்பலில் வந்தான். வழியில் வேண்டுமென்று கடலில் குதித்தான். இன்னொரு எரிந்த கப்பலில் இருந்த பாரோ ஒருவனைக் காப்பாற்றுவதற்காக என்று சொல்லி, பார்த்திபேந்திரன் தடுத்தும் கேளாமல், கொந்தளித்த கடலில் குதித்தான். இப்போது யோசிக்கும்போது எல்லாமே



விழாக்கால வாழ்த்துக்கள்
தாவண்கெரே
வாயில்கள்
டெரீன் காட்டன்
சூப்பர்:பைன் வேட்டிகள்



பொய் என்றும், என்னை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி என்றும் தோன்றுகிறது. இந்தச் சூழ்ச்சியில் குந்தவையும் சம்பந்தப்பட்டவள் என்பதை நினைக்கும்போதுதான் எனக்கு வேதனை தாங்கவில்லை. இந்த உலகமே எனக்கு எதிராகப் போனாலும் குந்தவை என்னுடன் இருப்பாள் என்று எண்ணியிருந்தேன். ஒரு தகப்பன் தன் மகளிடம் சொல்லத் தயங்கக் கூடிய வரலாறுகளையெல்லாம் சொன்னேன்....''

'' அரசர்க்கரசே ! இளையபிராட்டி தங்களுக்கு எதிராகச் சதி செய்வதாய் உலகமே சொன்னாலும் நான் நம்பமாட்டேன்; தாங்களும் நம்பக் கூடாது.. இளைய பிராட்டி ஒரு விஷயத்தைத் தங்களிடம் சொல்லவில்லை என்றால், அதற்குக் காரணம் அவசியம் இருக்க வேண்டும். சின்ன இளவரசர் தம் சிநேகிதனைக் காப்பாற்றுவதற்காகக் கடலில் குதித்ததில் பொய் ஒன்றுமில்லை. இளவரசரையும் அவருடைய சிநேகிதரையும் கடலில் இருந்து காப்பாற்றிக் கரை சேர்த்த ஓடக்காரப் பெண் இதோ அடுத்த அறையில் இருக்கிறாள். இலங்கையில் நடந்தவற்றையும் நேரில் பார்த்து அறிந்தவள். அரசே! அவளைக் கூப்பிடட்டுமா?'' என்றார் அநிருத்தர்.

சக்கரவர்த்தி மிக்க ஆவலுடன் ''அப்படியா? உடனே அவளை அழையுங்கள். முதன் மந்திரி!... கோடிக்கரையிலிருந்து நீர் பலவந்தமாகப் பிடித்து வரச் சொன்ன பெண் அவள்தானா?...'' என்றார்.

''பழுவேட்டரையரின் பல்லக்கில் வந்த பெண்தான் அடுத்த அறையில் காத்திருக்கிறாள். இதோ அழைக்கிறேன்'' என்று அநிருத்தர் கூறிக் கையைத் தட்டியதும், பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் உள்ளே வந்தார்கள்.

முப்பத்தொன்றும் அத்தியாயம்

முன்மாலைக் கனவு

பூங்குழலியைச் சக்கரவர்த்தி உற்றுப் பார்த்துவிட்டு, ''இந்தப் பெண்ணை நான் இதுவரை பார்த்ததில்லையல்லவா? ஆனால் முகஜாடை சற்றுத் தெரிந்த மாதிரி இருக்கிறது. பிரம்மராயரே! இவள் யார்?'' என்று கேட்டார்.

''இவள் கோடிக்கரைத் தியாகவிடங்கர் மகள். பெயர் பூங்குழலி!''

''ஆகா! அதுதான் காரணம்!''என்று சக்கரவர்த்தி கூறினார். பிறகு வாய்க்குள்ளே ''இவள் அத்தையின் முகஜாடை கொஞ்சம் இருக்கிறது. ஆனால் அவளைப் போல் இல்லை. ரொம்ப வித்தியாசம் இருக்கிறது!'' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

அவர் முணுமுணுத்தது பூங்குழலியின் காதில் இலேசாக விழுந்தது. அதுவரையில் சக்கரவர்த்தியைப் பூங்குழலி பார்த்ததில்லை. அவர் அழகில் மன்மதனையும் மிஞ்சியவர் என்று கேள்விப்பட்டிருந்தாள். இளவரசரைப் பெற்ற தந்தை அப்படித்தான் இருக்கவேண்டும் என்றும் எண்ணி யிருந்தாள். இப்போது உடல் நோயினாலும் மன நோயினாலும் விகாரப்பட்டுத் தோன்றிய சக்கரவர்த்தியின் உருவத்தைப் பார்த்துத் திகைத்துப் போனாள். தன் அத்தையைக் கைவிட்டது பற்றிச் சக்கரவர்த்தியிடம் சண்டை பிடிக்க வேண்டுமென்று எண்ணி யிருந்ததை நினைத்து வெட்கினாள். பயத்தினாலும் வியப்பினாலும் கூச்சத்தினாலும் சக்கரவர்த்தியைத் தரிசித்தவுடனே வணக்கம் கூறுவதற்குக் கூட மறந்து நின்றாள்.

''பெண்ணே! உன் தந்தை தியாகவிடங்கர் சுகமா?'' என்று சக்கரவர்த்தி அவளைப் பார்த்துக் கேட்டார்.

அப்போதுதான் பூங்குழலிக்குச் சுயநினைவு வந்தது. இலங்கை முதல் கிருஷ்ணை நதி வரையில் ஒரு குடை நிழலில் ஆளும் சக்கரவர்த்தியின் சந்நிதியில் தான் நிற்பதை உணர்ந்தாள். உடனே தரையில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு எழுந்து கைகூப்பி வணக்கத்துடன் நின்றாள்.

சுந்தர சோழர் அநிருத்தரைப் பார்த்து, ''இந்தப் பெண்ணுக்குப் பேச வரும் அல்லவா? ஒருகால் இவள் அத்தையைப் போல் இவளும் ஊமையா?'' என்று கேட்டபோது அவர் முகம் மனவேதனையினால் சுருங்கியது.

''சக்கரவர்த்தி! இந்தப் பெண்ணுக்குப் பேசத் தெரியும். ஒன்பது ஸ்திரீகள் பேசக்கூடியதை இவள் ஒருத்தியே பேசிவிடுவாள். தங்களைத் தரிசித்த அதிர்ச்சியினால் திகைத்துப் போயிருக்கிறாள்'' என்றார் அநிருத்தர்.

''ஆமாம்; என்னைப் பார்த்தால் எல்லோருமே மௌனமாகி நின்று விடுகிறார்கள். என்னிடம் ஒருவரும் ஒன்றும் சொல்வதில்லை!'' என்றார் சக்கரவர்த்தி.

மறுபடியும் பூங்குழலியைப் பார்த்து, "பெண்ணே! இளவரசன் அருள்மொழிவர்மனை நீ கொந்தளிக்க கடலிலிருந்து காப்பாற்றினாய் என்று முதன் மந்திரி சொல்கிறார். அது உண்மையா?" என்று சுந்தர சோழர் கேட்டார்.

பூங்குழலி தயங்கித் தயங்கி, "ஆம், பிரபு!... அது குற்றமாக இருந்தால்.." என்றாள்.

சக்கரவர்த்தி சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலி பயங்கரமாகத் தொனித்தது.

"பிரம்மராயரே! இந்தப் பெண் சொல்லுவதைக் கேளுங்கள்! 'அது குற்றமாயிருந்தால்' என்கிறாள். இளவரசன் உயிரை இவள் காப்பாற்றியது 'குற்றமாயிருந்தால்' என்கிறாள். என் மகன் கடலில் மூழ்கிச் செத்திருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன் போலிருக்கிறது. அப்படிப்பட்ட ராட்சதன் நான் என்று இவளிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். முதன் மந்திரி! நாட்டு மக்கள் எல்லோரும் இப்படித்தான் என்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறார்களா?" என்று கேட்டார் சுந்தர சோழர்.

"பிரபு! இவள் பயத்தினால் ஏதோ சொல்லி விட்டாள். அதைப் பொருட்படுத்த வேண்டாம். பெண்ணே! இளவரசரை நீ காப்பாற்றியதற்காக இந்தச் சோழ நாடே உனக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறது. சக்கரவர்த்தியும் அளவில்லாத மகிழ்ச்சியடைந்திருக்கிறார். அதற்காக நீ என்ன பரிசு வேண்டுமோ, அதைக் கேட்டுப் பெறலாம். இப்போது நடந்ததையெல்லாம் சக்கரவர்த்தியிடம் விவரமாகக் கூறு! பயப்படாமல் சொல்லு!" என்றார்.

"முதலில் ஒரு விஷயத்தை இந்தப் பெண் சொல்லட்டும். இளவரசனைக் கடலிலிருந்து காப்பாற்றியதாகச் சொல்லுகிறாளே? அவன் இளவரசன் தான் என்பது இவளுக்கு எப்படித் தெரியும்? முன்னம் பார்த்ததுண்டா?" என்றார் சக்கரவர்த்தி.

"ஆம், பிரபு! முன்னம் ஈழ நாட்டுக்கு வீரர்களுடன் இளவரசர் கப்பல் ஏறிய போது சில தடவை பார்த்திருக்கிறேன். ஒருமுறை இளவரசர் என்னைச் 'சமுத்திர குமாரி' என்று அழைத்ததும் உண்டு!" என்று கூறினாள் பூங்குழலி.

"ஆகா! இந்தப் பெண்ணுக்கு இப்போதுதான் பேச்சு வருகிறது!" என்றார் சுந்தர சோழச் சக்கரவர்த்தி.

பின்னர், முதன் மந்திரி அடிக்கடி தூண்டிக் கேள்வி கேட்டதன் பேரில் பூங்குழலி வந்தியத் தேவனை இலங்கைக்கு அழைத்துச் சென்றதிலிருந்து இளவரசரை நாகைப்பட்டினத்தில் கொண்டு போய் விட்டது வரையில் எல்லாவற்றையும் கூறினாள். ஆனால் அநிருத்தர் எச்சரிக்கை செய்திருந்தபடியால் மந்தாகினியைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்லவில்லை.

எல்லாம் கேட்ட பின்னர் சக்கரவர்த்தி, "பெண்ணே! சோழ குலத்துக்கு இணையில்லாத உதவி செய்திருக்கிறாய். அதற்கு ஈடாக உனக்குச் செய்யக்கூடியது ஒன்றுமே இல்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன், சொல்! கோடிக் கரையில் இளவரசனைக் கரை சேர்த்த பிறகு இங்கே ஏன் அழைத்து வரவில்லை? ஏன் நாகைப்பட்டினத்துக்கு அழைத்துப் போனாய்?" என்றார்.

"சுவாமி! இளவரசர் கொடிய சுரத்தினால் நினைவு இழந்திருந்தார். நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் நல்ல வைத்தியர்கள் இருக்கிறார்கள் என்று அங்கே அழைத்துப் போனோம். பிக்ஷுக்கள் இளவரசரிடம் மிக்க பக்தி உள்ளவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். இளவரசரை அந்த நிலையில் ஓடத்தில் தான் ஏற்றிப் போகலாமே தவிரக் குதிரை மேலோ, வண்டியிலோ ஏற்றி அனுப்ப முடிந்திராது..."

"அச்சமயம் கோடிக்கரையில் பழுவேட்டரையர் இருந்தாரே. அவரிடம் ஏன் தெரிவிக்கவில்லை?"

பூங்குழலி சற்றுத் தயங்கி விட்டுப் பின்னர் கம்பீரமான குரலில், "சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் இளவரசருக்கு விரோதி என்று நாடெல்லாம் அறிந்திருக்கிறது. அப்படியிருக்க, இளவரசரைப் பழுவேட்டரையரிடம் ஒப்புவிக்க எவ்விதம் எனக்கு மனம் துணியும்?" என்றாள்.

"ஆம், ஆம். என் புதல்வர்களுக்குப் பழுவேட்டரையர்கள் மட்டுமா விரோதிகள்? நான்கூடத்தான் விரோதி. உலகம் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறது. அது போகட்டும்! முதன் மந்திரி! நேற்று இங்கு அடித்த புயல் நாகைப்பட்டினத்தில் இன்னும் கடுமையாக இருந்திருக்குமே! இளவரசனுக்கு மறுபடியும் ஏதேனும் தீங்கு நேரிடாமலிருக்க வேண்டுமே என்று என் நெஞ்சம் துடிக்கிறது."

"பிரபு! சோழ நாடு அதிர்ஷ்டம் செய்த நாடு. இப்போது இந்நாட்டுக்கு மகத்தான நல்ல யோகம். ஆகையால்..."

"சோழ நாடு அதிர்ஷ்டம் செய்த நாடுதான்; ஆனால் நான் துரதிர்ஷ்டசாலியாயிற்றே. பிரம்மராயரே! நான் கண்ணை மூடுவதற்குள் என் புதல்வர்


ரூ. 50,000
வெல்க
பரிசு ரூ. 20,000
பரிசு ரூ. 5,000
பரிசு ரூ. 2,500
AFGHAN SNOW
ஆப்கான் ஸ்னோ

களை ஒரு தடவை பார்க்க விரும்புகிறேன்...''

''ஐயா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். இத்தகைய புதல்வர்களையும் புதல்வியையும் பெற்ற தங்களைப் போன்ற பாக்கியசாலி யார்? இதோ இன்றைக்கே ஆட்களை அனுப்பி வைக்கிறேன். இளவரசரைப் பத்திரமாய் அழைத்து வருவதற்கு என் சிடன் திருமலையையும் கூட அனுப்புகிறேன்!'' என்றார் முதன் மந்திரி.

அப்போதுதான் சக்கரவர்த்தி ஆழ்வார்க்கடியான் மீது தம் பார்வையைச் செலுத்தினார்.

''ஆகா! இவன் இத்தனை நேரமும் இங்கே நிற்கிறானா? சின்னப் பழுவேட்டரையர் இவனைப் பற்றித்தானே சொன்னார்? பழுவூர் அரண்மனை மதிலில் ஏறிக் குதித்தவன் இவன்தானே?''

''பிரபு! அதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது. அதைப் பற்றி நாளைக்குத் தெரியப்படுத்த அனுமதி கொடுங்கள். ஏற்கனவே மிக்கக் களைப்படைந்துவிட்டீர்கள்!'' என்றார் முதன் மந்திரி.

இச்சமயத்தில் மலையமான் மகளும் குந்தவையும் வானதியும் சக்கரவர்த்தியின் அறைக்குள்ளே வந்தார்கள்.

''முதன் மந்திரி! இன்றைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். சக்கரவர்த்திக்கு அதிகக் களைப்பு உண்டாக்கக் கூடாது என்று வைத்தியர்கள் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருக்கிறார்கள்!'' என்று மகாராணி கூறினாள்.

பின்னர், ''இந்தப் பெண் இனிமையாகப் பாடுவாளாம். ஒரு தேவாரப் பாடல் பாடச் சொல்லுங்கள். சக்கரவர்த்திக்குக் கானம் மிகவும் பிடிக்கும்'' என்றாள்.

''ஆகட்டும் தாயே! என் சிடன் கூட ஆழ்வார் பாசுரங்களை நன்றாகப் பாடுவான். அவனையும் பாடச் சொல்லுகிறேன்!'' என்றார் முதன் மந்திரி.

பூங்குழலி, ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்ற அப்பர் தேவாரத்தைப் பாடினாள். ஆழ்வார்க்கடியான் ''திருக் கண்டேன் பொன் மேனி கண்டேன்'' என்ற பாசுரத்தைப் பாடினான்.

பாடல் ஆரம்பித்ததும் சுந்தரசோழர் கண்களை மூடிக் கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் முகத்தில் சாந்தியும் நிம்மதியும் காணப்பட்டன. மூச்சு நிதானமாகவும் ஒரே மாதிரியாகவும் வந்தது. நல்ல நித்திரையில் ஆழ்ந்துவிட்டார் எனத் தெரிந்தது.

இருட்டுகிற சமயமாகிவிட்டபடியால் தாதிப் பெண் விளக்கேற்றிக்கொண்டு வந்து வைத்தாள்.

முதன் மந்திரி உள்ளிட்ட அனைவரும் அவ்வறையிலிருந்து வெளியேறினார்கள்.

மலையமான் மகள் மட்டும் சிறிது நேரம் சக்கரவர்த்தியின் அருகில் இருந்தாள். அடுத்த அறையின் வாசற்படியிலிருந்து குந்தவை அவளைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்யவே, அவளும் எழுந்து சென்றாள். பின்னர் அந்த அறையில் மௌனம் குடிகொண்டது.

அறிவுக்குப் பணிந்தான்!

அராபிய சுல்தான் ஒருவன் கவிஞர்களின் கவிதைகளைக் கேட்டு, அவற்றை அப்படியே தானே திருப்பிச் சொல்லியோ, அல்லது தன் ஆண் அடிமை, பெண் அடிமைகளைத் திரும்பச் சொல்லச் சொல்லியோ கவிதை பழசென்று கூறிக் கவிஞர்களை வெறுங் கையுடன் அனுப்பிக் கொண்டிருந்தான். மிகப் பிரபல கவிஞர் அல் அஸ்மாஃபி இதைக் கேள்விப்பட்டுஅரசனுக்குப்பாடம்கற்பிக்க விரும்பினார்.

கஷ்டமான வார்த்தைகள் அடங்கிய கவிதையைச் சொன்னார் அந்தக் கவிஞர் அஸ்மாஃபி. அரசனாலும் திரும்பச் சொல்ல முடியவில்லை. ஆண் பெண் அடிமைகளும் திணறினர்.

''கவிஞரே! உம்முடையது உண்மைக் கவிதை என்று உணர்ந்தோம். ஆகவே, நீங்கள் எழுதினதைச் சமர்ப்பித்து, அதன் எடைக்குத் தகுந்த பொருளைப் பெற்றுச் செல்லுங்கள்!'' என்று சொன்னான் சுல்தான்.

''அரசே! உங்கள் சேவகர்களில் ஒருவரை அதை எடுத்து வர அனுப்புங்கள்!'' என்று கோரினார் கவிஞர்.

''என்ன தூக்கி வரவா? ஒரு தாளில் எழுதியதைத் தூக்கிவர ஆட்களா?'' என்று நகைத்தான் சுல்தான்.

''சுல்தான் அவர்களே! நான் இந்தக் கவிதையை இயற்றிய போது தாள் கிட்டவில்லை. என் தந்தை விட்டுச் சென்ற பளிங்குக் கல் ஒன்று இருந்தது. அதில் கவிதையைச் செதுக்கி விட்டேன். அந்தப் பளிங்குக் கல்லைத் தூக்கி வரத்தான் ஆட்கள் கேட்கிறேன்!''

அதைக் கொண்டு வரச் செய்தான் சுல்தான். ஒட்டகத்தின் முதுகில் ஒரு பெரிய பிரம்மாண்டமான பளிங்குக் கல் வந்து இறங்கியது. சுல்தான் தன் வாக்குறுதியைக் காப்பாற்றத் தன் பொக்கிஷ அறையையே காலி செய்யும்படி ஆயிற்று. சுல்தான் அன்றிலிருந்து கவிஞர்களிடம் காட்டிய தந்திரத்தை விட்டு, மற்ற மன்னர்களைப் போல் பரிசளித்து அனுப்பினான்.

ஓர் அராபியக் கதை: — குண்டுமணி



சுந்தர சோழர் மூச்சு விடும் சத்தம் மட்டும் இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

*　　　*　　　*

முதல் நாளிரவு சற்றும் தூங்காத காரணத்தினால் கலைத்துச் சோர்ந்திருந்தபடியினாலும், பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் பாடிய தமிழ்ப் பாசுரங்களின் இனிமையினாலும் சுந்தர சோழர் அந்த முன் மாலை நேரத்தில் நித்திரையில் ஆழ்ந்தாரென்றாலும் அவருடைய துயில் நினைவற்ற அமைதி குடி கொண்ட துயிலாக இல்லை. பழைய நினைவுகளும் புதிய நினைவுகளும், உண்மை நிகழ்ச்சிகளும் உள்ளக் கற்பனைகளும் கனவுகளாகி உருவெடுத்து அவரை விதம்விதமான விசித்திர அனுபவங்களுக்கு உள்ளாக்கின.

*　　　*　　　*

அமைதி குடி கொண்டிருந்த நீலக் கடலில் அவரும் பூங்குழலியும் படகில் போய்க் கொண்டிருந்தார்கள். பூங்குழலி படகைத் தள்ளிக் கொண்டே கடலின் ஓங்கார சுருதிக்கு இசைய ஒரு கீதம் பாடிக் கொண்டிருந்தாள்.

''சோர்வு கொள்ளாதே மனமே-உனது
ஆர்வ மெல்லாம் ஒருநாள் பூரணமாகும்
கார்இருள் மூடிய நீள்இரவின் பின்னர்
காலை மலர்தலும் கண்டனை அன்றோ
தாரணி சிலிர்க்கும் தாமரை சிரிக்கும்
அலிகுலம் களிக்கும் அருணனும்
உதிப்பான்!''

இந்தக் கீதத்தைக் கேட்டுச் சுந்தர சோழர் புளகாங்கிதம் அடைந்தார். அவருடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த சோர்வு நீங்கி உற்சாகம் ததும்பியது. ''இன்னும் பாடு! இன்னும் பாடு!'' என்று பூங்குழலியைத் தூண்டிக் கொண்டிருந்தார். ஆழ்கடலில் மிதந்து படகு போய்க் கொண்டேயிருந்தது.

திடீரென்று இருள் சூழ்ந்தது. பெருங் காற்று அடிக்கத் தொடங்கியது. சற்று முன் அமைதியாக இருந்த கடலில் மலை மலையாக அலைகள் எழுந்து விழுந்தன. தொட்டில் ஆடுவது போல் சற்று முன்னால் ஆடிக் கொண்டிருந்த படகு இப்போது மேக மண்டலத்தை எட்டியும் அதல பாதாளத்தில் விழுந்தும் தத்தளித்தது. படகில் இருந்த பாய் மரங்களின் பாய்கள் சுக்குநூறாகக் கிழிந்து காற்றில் அடித்துக் கொண்டு போகப் பட்டன. ஆயினும் படகு மட்டும் கவிழாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்தது. அப்போதெல்லாம்

யாத்திரை

ஓடி நடந்து
மலையேறி
கைலாசம் போவதிலே
சிரமந்தான் மிச்சம்
பலனில்லை.
இங்கிருக்கும் ஏழைமக்களை
அங்கும் தேடி
உடன் கொண்டு வராவிட்டால்
கைலாசமும்
கூவமும் ஒன்றே.
சிரமமே மிச்சம்
பலனில்லை.



- கே. எஸ். ராமமூர்த்தி

பூங்குழலியின் படகு விடும் திறத்தைச் சுந்தர சோழச் சக்கரவர்த்தி வியந்து மகிழ்ந்து கொண்டிருந்தார்.

காற்று வந்த வேகத்தைப் போலவே சட்டென்று நின்றது. கடலின் கொந்தளிப்பு வர வரக் குறைந்தது. மீண்டும் பழையபடி அமைதி ஏற்பட்டது. கீழ்த் திசையில் வான முகட்டில் அருணோதயத்துக்கு அறிகுறி தென்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் தங்கச் சூரியன் உதயமானான். கடலின் நீரும் பொன் வண்ணம் பெற்றுத் தகதகாமயமாகத் திகழ்ந்தது. சற்றுத் தூரத்தில் பசுமையான தென்னந் தோப்புகள் சூழ்ந்த தீவுகள் சில தென்பட்டன. அத் தீவுகளிலிருந்து புள்ளினங்கள் மதுர மதுரமான குரல்களில் இசைத்த கீதங்கள் எழுந்தன. ஈழ நாட்டின் கரையோரமுள்ள தீவுகள் அவை என்பதைச் சுந்தர சோழர் உணர்ந்து கொண்டார். அவற்றில் ஒரு தீவிலேதான் முந்தைப் பிறவியில் அவர் மந்தாகினியைச் சந்தித்தார் என்பது நினைவு வந்தது.

அந்தத் தீவின் பேரில் பார்வையைச் செலுத்திக் கொண்டே, ''பூங்குழலி! கடைசியில் என்னைச் சொர்க்க லோகத்துக்கே கொண்டு வந்து சேர்த்துவிட்டாயல்லவா? உனக்கு நான் எவ்விதத்தில் நன்றி செலுத்தப் போகிறேன்?'' என்றார். பூங்குழலி மறுமொழி சொல்லாதது கண்டு அவள் பக்கம் திரும்பிப் பார்த்தார். அப்படியே ஸ்தம்பிதமாகி விட்டார். ஏனெனில், படகில் இன்னொரு பக்கத்தில் இருந்தவள் பூங்குழலி இல்லை. அவள் மந்தாகினி! முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எப்படி இருந்தாளோ, அப்படியே இன்றுமிருந்தாள்!

சில நிமிஷ நேரம் திகைத்திருந்து விட்டு, ''மந்தாகினி! நீதானா? உண்மையாக நீதானா? பூங்குழலி மாதிரி மாற்றுருவம் கொண்டு என்னை அழைத்து வந்தவள் நீதானா?'' என்றார். தாம் பேசுவது அவளுக்குக் காது கேளாது என்பது நினைவு வந்தது. ஆயினும்

உதடுகளின் அசைவிலிருந்து அவர் சொல்வது என்ன என்பதை அறிந்து கொண்டவள் போல மந்தாகினி புன்னகை புரிவதைக் கண்டார்.

அவள் அருகில் நெருங்கிச் செல்வதற்காக எழுந்து செல்ல முயன்றார். ஆனால் அவரால் எழுந்திருக்க முடியவில்லை. தம் கால்கள் பயனற்றுப் போயின என்பது நினைவு வந்தது.

''மந்தாகினி! நான் நோயாளியாகப் போய்விட்டேன். உன்னிடம் என்னால் வர முடியவில்லை. நீதான் என் அருகில் வரவேண்டும். இதோ பார், மந்தாகினி இனி ஒரு தடவை மூன்று உலகத்துக்கும் சக்கரவர்த்தியாக முடிசூட்டுவதாய் என்னை யாரேனும் அழைத்தாலும் நான் உன்னை விட்டுப் போக மாட்டேன். இந்த ஈழ நாட்டுக்கு அருகிலுள்ள தீவுகளுக்கு நாம் போக வேண்டாம். இங்கே யாராவது வந்து கொண்டேயிருப்பார்கள். படகை நடுக் கடலில் விடு! வெகு தூரம், தொலை தூரம், ஏழு கடல்களையும் தாண்டிச் சென்று, அப்பால் உள்ள திவாந்தரத்துக்கு நாம் போய் விடுவோம்!'' என்றார் சுந்தர சோழர். அவர் கூறியதை யெல்லாம் தெரிந்து கொண்டவள் போல் மந்தாகினி புன்னகை புரிந்தாள்.

* * *

காவேரி நதியில் இராஜ ஹம்ஸத்தைப் போல் அலங்கரித்த சிங்காரப் படகில் சுந்தர சோழ சக்கரவர்த்தியும் அவருடைய பட்டத்து ராணியும் குழந்தைகளும் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். கான வித்தையில் தேர்ந்தவர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். சுந்தரசோழர் கான இன்பத்தில் மெய் மறந்து கண்களை மூடிக் கொண்டிருந்தார். திடீரென்று ''ஐயோ! ஐயோ!'' என்ற கூக்குரலைக் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தார். ''குழந்தையைக் காணுமே! அருள்மொழியைக் காணுமே?'' என்று பல குரல்கள் முறையிட்டன. சுந்தர சோழர் பரபரப்புடன் சுற்று முற்றும் பார்த்தார். காவேரியின் வெள்ளத்தில் அவருடைய செல்வக் குழந்தையான அருள்மொழியை யாரோ ஒரு ஸ்திரீ கையினால் பிடித்துக் கொண்டு தண்ணீரில் அமுக்கிக் கொல்ல முயன்று கொண்டிருந்தாள். சொல்ல முடியாத பயங்கரத்தை யடைந்த சுந்தர சோழர் காவேரி வெள்ளத்தில் குதிக்க எண்ணினார். அச்சமயம் அந்த ஸ்திரீயின் முகம் அவருக்குத் தெரிந்தது. அது விகாரத்தை அடைந்த மந்தாகினியின் முகம் என்பதை அறிந்து கொண்டார். உடனே அவருடைய உடல் ஜீவ சக்தி அற்ற சடப் பொருளைப் போல் ஆயிற்று. தண்ணீரில் குதிக்கப் போனவர் படகிலேயே தடால் என்று விழுந்தார்.

* * *

படகிலே விழுந்த அதிர்ச்சியினாலே தானோ என்னமோ, சுந்தர சோழர் துயிலும் கனவும் ஒருகாலத்தில் நீங்கப் பெற்றார். புயல், மழை காரணமாக வழக்கத்தை விடக் குளிர்ச்சி மிகுந்திருந்த அவ்வேளையில் அவருடைய தேகமெல்லாம் வியர்த்திருந்தது. இவ்வளவு நேரமும் கண்ட தோற்றங்கள் எல்லாம் கனவில் கண்டவை என்பதை உணர்ந்த போது அவருடைய நெஞ்சிலிருந்து ஒரு பெரும் பாரத்தை எடுத்தது போன்ற ஆறுதல் ஏற்பட்டது. எதிரே பார்த்தார். அறையில் ஒருவரும் இருக்கவில்லை. தீபம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. தாம் தூங்கிவிட்டபடியால் பக்கத்து அறையில் இருக்கிறார்கள் போலும்! கையைத் தட்டி அழைக்கலாமா என்று எண்ணினார். ''சற்றுப் போகட்டும்; கனவுத் தோற்றத்தின் அதிர்ச்சிகள் நீங்கட்டும்'' என்று எண்ணிக் கொண்டார்.

அப்போது மேல் மச்சிலிருந்து ஏதோ மிக மெல்லிய சத்தம் கேட்டது. அது என்னவா யிருக்கும்? முகத்தைச் சிறிதளவு திருப்பிச் சத்தம் வந்த திக்கை நோக்கினார். மேல் மச்சின் தூணைப் பிடித்துக் கொண்டு விளிம்பின் வழியாக ஓர் உருவம் இறங்கி வருவது போலத் தோன்றியது. (தொடரும்)



சினிமாக் கதை எழுத்தாளர்: நீல வானத்தில் வெண்மதி எழுந்தது. பச்சைப் பசேல் எனப் பாசி படர்ந்திருந்த குளத்தில் வெந்த ஆம்பல் மலர்கள் சிரித்தன. நீண்டு வளர்ந்த கருங் கூந்தலில் மஞ்சள் நிறக் கனகாம்பர மலர்கள் குடியபடி ஊதா நிறப் பட்டுப் புடவை காற்றில் சலசலக்க அவள் குளக்கரை நோக்கி வந்தாள்.

டைரக்டர்: என்ன சார், கதை தொடங்கி நாலு வரி ஆகலே. அதற்குள்ளாறே ஏழு கலரும் வந்திடுச்சு உங்க வர்ணனையில்!

க. ஆசிரியர்: நீங்கதானே ஒரு கலர்ப் படத்துக்குக் கதை வேணும்னு கேட்டீங்க!

-ஆர்.எம்.

இங்கிலாந்தில் மோட்டாரில் 'எல்' போர்டு போட்டுக் கொண்டால் மட்டும் போதாது. அந்த 'எல்'லை 4½ அங்× 3½ அங்× 1½ அங். என்ற அளவில் தான் போட்டுக் கொள்ள வேண்டும்.

''பாபு''



விறுவிறுப்பான தீபாவளி விற்பனை



வண்டு நாடுவதோ
வாச நறுமலரை

வண்டு விழி
மாதர்
நாடுவதோ

சாரதாவை

❋

பாங்கான
பட்டாடைகளுக்கு
விஜயம்
செய்யுங்கள்

சாரதாஸ்

(ஏர்கண்டிஷன்ட்)

தன் பில்டிங் - மவுண்ட்ரோடு - சென்னை-2 போன்: 87177
32, N. S. B. ரோடு - திருச்சி-2 போன்: 7077

தீபாவளி வரையில் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு

துயர முடிவு

ஹிந்தி

சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த ரவிபாபு நீண்ட பெருமூச்சு விட்டவாறே, ''ஆண்டவனே! இனி இந்த ஓடம் அசையாது!'' என்றார்.

சமையல் அறையிலிருந்து தேநீர்க் கோப்பையுடன் வெளியே வந்த ரமா, அதனை மேஜைமீது வைத்துவிட்டு, ''எப்பொழுது பார்த்தாலும் எதற்குத்தான் இப்படித் தூக்கிப் பேசிப் பேசுகிறீர்களோ?'' என்றாள்.

''உண்மையைத்தான் சொல்கிறேன், ரமா! இனி இந்தக் குடும்பப் படகு ஓடாது. கடன் சுமை எல்லை மீறிவிட்டது. தலையைச் சுமையாக அழுத்துகிறது. சம்பளம் எப்பொழுது வருமோ, தெரியாது. பத்திலிருந்து நாலு வரையில் கத்திக் கத்தித் தொண்டை வற்றிப் போகிறது; தலைவலி மண்டையைப் பிளக்கிறது. உடலில் உயிர் என்று ஒன்று இருப்பதாகவே தோன்றவில்லை. அட்டையாக இரத்தத்தை யாரோ உறிஞ்சி விட்டாற்போலத் தோன்றுகிறது.''

''தேநீர் ஆறிப் போகிறது!'' ரமா பேச்சின் போக்கைச் சுவடு மாற்றிவிட முயன்றாள்.

''வேறு சிற்றுண்டி ஒன்றும் செய்யவில்லையா?''

''ஒன்றும் இல்லையே செய்வதற்கு?''

''பாப்பா எங்கே?''

''நீங்கள் தேநீர் குடியுங்கள். அவள் குடித்து விட்டாள்.''

தேநீரை வாய்வரைக்கும் கொண்டுபோன ரவிபாபு சட்டென்று எழுந்து நின்றார். ''இதோ போய்ப் பாப்பாவை அழைத்து வருகிறேன்'' என்று நடந்தார். அவர் அறை வாசற்படி தாண்டுவதற்குள்ளாகவே வெளியிலிருந்து பாப்பாவின் குரல் கேட்டது. உட்புறமாக ரமா வாசற் கதவைத் தாழ்ப்பாள் போட்டிருப்பதைப் பார்த்தார் ரவிபாபு. கதவைத் திறந்ததும் பாப்பா இரண்டு கைகளையும் நீட்டிக் கொண்டு, ''அப்பா! அப்பா!'' என்று கூறியவாறே ஓடி வந்தாள்.

தந்தையின் மடியில் உட்கார்ந்து பாப்பா தேநீர் அருந்தலானாள். இடையிடையே ஓரக் கண்களால் தாயாரையும் பார்த்துக் கொண்டாள். அவளுக்கு அம்மாவிடம் அச்சம். அவள் தேநீர் அருந்த அருந்த ரமாவின் கோபம் கூடிக் கொண்டே இருந்தது. கோப்பையில் தேநீர் ஏகமாகக் குறைந்துவிடவே, ரமாவினால் பொறுக்க முடியவில்லை. குழந்தையைக் கையைப் பிடித்து இழுத்துக் கோபம் கொதிக்கும் குரலில் கூறினாள்: ''அடி துக்கிரி! தேநீர் குடித்து நீ என்ன செய்யப் போகிறாய்? பெரிசா ஏதாவது வெட்டி முறிக்கப் போகிறாயோ?''

தந்தையின் முகத்தைப் பார்த்துக் குழந்தை அழலானாள். பேசினால் சண்டை வளருமே என்று அஞ்சி ரவிபாபு மௌனம் சாதித்தார். இது அந்த வீட்டில் அன்றாட நிகழ்ச்சியாகவே ஆகிவிட்டது. கணவன்–மனைவி சண்டை போடாத நாளே கிடையாது. பேச்சுத் தடித்துத் தடித்துப் பேச்சு வார்த்தை கூட நின்றுவிடும். ரவிபாபு உணவு அருந்தாமல் தூங்கி விடுவார். ரமா கொல்லைப்பட்டியில் கிடந்து புழுங்குவாள்.

தினமும் காலையில் எழுந்ததும் ரவிபாபுவின் மனத்தில் நம்பிக்கைக் கதிர்கள் சுடர் விடும். மாலையில் 'டாண் டாண்' என்று பள்ளி மணி அடித்ததும் அவை அணைந்து இருளோடி வெறிச்சென்று ஆகிவிடும். ரவிபாபு பள்ளியிலிருந்து வீட்டுக்குப் புறப்படுவார். இரு கால்களிலும் இரண்டு மணங்கு சுமையுள்ள பாறாங்கல்லைக் கட்டிப் போட்டாற் போன்ற உணர்ச்சியில் அடி எடுத்து வைக்க முடியாமல் நொண்டி நொண்டி நடப்பார். இதுபோல் ஒரு நாளா, இரண்டு நாட்களா? ஒன்று ஒன்றாக நான்கு மாதங்கள் ஓடிவிட்டன. இப்பொழுது நடந்து கொண்டிருந்தது ஐந்தாவது மாதம். ஆனால் சம்பளம்? ஆமாம், பள்ளியில் வசூலாகும் பணம் எல்லாம் எங்கே போய் விட்டது? எந்த இரும்புப் பெட்டி அவ்வளவையும் விழுங்கியது? யார் கண்டார்கள்? மாவட்டக் கல்வி அதிகாரிக்கு மனு எழுதிப் போடலாம். அதனால் நடக்கப் போவது என்ன? — என்னப்பா? வேலை கட்டாயம் [illegible]

* * *

1928-ம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த பாலாபூர் கிராமத்தில் பிறந்தவர் ஸ்ரீ உமா சங்கர். விடுதலைப் போரில் பங்கு கொண்டு மூன்று முறை சிறைக்குச் சென்று வந்தார். நாடக மேடை, இசை இரண்டிலும் ஈடுபாடு கொண்டவர். வரலாற்றுப் புதினங்கள், சமூக நாவல்கள், இளைஞர்களுக்கேற்ற நவீனங்கள், பற்பல சிறுகதைகள் எழுதியுள்ள இவர், 'மேரேபதி மேரே தேவதா' என்னும் தலைப்பில் காலம் சென்ற பிரதமர் லால்பகாதூர் சாஸ்திரியின் வாழ்க்கை வரலாற்றை லலிதா சாஸ்திரி சொல்லக் கேட்டு வழங்கியிருக்கிறார். இது பாரதத்தின் பல மொழிகளிலும் வெளி வந்துள்ளது. இச் சிறுகதையில் மிகச் சிறு கருவைக் கொண்டே சோகத்துக்கு மத்தகையதொரு வேகம் கொடுத்துக் கண் கலங்க வைத்துவிட்டார், பாருங்கள்! ✱



வீடு வந்துவிட்டது. தாழ்வாரத்தில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டார்.

''தேநீர் கொண்டுவரவா?'' ரமா வாட்ட மிகுதியோடு கேட்டாள்.

''கொண்டு வா.''

அது நாக்கை நனைப்பதனால்தானே உடலில் உயிர் ஓட்டிக் கொண்டிருந்தது. பிரிந்து போய்விடாமல்!

பாப்பா எதிரே வந்து நின்று கொண்டாள். ஆனால் அவளது அஞ்சிய பார்வை தாயாரையே நோக்கிக் கொண்டிருந்தது. ''வா, அம்மா!'' என்று கூறிக் கையைப் பிடித்துத் தூக்கி அவளை மடியில் உட்கார வைத்துக் கொண்டார் ரவிபாபு. அவள் ஒரு வாய் தேநீர் அருந்தியிருப்பாள். ரமா அவளை வெடுக்கென்று இழுத்தெறிய முனைந்தாள். ஆனால் ரவிபாபு விடவில்லை. ரமா இழுக்க, ரவிபாபு இழுக்கக் குழந்தை அழத் தொடங்கி விட்டாள். ரவிபாபுவுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் தேநீர்க் கோப்பையைத் தரையில் விட்டெறிந்தார். தேநீர் தரையில் உலர்ந்துவிட்டது. தாகம் தாளாமல் பூமிதான் குடித்து விட்டதோ? ரவிபாபு மனைவியைப் பொரிந்து தள்ளிவிட்டார். ''ஏண்டி விடியாமூஞ்சி! நிம்மதியாக ஒரு கோப்பை தேநீர் குடிக்கக் கூடவா விடமாட்டாய்? அப்படியே முழுவதையும் பாப்பா குடித்து விட்டால்தான் என்ன? நீ என்ன அவளுக்கு அமுதமா கொடுக்கிறாய்?''

அருகில் நின்று கொண்டிருந்த பாப்பா, மாறி மாறி அப்பா — அம்மா இருவருடைய முகங்களையும் பார்த்தாள். கடையில் அம்மா அழுவதைப் பார்த்ததும் அவளும் அழ ஆரம்பித்து விட்டாள்.

ரவிபாபுவுக்கு அப்பொழுதும் கோபம் அடங்கவில்லை. சுவரைப் பார்த்துப் பொருமிக் கொண்டிருந்தார்: ''நிறையப் பால் குடிக்க வேண்டும். நன்றாகப் பழங்கள் சாப்பிட வேண்டும் என்று டாக்டர் கூறுகிறார். ஓர் உத்தரணிப் பாலுக்கு இங்கே ஏங்குவது அவருக்கு என்ன தெரியும்? பாலுக்கே இந்தக் கதி என்றால், நல்ல பழத்துக்கு எங்கே போவது? கவலை இல்லாமல் இரண்டு வறட்டு ரொட்டி கிடைத்தால்கூடப் போதும்.... ஆனால்.......''

அதற்கு மேல் பேச வராமல் அடங்கி விட்டார்.

சிறுகச் சிறுக முற்றத்தில் இருள் கவியலாயிற்று. இரவு வெகு நேரம் ஆகியும், சமையல் ஆகவில்லை. எல்லோருமே சாப்பிடாமல் தூங்கி விட்டார்கள்.

பொழுது விடிந்தது.

உமாசங்கர்



ரவிபாபு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார். பலவீனம் அதிகமாகத் தெரிந்தது. பட்டினி போட்டதன் பலன். பள்ளிக்கூடம் போக வேண்டும் என்றே தோன்றவில்லை. இருந்தாலும் போகாமல் இருக்க முடியாது என்று தோன்றியது. அவர் பார்ப்பதோ உபாத்தியாயத் தொழில். போகாவிட்டால் மாணவர்கள் விஷயம் என்ன ஆவது! எத்தனை கஷ்ட — நஷ்டங்களுக்கு அவர்கள் இலக்கா வார்கள்? இப்படி எண்ணிச் சொல்லாமல் கொள்ளாமல், அவர் பள்ளிக்குப் புறப்படவே ரமா வந்து வழிமறித்தாள். "சமையல் ஆகி விட்டது: சாப்பிட்டு விட்டுப் போங்கள் !" என்றாள்.

" வேண்டாம், எனக்குச் சாப்பிடப் பிடிக்க வில்லை!" கண்களைப் பூமியில் பதித்த வாறே புறப்பட்டு விட்டார் அவர்.

மூன்றாவது மணி அடித்ததும், பிச்சைக் காரனைப் போல் தலைமை ஆசிரியரிடம் இரண்டு மாதச் சம்பளத்துக்காகக் கெஞ்சினார். ஆண்டவன் அருள் என்று சொல்ல வேண்டும். கல் கரைந்தது. நான்காவது மணி அடித்த பொழுது ரவிபாவுக்கு நானூறு ரூபாய்கள் தரப்பட்டன. அவருக்கு அசோக சாம்ராஜ்யமே கிடைத்து விட்டாற் போலிருந்தது. மகிழ்ச்சி நிலை கொள்ள வில்லை. மதியத்துக்கு வீட்டுக்கு வந்து ரமாவின் கையில் ரூபாயைக் கொடுத்துக் கூறினார்: "என் சொற்கள் உன் மனத்தைப் புண்படுத்தியிருக்குமானால் மன்னித்துக் கொள்!" கெஞ்சாத தோஷம்தான்.

"என்னை வெட்கித் தலைகுனிய வைக்கா தீர்கள். நேற்றைக்கே எத்தனையோ தடவை உங்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று எண்ணினேன். ஆனால்...."

"மன்னிப்புக் கோர வேண்டும் என்ற எண்ணம் தோன்றினதே, அது மன்னிப்புக் கேட்டதற்கு மேல்தான் !"

ரமாவின் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தெறிந்து விட்டு அவர் கூறினார்: "இதோ பார்! இந்தப் பணத்தைக் கொண்டு முதலில் சில்லறைக் கடன்களைத் தீர்த்துவிடு. உனக்கு உடுத்த நல்ல துணி இல்லை. இரண்டொன்று வாங்கிக் கொள். ரேஷன் சாமான்களுக்கும் பாப்பாவின் பாலுக்கும் தேவையான பணத்தை முன் கூட்டியே எடுத்து வைத்துவிடு — சரி, நான் பள்ளிக்குப் போய்விட்டு வருகிறேன். மாலையில் சீக்கிரமே வந்து விடுகிறேன். இன்றைக்கு மாலைச் சிற்றுண்டியைக் கொஞ்சம் நன்றாகச் செய்து வை: காரம், இனிப்பு இரண்டுமே இருக்கட்டும். எதுவும் தின்னாமல் நாக்குச் செத்துக் கிடக்கிறது !"

வெளியே போகும்போது ஒரு முறை திரும்பி ரமாவின் கண்களில் எதையோ தேடினார் ரவிபாபு. வெட்கத்ினால் அவள் விழிகள் தரையை நோக்கின.

மகிழ்ச்சியில் மிதந்த ரமா, இரண்டு — இரண்டரை மணி நேரத்துக்குள் எத்தனையோ இனிப்புகளும் காரங்களும் செய்து விட்டாள். பாப்பாவும் படுத்தாமல் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். சமையலறைக் குள்ளேயே, 'அப்பா, அப்பா!' என்று அடிக்கடி ஒரு தரம் கூவிக் கொண்டு அம்மாவோடு வளைய வளைய வந்து கொண்டிருந்தாள். அடுப்பில் ஏற்றியிருந்த தேநீர்க் கெட்டிலைக் காட்டித் 'தேநீர்' என்று கூறாமல் கூறிக் களிப்பை முகத்தில் தேக்கிக் காட்டினாள்.

"ஆமாம், தேநீர்தான்!" வாரி முத்த மிட்டு ரமா கேட்டாள்: "தேநீர் என்னிடம் குடிக்கிறாயா? அல்லது அப்பாவிடம்தான் குடிப்பாயா ?"

"அப்பா !" ஒரு வார்த்தையில் பதில் கூறினாள் பாப்பா. .

"சரி, அப்பாவோடேயே குடி!"

ரவிபாபு வரச் சிறிது தாமதமாகி விடவே, ரமா பாப்பாவைக் கூப்பிட்டு, "பாப்பா ! வாசலில் போய்ப் பார்த்து விட்டு வா, அப்பா வருகிறாரா என்று!" என்றாள்.

பாப்பா பேச்சின் பொருளைப் புரிந்து கொண்டாள். ஓடிப் போய் வெளியே பார்த்து வந்தாள். வாசற்புறம் விரலால் சுட்டிக் காட்டி, "அப்பா !" என்றாள், மழலைச் சொல்லில்.

'ஒரு வேளை வருகிறார் போலிருக்கிறது !' ரமா சட்டென்று தேநீர் தயாரித்து மேஜையின் மேல் வைத்தாள். வரும் கணவரை வரவேற்க வாசற்புறம் சென்றாள். ஆனால் யாரையும் காணோம். சற்று வாட்டமுற்ற மனத்தோடு பக்கத்தில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

பாப்பா மீண்டும் பிள்ளைப் பருவத்தின் இயல்போடு வாசலுக்கு ஓடினாள். எத்தனையோ பேர்கள் அவள் வீட்டை நோக்கி வருவதைக் கண்டாள். பயந்து போய் உள்ளே ஓடி வந்து, "அப்பா!" என்றாள்.

'வந்து விட்டார் போலிருக்கிறது!' ரமா இடைகழி வாசற்படி வரைக்கும் விரைந்துவிட்டாள். வீட்டு வாசலிலே பெருங்கூட்டத்தைக் காணவே, சிறிது அஞ்சித் துணுக்குற்றாள். அதற்குள் சிலர் ரவிபாபுவைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்து விட்டார்கள். ரவிபாபுவைக் கட்டிலில் கிடத்தினார்கள். ரமா கிறீச்சிட்டு விட்டாள்: "அடகடவுளே ! என்ன நடந்து விட்டது ? இதென்ன கோரக் காட்சி ? இப்பொழுது மதியத்துக்கு வந்துதானே....?" சோகத்தால் துடிதுடித்துப் போய் அடித்துக்கொண்டு அழலானாள் ரமா.

"திடீரென்று வயிற்றுவலி ஏற்பட்டது. வகுப்பிலிருந்து வெளியே வரும்பொழுது தடுக்கிக் கீழே விழுந்தார். அப்புறம் எல்லாமே அடங்கி விட்டது!" என்று தலை குனிந்து தழுதழுத்த குரலில் கூறியவாறே வந்தவர்கள் வெளியேறினார்கள்.

"அப்பா !"

பாப்பாவும் அலறினாள். அறியாக் குழந்தைக்கு அந்தத் துயரத்தை அறியும் அறிவு எப்படித்தான் வந்ததோ ! அதைக் கண்டு ரமா விக்கித்து விட்டாள், அழக்கூடத் திராணி அற்று !

இதற்குள் பாப்பா கையில் தேநீர்க் கோப்பையை ஏந்தித் தந்தையை நெருங்கியிருந்தாள் ! அதைக் கண்ட ரமா விசித்து விசித்து அழலானாள் !

தமிழாக்கம் : [illegible]


SANKAR CEMENT
I C
மாட்டுத் தொழுவம்
கால்நடைகளுக்கும் நவீன கொட்டில்கள் தேவை
சங்கர் சிமெண்ட்
பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது
இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!
இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18



ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம் — **ராஜாஜி**

49

பகுத்தறிவின் சக்திக்கு வரம்பு உண்டு. ஓர் எல்லைக்கு மேல் அது பயன் படாது என்பதை என்னுடைய அநுபவத்திலிருந்து அறிந்து அடக்கமும் அடைந்தேன். இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் ஒரு பொருளானது பயன்படும். செல்வமாகக் கருதப்படும். கூடாத இடத்தில் இருந்தால் அதே பொருள் அழுக்குக் குப்பையாகும். தன் வரம்புக்குள் பகுத்தறிவு பயன்படும். வரம்பு மீறினால் பைத்தியக்காரத்தனமாகும்.

பகுத்தறிவு வாதிகள் மிக நல்லவர்களே. ஆனால் பகுத்தறிவே எல்லாவற்றையும் சாதித்து விடும் என்று கருதத் தலைப்பட்டால் பகுத்தறிவு என்பது அவலட்சண சொரூபம் கொண்ட ஒரு பிசாசாக முடியும். சிலையையும் மரப் பொம்மையையும் கடவுளாக எண்ணிக் கடவுளை மறந்து அவற்றுக்குப் பூசை செலுத்துவது மடமையானால், மனிதனுடைய பகுத்தறிவுக்குச் சர்வ வல்லமை ஏற்றி அதைப் பூஜை செய்வதும் மடமையாகும். கூடாத மூர்த்தி பூஜைகளுக்குள் இதுவும் ஒன்றாகும். பகுத்தறிவை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அதைப் புறக்கணிக்கவும் நான் பேசவில்லை, பகுத்தறிவுக்கும் மேல் நமக்குள் ஒரு புனித சக்தியுண்டு. அதுவே பகுத்தறிவுக்கும் சக்தி தந்து அதை ஒரு சுத்த சக்தியாக்குகிறது. இதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே என்னுடைய ஆசை.

(யங் இந்தியா 14 - 10 - 26)

பகுத்தறிவு எல்லாவற்றையும் தீர்த்துவிட முடியாது. சில விஷயங்கள் பகுத்தறிவுக்கு அடங்காத விஷயங்கள் என்று தெரிந்து கொண்டு பக்தி செலுத்த வேண்டும். பக்திக்கு வேண்டிய நம்பிக்கை பகுத்தறிவைப் புறக்கணிக்கவில்லை. அதற்கு அப்பால் செல்கிறது. ஐம்புலன்களுக்கும் அப்பால் உள்ள ஆறுவது புலன் ஒன்றாகும் இந்த பக்தி. பகுத்தறிவுக்கு எட்டாத விஷயங்களில் இந்த ஆறுவது புலனே பயன்படும்.

(ஹரிஜன் 6 - 3 - 37)

அலைகடலில் வழியறிந்து படகைச் செலுத்துவது பக்தி. பக்தி மலைகளைத் தூக்கும். பக்தியே கடலைத் தாண்டும். நமக்குள் கோயில் கொண்டிருக்கும் ஆண்டவனை மனக் கண்ணால் காணப் பெறும் காட்சியே பக்தி என்பது. அந்தக் காட்சியைப் பெற்றவனுக்கு வேறு ஏதும் வேண்டியதில்லை. உடல் நோய்ப்பட்டிருந்தாலும் உள்ளம் நோயற்ற பூரண ஆரோக்கிய நிலையில் இருக்கும். பரம ஏழையாக இருந்தாலும் குறைவற்ற ஆன்ம சம்பத்தை அநுபவிப்பான்.

(யங் இந்தியா 24 - 9 - 25)

பக்தியும் நம்பிக்கையும் இல்லையேல் இந்த உலகம் ஒரு விநாடியில் ஒன்றுமில்லாமற் போகும். ஜபமும் தவமும் செய்து ஆண்டவனை வழிபட்டுப் பரிசுத்த வாழ்க்கை நடத்திய பெரியோர்களுடைய அநுபவ சித்தியை நம்முடைய செல்வமாக எடுத்துக் கொண்டு ஆள்வதுதான் பக்தி என்று சொல்லப்படுவது. பல ஆண்டுகளுக்கு முன் அவதரித்த ரிஷிகள், நபிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய மகான்களை நம்புவதும் வழிபடுவதும் மூட பக்தியல்ல. விவேகமேயாகும். நமக்குள் உண்டாகும் ஆத்ம பசியைத் தீர்க்கும் உணவாகும்.

(யங் இந்தியா 14 - 4 - 27)



ஒருவிதமாக வண்டி அஹமதாபாத்திலிருந்து புறப்பட்டது. வண்டி நகர்ந்ததும் யாரோ வெளியே இருந்து அவசரம் அவசரமாக எங்கள் பெட்டியின் கதவைத் திறந்தார்கள்.

மூன்றாம் வகுப்பாக இருந்தால் வியப்பதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் அதுவோ இரண்டாம் வகுப்பு. அதிலும் நான்கே 'பர்த்'துகள் கொண்டது. அவை நான்கும் ரிசர்வாகியிருந்தன. அப்பொழுது இரவு மணி பதினொன்று. தூங்கும் நேரம்.

என்னுடைய இடம் கதவுக்கு எதிர்ப்புறமாக இருந்தது. அதனால் எடுத்த எடுப்பில் ஏறுபவரைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. அப்படித் தடுத்து நிறுத்த வேண்டுமானால் அந்தப் பொறுப்பு மூன் பர்த்தில் படுத்திருந்தவரைச் சார்ந்தது. அவர் ஒரு மில் சொந்தக்காரர்; வயதானவர். அவருக்கு அடுத்த 'பர்த்'தில் உட்கார்ந்து ஒரு சினிமா ஏட்டைப் புரட்டிக் கொண்டிருந்த இளைஞர் திரைப்படக் கதாநாயகன் போலவே தோன்றினார். டிக்கட் பரிசோதகரைப் போல் அதிகாரத்தோடு ஏறி வந்து என் மீது சீறி விழுந்து என் 'பர்த்'தின் மீதே உட்கார்ந்த இன்னுமோர் இளைஞர் பார்ப்பதற்கு ராணுவ அதிகாரியாகத் தோன்றினார். அவர் மற்றவர்களோடு சம்பந்தப்பட்டவராகத் தோன்றவில்லை. அப்பா! என்ன திடகாத்திரமான உடல்! கண்களில்தான் என்ன காம நோக்கு!

நான் ஜன்னலின் பக்கமாகத் தலையைத் திருப்பி வெளியே பார்த்தேன். கூடவே கதாநாயகனும் ஏன் பார்க்கிறார்? மெத்தென்ற தலையணையின் மீது சாய்ந்து படுத்திருந்த சேட்ஜியும்கூடப் பாதி இடம்விட்டு எழுந்து உட்காருகிறாரே!

இதென்ன, ராணுவ இளைஞரின் கையில் கொக்கின் இறக்கைகளைப் போன்று வெண்மையான இரண்டு தலையணைகள் எங்கிருந்து வந்தன? 'கதாநாயகன்' யாருக்கு வண்டியில் ஏற உதவி புரிந்து கொண்டிருக்கிறார்? ஓ! ஓர் அழகி! நானும் உதவி புரிய ஓடினேன்! ஆனால் அதற்குள்ளாக இரு இளைஞர்களும் தங்கள் உழைப்பின் கூலியாக அவளுடைய இனிய குரலிலிருந்து 'தேங்க் யூ'வைப் பெற்றுக் கொண்டு விட்டனர்!

அழகிக்கு இடம் செய்து கொடுக்க சேட்ஜி தம் தலையணையின் பக்கமாக நகர்ந்தார். அதோடு விரித்திருந்த தமது படுக்கையைத் தட்டிக் காட்டி அவளை அதில் உட்காரும்படி சாடை காட்டினார்.

ஆனால் இதற்கு முன்பே ராணுவ அதிகாரி கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் கதையாக மற்றவருடைய 'பர்த்'தை அங்கே இருந்தபடியே கிருஷ்ணார்ப்பணம் செய்யத் தயாரானார். ஆனால் அதற்குள் அவள் என் 'பர்த்'தின் மீது இரண்டு தலையணைகளையும் வைத்துவிட்டு, ''நீங்களும் உட்காருங்களேன்'' என்று சொல்லியவாறே அவற்றின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். கதாநாயகரும் அவரை அறியாமலே என் 'பர்த்'தின் மீது உட்கார்ந்தார்.

குஜராத்தி

7-5-1912ல் ஆண்டு ராஜஸ்தானைச் சேர்ந்த மாண்டலியில் பிறந்த ஸ்ரீ பன்னாலால் படேல் குஜராத்தி இலக்கியத்துக்கு வளம் ஏற்றிய கவிஞர், கதைஞர்., நாடக ஆசிரியர் வரிசையிலே மிக முக்கியமான இடம் பெற்றவர். தமது படைப்புகளுக்காகக் குஜராத்தில் பல பரிசுகளும் பெற்றவர். ஏறக்குறைய 22 நவீனங்களும், பல கதைத் தொகுப்புக்களும் வெளிவந்துள்ளன. நாடகங்கள் நடத்தியும் வெற்றி கண்டவர். சாகித்ய அகாதெமி, நாஷனல் புக் டிரஸ்ட் போன்ற நிறுவனங்கள் இவரது நாவல்களைப் பாரதத்தின் பல் வேறு மொழிகளிலும் வெளியிடும் சிறப்புப் பணியை ஏற்றுள்ளன. 'பெண் என்றால்...?' ஆணினம் காட்டும் ஆர்வத்தை அற்புதமாகச் சித்திரிக்கும் சிறுகதையின் கருக்கம்தான் 'இரண்டாம் வகுப்பில்' என்னும் இச்சிறுகதை.



இடமில்லாமல் தவித்து நின்ற என்னைப் பார்த்து சேட்ஜி இரக்கம் காட்டினார். தம் படுக்கையின் காலி இடத்தைச் சுட்டிக் காட்டினார். ஆனால் எனக்கு அவரது அந்த உபகாரத்தை ஏற்க என்னவோ போல் இருந்தது. ஏனெனில், சித்திரப் பதுமையோ, பளிங்குச் சிலையோ என்று காட்சியளித்த அவளது நெருக்கத்தை இழக்கச் சட்டென்று மனம் ஒப்பவில்லை.

அவ்விளம் பெண்ணின் குண்டுக் கண்களில் தாண்டவமாடிய சஞ்சலச் செழிப்பையும், உதடுகளில் படர்ந்தாடும் பாவனைப் பசுமையையும் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று தோன்றியது. பெண்ணாய்ப் பிறந்தவள் அடைய வேண்டிய வாழ்க்கை வாய்ப்பை அவள் இன்னும் அடைந்தபாடில்லை என்பதும் நன்கு புலனாயிற்று. தலையணைகளைப் போலவே அவள் தலையோடு கால்வரை அணிந்திருந்த ஆடை அணிகளும் வெண்ணிறமாக இருந்தன. இதைக் கண்ட எனக்கு ஒருவேளை அவள் பனிமலையிலிருந்து இறங்கி வந்த பனிக் கன்னியாக இருப்பாளோ என்ற பிரமை உண்டாயிற்று. பனிப் பெண் அப்படித் தோன்றுவாளோ என்னவோ, என் கற்பனை அவளைப் பற்றி அப்படி எண்ண வைத்தது. அதைத் தொடர்ந்து பெட்டியில் எரிந்து கொண்டிருந்த மின்விளக்கு இரண்டு மடங்காகப் பிரகாசிப்பதாகவும்தோன்றியது.

அவளுடைய கண்களின் சஞ்சலம் நாவிலும் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அந்த நேரத்துக்கு அந்தச் சிறு பெட்டியில் ஏறி இருந்த உஷ்ணம் அவள் பேச்சின் இனிமையால்தான் சற்றுக் குறைந்தாற் போலிருந்தது. ஆனால் அவளோ தன் கைப் பையிலிருந்து சிறியதொரு விசிறியை எடுத்துத் தன் கழுத்தின் மீது இருந்த சேலையின் கழுத்தைச் சிறிது மேலே தூக்கி விசிறிக் கொள்ளத் தொடங்கினாள்.


அவளுக்குச் சிரமம் தரக் கூடாது என்று தானோ என்னவோ, அத்தனை நேரமும் ஓடாமல் இருந்த மின்சார விசிறி சுழலத் தொடங்கியது. சேட்ஜி தம் தலையணையின் மீது சௌகரியமாகச் சாய்ந்து கொண்டார். ராணுவ அதிகாரி தம் கால்களை நன்றாக நீட்டிக் கொண்டார். அதே சமயத்தில் 'கதாநாயகன்' பையிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். சிகரெட் புகையில் மூச்சு முட்டியது.

அந்தக் கஷ்டத்தைச் சிறிது குறைக்க ராணுவ அதிகாரி முயன்றார். சேட்ஜியின் பக்கமாகத் திரும்பி யிருந்த மின்விசிறியைப் பிடித்து அவ்விளம் பெண்ணின் பக்கமாகத் திருப்பி விட்டார்.

அவள் சொன்ன நன்றி, தேன் தடவிய ரொட்டியாக இனித்தது. ராணுவக்காரருக்கு மட்டும் அல்ல; எல்லோருக்குமே !

அதன்பின் சிறிது அமைதி நிலவியது. அந்த அமைதி வெளித் தோற்றத்துக்குத்தான்.... உள்ளுக்குள்ளோ...? எல்லோருடைய மனமும் அமைதி இழந்து தவித்தது.

'வண்டி எத்தனை மணிக்குக் குறிப்பிட்ட ஜங்ஷனுக்குப் போய்ச் சேரும்? அங்கிருந்து அடுத்த வண்டி எத்தனை மணிக்கு; இறங்க வேண்டிய ஸ்டேஷனிலிருந்து மகாநாட்டுக்குப் போக ஏதாவது போக்குவரத்துச் சாதனம் இருக்குமோ?' என்பது போன்ற விஷயத்தில் அக்கறை காட்டினர், கதாநாயகத் தோற்றம் உள்ளவரும் ராணுவ அதிகாரியும்.



பேச்சுக்கிடையே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு அந்தப் பெண்ணிடம், ''நீங்களும் மாநாட்டுக்குத்தான் போகிறீர்களா?'' என்று கேட்டார் 'கதாநாயகன்'.

''ஆம்'' என்றவளின் அழகிய இதழ்களில் புன்னகை மலர்ந்தது. அப்புன்னகையிலே இரு இளைஞர்களும் அமுதத்தைக் கண்டனர். அதைத் தொடர்ந்து பருக எண்ணிப் பேச்சுக்குப் பல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டனர்.

அவள் 'ஆம்' 'இல்லை'யோடு ரத்னச் சுருக்கமாகத் தன் பதிலைச் சுருக்கிக் கொண்டாள். அது அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. அதைத் தவிர்க்க அவர்கள் தூங்கும் முயற்சியை மேற்கொண்டனர்.

அப்பொழுதும் 'கதாநாயகனுக்கு' ஒரு சபலம். ''உங்கள் பொருள்கள் ஏதேனும் ஸ்டேஷனில் விட்டுப் போய்விடவில்லையே?'' என்று அவளிடம் கேட்டார்.

''இல்லை!''

''உங்கள் படுக்கை....?''

''இந்த இரண்டு தலையணைகளே போதுமானவை!''

''இவைகளே போதுமா? அது எப்படி ?'' என்று கேட்ட சேட்ஜி, தம் போர்வையை உருவி, ''இதோ, இதை விரித்துக் கொள்ளுங்கள்!'' என்றார்.

''உங்களுக்கு....?''

வெய்யில் காலமாகையால் போர்வை தேவைப்படவில்லை சேட்ஜிக்கு. அவருடைய பரந்த மனத்துக்கு ஒருவேளை இதுதான் காரணமோ, என்னவோ? ஆனால் ஐந்தாமவர் படுக்க இடம் எங்கே இருந்தது?

அந்த இரண்டு இளைஞர்களும், 'பர்த்'துக்காக யோசிக்கலாயினர். '' 'பர்த்'துக்கு என்ன செய்வதாக உத்தேசம்? என்னிடம் கூடு 'பர்த்'துக்கு டிக்கட் இருக்கிறது!'' என்றேன், என் இடத்தைப் பிடித்துக் கொள்ளும் நோக்கத்துடன்.

வண்டியோ வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அடுத்த ஸ்டேஷன் நாற்பது ஐம்பது மைல் தொலைவிலிருந்தது. எல்லோருமே மகாநாட்டுக்குச் செல்பவர்கள். ஆகவால் இரவு நேரத்தை எப்படியோ கழித்தாக வேண்டும்.

இருவரும் யோசிப்பதைக் கண்ட அந்தப் பெண், ''என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்! நான் இங்கேயே, கீழேயே — இரண்டு தலையணைகளையும் நாவல் புத்தகத்தையும் இதற்காகவே எடுத்து வந்திருக்கிறேன் !'' என்றாள்.

என்ன கர்வம் இவளுக்கு! ஒரு வேளை இரண்டு இளைஞர்களின் மனத்திலும் இரக்கத்தை உண்டாக்கத்தான் இப்படிச் சொல்லி இருப்பாளோ ? அவர்கள் இருவரும் ஒன்றும் கூறுமற் போகவே, நான் குதூகலத்தோடு, ''நாம் இருவரும் நாவலையும், 'பர்த்'தையும் மாற்றிக் கொள்ளலாமே?'' என்றேன்.

அவள் இமைகளை விசித்திரமாகக் கொட்டி, ''வேண்டாம்! உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்?'' என்றாள்.

''சிரமம் ஒன்றும் இல்லை! இப்படி மாற்றிக் கொண்டால் இருவருக்குமே இரண்டு பொருள்களுமே சரியானபடி உபயோகமாகுமே !'' என்றேன்.

''அதுவும் நியாயம்தான். இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை இப்படிச் செய்தால் இருவருக்குமே சிரமம் இராதல்லவா ?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''முதலில் நீங்கள்....'' என்றேன் நான்.

''எனக்கு இத்தனை சீக்கிரத்தில் தூக்கம் வராது!''

'உங்களைக் கண் விழிக்க வைத்துவிட்டு நான் எப்படித் தூங்க முடியும்?' என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் அதற்கு மாறாக, ''அப்படியானால் நீங்கள் சௌகரியமாக உட்கார்ந்து கொள்ளுங்கள். நான் இப்படியே ஒரு குட்டித் தூக்கம் போட்டு விடுகிறேன்'' என்று கூறிப் பக்கத்தில் இருந்த என் ஜமக்காளம் முதலியவற்றை எடுக்கத் தொடங்கினேன்.

எங்கள் பேச்சை மூவரும் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் 'இவன் மட்டும் வெற்றியடைந்து விட்டானே' என்று நினைத்து நிச்சயம் பொருமைப்பட்டிருக்க வேண்டும்!

''மிஸ்டர் ! நீங்கள் அந்தப் 'பர்த்'தில் சுகமாகத் தூங்குங்கள். படுக்கையையும் நன்றாகப் போட்டிருக்கிறேன் '' என்றார் 'கதாநாயகன்'.

ராணுவக்காரர் அடித் தொண்டையோடு ஒரு கர்ஜனை புரிந்தார் : '' அப்படியானால் நீங்கள் என் இடத்தைப் பிடித்துக் கொள்ளுவதாக உத்தேசமோ?''

''இல்லை. இவர் என் 'பர்த்'தில் தூங்குவார். நான் படித்துக் கொண்டே இரவைக் கழித்து விடுவேன்!'' என்றார் 'கதாநாயகன்'.

இதைக் கேட்டுக் கண்ணிமை கொட்டி அவள் என்னைப் பார்த்தாள். அவள் இதழ்கள் புரிந்த புன்னகை எனக்குச் சமிக்ஞை காட்டியது. நான் மேல் 'பர்த்'தில் ஏறிவிட்டேன். 'கதாநாயகன்' தமது அழகான படுக்கையின் மீது கால்மாட்டுக்கு ஒரு தலையணை வைத்தார்.


படுத்தபின் அந்த இடம் பல வகையிலும் நன்மை பயப்பதாகவே தோன்றியது. ஒன்று, மற்றவர்களைக் காட்டிலும் என் மீது அந்தப் பெண்ணுக்கு அக்கறை விழுந்தது. இரண்டாவது ஜமுக்காளத்துக்குப் பதிலாகச் சுகமான படுக்கை கிடைத்தது. மூன்றாவதாகத் தனிமையில் இருக்க வாய்ப்புக் கிட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாகக் கையைக் குறுக்காக வைத்துக் கொண்டு கண்களை இருட்டில் நிறுத்தி, முன்னால் இருப்பவரைப் பார்த்துக் கொண்டிருக்கவும் முடிந்தது.

மூவரும் இரவு முழுதும் கண் விழித்தால் என் தூக்கம் கெட்டது. கீழே உட்கார்ந்திருந்த கதாநாயகன் என் தலைப் பக்கம் வந்து தம் பையிலிருந்து சீட்டுக் கட்டை எடுத்தார்.

அதைத் தொடர்ந்து அவள் எழுந்து வந்து தன் நாவலை என் முன் நீட்டி, ''இந்தாருங்கள்! எங்கள் கூச்சலில் தூக்கம் வராவிட்டால் படிக்கவாவது செய்யலாம், பாருங்கள்!'' என்றாள் சிரித்தவாறே.

நான் அந்த ஆங்கில நாவலை வாங்கித் திறந்து பார்த்தேன். 'அன்னு கரீனு' என்றிருந்தது.

சேட்ஜியையும் சேர்த்து நால்வரும் சீட்டாட்டத்தில் கவனம் செலுத்தினர். நான்



'அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும்
ஒரே போல்
கெட்டிக்காரி!'
ஹார்லிக்ஸ் அவளைக் கெட்டிக்காரியாக மாற்றிற்று!
வளரும் குழந்தைகளுக்கு தெம்புடன் திகழத் தேவையான அதிக சக்தியை அளிக்க ஹார்லிக்ஸ் உதவுகிறது. டாக்டர்கள் குழந்தைகளுக்கு ஹார்லிக்ஸ் சிபார்சு செய்கிறார்கள். உங்கள் மகளுக்கும் ஹார்லிக்ஸ் தேவை!
ஆனால், சில நாட்களுக்கு முன் அவளுக்கு ஒரே மந்தம். நான் டாக்டரை விசாரித்தேன்.
டாக்டர் சொன்னார்: "அவளுக்கு தினமும் ஹார்லிக்ஸ் கொடுங்கள்."
ஹார்லிக்ஸ் சாப்பிட்ட பின் அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரேபோல் கெட்டிக்காரியாக மாறிவிட்டாள்!
Horlicks
ஹார்லிக்ஸ்
அதிக சக்தியை அளிக்கிறது!

அழகியைப் பற்றி ஆராயத் தொடங்கினேன். 'இந்தப் பெண்ணின் 'பார்ட்னர்' யாராக இருந்தால் நன்றாக இருக்கும்? ஒரு பக்கம் பணத்துக்காக உத்தியோகம் பார்ப்பவர். அவருக்கு எதிர்ப் பக்கம் சுகமான வாழ்க்கை நடத்தி வரும் சேட்ஜி. இவர் விளையாட்டில் மிகவும் சாமர்த்தியமுள்ளவர் போலத் தோன்றினார். ராணுவக்காரரோ தலையைச் சொறிந்து கொண்டிருந்தார். ஆனால் மற்றவர்கள் யாரும் அப்படித் தலையைச் சொறிந்து கொள்ளவில்லை. வெகு உற்சாகமாக ஆடினர். மற்றவர்களைக் காட்டிலும் அதிகத் திறமை வாய்ந்தவராகத் தோன்றியவர் 'கதா நாயகன்' தான்.

அவள் எப்படி ஆடுகிறாள் என்ற என் கேள்விக்கு ஆரம்பத்தில் விடை கிடைப்பது சிறிது சிரமமாக இருந்தது.

போகப் போக அவள் சீட்டுக்களைத் திருப்புவதையும், வீசி எறிவதையும் கண்டால் ஆட்டத்தில் பழக்கமுள்ள கைதான் என்று தெரிந்தது. இவளுடைய 'பார்ட்னரா'க முதலில் ராணுவக்காரர் விளையாடினார். அதனால் மற்ற இருவரைக் காட்டிலும் அதிக 'பாயின்ட்ஸ்' கிடைத்தது.

அவளைச் சாமர்த்தியக்காரியாக எண்ணிய அதே நேரத்தில் என் நம்பிக்கையைக் குலைத்து விட்டாள். ஆட்டத்தைக் காட்டிலும் வேடிக்கைப் பேச்சுக்களில் கவனம் செலுத்தினாள். தன் 'பார்ட்னர்'களை மாற்றி மாற்றி ஆடினாள். சேட்ஜியையும் ஒரு முறை தன் 'பார்ட்னரா'க்கிக் கொண்டு கூச்சலிட்டுக் குதூகலித்தாள்.

சுவாரசியமாகப் பார்த்த நான் பிறகு அசுவாரசியத்தில் ஆழ்ந்து தூங்கி விட்டேன். காலை ஐந்து மணிக்குத்தான் கண் திறந்தேன்.

அப்பொழுது அவர்கள் கூட்டாட்டம் சலித்துத் தனியாட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். நான் இறங்கிப் பற்களைத் துலக்கிவிட்டு வந்தேன். அவர்களும் விளையாட்டை நிறுத்தி விட்டார்கள். எனக்கு அடுத்தாற்போல் சேட்ஜி குளியலறைக்குச் சென்றார். 'கதா நாயகன்' தம் படுக்கையைக் கட்டுவதில் மூழ்ந்தார். ராணுவக்காரர் துவாலையை எடுத்துக் கொண்டு தயாராக உட்கார்ந்திருந்தார். அந்தப் பெண்ணும் தலையணை ஒன்றிலிருந்து துவாலையை எடுத்தாள்.

சேட்ஜி குளியலறையிலிருந்து வெளியே வந்ததும் ராணுவக்காரர் சென்றார். அதன் பின் அந்தப் பெண்ணும், கடைசியில் 'கதா நாயகனு'ம் சென்று வந்தார்கள். இவ்விதம் குளியலறைக் கதவு திறக்கப்படுவதும் சாத்தப்படுவதுமாக இருந்தது.

இதற்குள் ஸ்டேஷன் வந்தது. நாங்கள் எல்லோரும் இறங்கத் தயாரானோம். நான் அந்தப் பெண்ணின் புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கப் போனேன்.

''இருக்கட்டுமே! நீங்கள் மகாநாட்டில் இரண்டு நாட்களும் இருப்பீர்கள் அல்லவா? படித்து முடித்துவிட்டே தாருங்கள்!'' என்று சொன்னாள்.

''ஒரு முறை படித்து முடித்த புத்தகம் தான். இருந்தாலும்.... இப்பொழுது அன்று தன் மகனைச் சந்திக்கும் கட்டம்!'' என்றேன்.

''ஓ! மனத்தை உருக்கும் கட்டமாயிற்றே! முடிக்காமல் புத்தகத்தை மூட முடியாதே!'' என்றாள்.

வண்டி பிளாட்பாரத்தில் நின்றதும் கூலியாட்கள் தடதடவென்று ஓடி வந்தனர். சேட்ஜிக்கும் 'கதாநாயகனு'க்கும் 'லக்கேஜ்' அதிகம். என்னிடம் ஒரே ஒரு பை மட்டும் தான். ராணுவக்காரரிடமும்கூடச் சிறிய பை ஒன்றுதான் இருந்தது.

வண்டியினுள் நுழைந்த கூலியாளிடம் 'கதாநாயகன்' தமது சாமான்களோடு அந்தப் பெண்ணின் இரண்டு தலையணைகளையும் கொடுத்தார்.

அங்கு வந்திருந்த தமது வேலையாளிடம் தம் சாமான்களைக் காட்டிய சேட்ஜி அந்தப் பெண்ணைப் பார்த்து, ''உங்களுக்கு வண்டியோ பஸ்ஸோ சௌகரியமாகக் கிடைக்காவிட்டால் என் காரிலேயே போகலாம். வேண்டிய இடம் இருக்கிறது. ஒரு

சென்னையில் 25-10-70 ஞாயிற்றுக்கிழமை முதல் 1-11-70 வரையில் ''மணவாள மாமுனிகள் வாரம்'' கொண்டாடப்படுகிறது. இந்த வாரத்தில் உபந்நியாஸங்கள் நடைபெறும். 25-10-70ந் தேதி மாலை நூற்றுக்கணக்கான வெள்ளி மணவாள மாமுனி படங்களுடன் புஷ்பரதோத்ஸவம் நடைபெறவிருக்கிறது.



ஸ்ரீபெரும்புதூரில் 2-11-70 திங்கட்கிழமை திருத்தேர் உத்ஸவமும், 3-11-70 செவ்வாய்க் கிழமை மணவாள மாமுனி சாத்துமுறையை ஒட்டி, மணவாள மாமுனிகளுடன் எம்பெருமானார், கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார், பிள்ளை லோகாசாரியார் அவர்களுடைய அர்ச்சா மூர்த்திகள் எல்லோருக்கும் ஒன்றாகத் திருமஞ்சனமும், திருவீதிப் புறப்பாடும் அதிவைபவமாகக் கீழ்க்கண்ட கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.

இந்த வைபவங்களில் அனைவரும் கலந்து கொண்டு தங்களால் இயன்ற அளவுக்குப் பொருளுதவி செய்து மேற்படி வைபவங்களைச் சிறப்பித்துத் தரும்படி கோரப்படுகிறார்கள்.

ஸ்ரீ மணவாள மாமுனிகள் 600வது ஆண்டு விழாக் கமிட்டியாளர்கள், 207-208, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, சென்னை–1.

மணி நேரத்தில் போய்ச் சேர்ந்து விடலாம்" என்றார்.

"உங்களுக்குச் சிரமம் இல்லையென்றால்..." என்று கூறியவள், அடுத்த நிமிஷமே சிரித்த முகத்துடன் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு விட்டாள்.

'கதாநாயக'னின் முகம்தான் வாடிவிட்டது. தலையணை தம்மிடம் தங்கிவிட்டதே என்பதனாலும் இருக்குமோ?

நாங்கள் மூவரும் காலை உணவு அருந்த ரெஸ்டாரெண்டுக்குச் சென்றோம். அங்கு தேநீர் அருந்தும் பொழுது, "உலகம் எப்படிச் சினிமா உலகமாக மாறி விட்டது, பாருங்கள்! வெளி உலகிலும் ஒரு கிளையிலிருந்து அடுத்த கிளைக்குத் தாவ இந்தப் பெண்களுக்கு நேரம் பிடிப்பதில்லை !" என்றார் அவர்.

அவர் பேச்சுக்கு அடி-முடி விளங்காததால், "எந்தக் கிளையிலிருந்து எந்தக் கிளைக்கு?" என்று கேட்டேன் நான்.

"சட்டென்று துணை பிடித்துக் கொண்டு சென்று விட்டாளே, அவளைப் பற்றித்தான் கூறுகிறேன்" என்றார் அவர்.

இதை ராணுவக்காரர் அவ்வளவாக ரசிக்கவில்லை. "சேட்ஜியின் மோட்டாரில் சென்றதைச் சொல்கிறீர்களா? அவளுக்கு ஏற்பட்ட அநுகூலத்தைக் கண்டு சந்தோஷமடைவது போக இப்படி விபரீதமாக நினைப்பது உங்களுடைய குறுகிய மனப்பான்மையைத்தான் காட்டுகிறது. அவள் செய்ததில் என்ன தவறு?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

ராணுவக்காரரின் கருத்தும் என் கருத்தும் ஒருமித்ததைக் கண்டு 'கதாநாயக'னுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. "தன் காதலை என்னிடம் எழுத்து மூலமாக வெளிப்படுத்தி விட்டு அந்தே நிமிஷங்களில் ஒன்றும் அறியாதவளைப் போல் சென்று விட்டாளே!" என்று அங்கலாய்த்தார்.

ராணுவக்காரருக்குக் கன்னத்தில் ஓங்கி அறைந்தாற் போலிருக்க வேண்டும். ஆனால் அடுத்த கணமே தம்மை நிதானப்படுத்திக் கொண்டு, "நீங்கள் சொல்லிய இவ்விஷயத்தை நாங்கள் எப்படி நம்புவது?" என்று கேட்டார், உதடுகளில் ஒரு குறுஞ் சிரிப்பைப் படர விட்டுக் கொண்டு.

"நன்றாக இருக்கிறது. நீங்கள் சொல்வது? நம்புவதற்கு வேறு ஆளைப் பாருங்கள்! முன்பின் தெரியாத ஒரு பெண் சிறிது நேரப் பழக்கத்தில் தன் காதலை எழுத்து மூலமாக ஒரு நாளும் வெளியிட மாட்டாள்!" என்று நானும் அடித்துக் கூறினேன்.

"என்ன பந்தயம் கட்டுகிறீர்கள்?" என்றார் 'கதாநாயகன்'.

"நீங்கள் எத்தனைக்குத் தயார் ?" என்று கேட்டார் ராணுவக்காரர்.

"நூறு ரூபாய்" என்றார் கதாநாயகன்.

"இல்லை. ஐம்பது போதும்!" என்றேன்.

"சரி !"

ராணுவக்காரர் தம் கால் சட்டையின் பையில் கையை விட்டுப் பர்ஸை எடுத்தார்.

அடுத்த கணமே இருவரும் ஐம்பது ஐம்பது ரூபாயை என் கையில் வைத்தார்கள்.

"இந்த ரூபாயை எப்படிச் செலவிடுவது?" என்று கேட்டேன் நான்.

"எல்லோரும் சேர்ந்து விருந்து சாப்பிட்டு விடலாம்!" என்றார் ராணுவக்காரர். 'கதாநாயக'னும் ஒப்புக் கொண்டார்.

தம் சட்டைப் பையிலிருந்து 'கதாநாயகன்' நீல நிறத்தில் இரட்டையாக மடித்த ஒரு காகிதத் துண்டை எடுத்து வெற்றிக் குதூகலத்துடன் என் முன் நீட்டி, "படித்துப் பாருங்கள்!" என்றார்.

உண்மையாகவே அது ஒரு பெண் எழுதிய கடிதம்தான். சந்தேகமில்லாமல் பெண்ணின் கையெழுத்தேதான். "சிறிது நேர அறிமுகத்தில் ஓர் அழகியைக் கவர்ந்த உம்மை என்றும் மறக்க முடியாது. இந்தக் கடிதத்தைக் கட்டாயம் நம்புகிறேன்!" என்றேன்.

தற்செயலாகக் கீழே யாருடைய கையொப்பமும் காணப்படவில்லை. ஆனாலும் இவ்விதச் சந்தர்ப்பத்தில் இதைக் காட்டிலும் அதிகமாக யாராலும் எழுத முடியாதல்லவா ? ராணுவக்காரர் கையில் கொடுத்து, "படித்துப் பாருங்கள்!" என்றேன்.

ஆனால் அவருடைய முகத்தில் எவ்வித மாறுபாடும் தென்படவில்லை. கடிதத்தைப் படித்துப் பார்ப்பதற்குப் பதிலாக விழுந்து விழுந்து சிரித்தார். பிறகு, "இது நான் படித்ததுதான் !" என்றார்.

"தோல்வியை ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"தோல்வியை நான் எதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும்? தோல்வி 'கதாநாயக'ருடையதுதான். அவர்தான் தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டும்" என்றார் இவர். 'இதென்ன விதண்டாவாதம்?' என்று நான் கேட்பதற்கு முன்பாகவே, அவர் 'கதாநாயக'னைப் பார்த்து, "இக்கடிதம் உங்களுக்குப் பாத்ரூமில்தானே கிடைத்தது?" என்று கேட்டார்.

"ஆமாம்!"

"இதை வேறு யாராவது ஏன் எழுதியிருக்கக் கூடாது?"

'கதாநாயகன்' திகைத்துக் கொண்டார் என்று எண்ணினேன். இருந்தாலும், "எனக்குமுன் அவள்தான் 'பாத் ரூம்'க்குப் போனாள். வெளியே வரும்பொழுது என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே 'நீங்கள் போகலாம்' என்றாள். நான் பாத்ரூமுக்குள் செல்லும் வரை களுக்குச் சிரிப்புடன் கண் கொட்டாமல் என்னையே பார்த்தாள். இம் மாதிரி சந்தர்ப்பத்தில் யாராவது தன் பெயரை எழுதுவார்களா?" என்று கேட்டார்.

ராணுவக்காரர் சிறகு ஒடிந்து விட்டார் என்றே தீர்மானித்தேன். "இதைச் சற்றுக் கவனித்துப்.பாருங்கள்! சந்தேகம் இருந்தால் என் டயரியிலிருந்து கிழித்தெடுத்த இந்தக் கடிதத் துண்டுடன் இதைச் சேர்த்துப் பாருங்கள்!" என்றார்.

இதைக் கண்ட கதாநாயகன் பிரமித்து விட்டார். தம் ஏமாற்றத்தை மறைக்க அவர் சிரிக்க முயன்றார். "ஆனால் நான் வெளிப்படுத்திய அபிப்பிராயத்தை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்" என்றார்.

இருவருடைய ஏமாற்றத்தையும் கண்டு எனக்கு இரக்கம் பிறந்தது. ஆனால் அநுபவம் நிறைந்த அவனுடைய குறும்புத்தனத்தை நினைத்துச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

தமிழாக்கம்: கா. க. ரா. கணுத்தே

தரமானதும்
சிக்கனமானதுமான
சமையல் சாதனம்



விமலா

விமலாவில் தயாரான சமையல் ஒரு தனிப்பட்ட ருசியும், மணமும் பெற்றிருக்கும். உணவில் இதற்குமுன் கண்டிராத சுவையை அளிக்கிறது. வெறுப்பையும், திகட்டலையும் கொடுக்கும் மற்ற சமையல் சாதனங்களை அறவே விட்டு விட்டு தரத்தில் உயர்ந்ததும், சிக்கனமானதுமான விமலா சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உபயோகித்து பண்டங்களை உண்டு மகிழுங்கள்.

விமலா
கொழுப்பு சத்துக்கள்
இல்லாதது




கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிட்.,
ஹைட்ரோஜனேஷன் டிவிஷன்
கள்ளிக்கோட்டை-6 கேரளா

ஆறு கைகள் இருந்தாலும் போறுது போலிருக்கே!



ஒரு Prestige பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் வாங்கிவிடுங்கள்!



பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் உங்கள் பொன்னான சமையல் நேரத்தில் ஒருமணி மிச்சமாக்குகிறது

சமையல் பிரச்சனையை எளிதாக்கவே தயாராகிறது பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர். பிரஸ்டிஜ் சமையல் வழக்கமான சமையலுக்காகும் நேரத்தில் கால்பங்கு நேரத்திலே தயார். அது எளிதானது. அத்துடன் பத்திரமானதும்கூட. 12 வயது சிறுமி கூட கையாளலாம். எரிபொருள் செலவில் எத்தனையோ மிச்சம். பிரஸ்டிஜ் இருந்துவிட்டால் சமைக்கும்போது குழப்பமோ, தடுமாற்றமோ இருக்காது. ஏனெனில் அதில் ஒரே சமயத்தில் மூன்றுவகை சமைக்கலாம். பிரஸ்டிஜில் தயாரான உணவில் சத்து, ருசி, மணம் முதலியவை குறைவதில்லை. பிரஸ்டிஜ் ஆயுட்கால உத்தரவாதம்கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்பும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர்குக்கர் பிரஸ்டிஜ் ஒன்றே.

பிரஸ்டிஜ் ஐந்து அளவுகளில் உள்ளன. உங்கள் குடும்பத்திற்கு தேவையான அளவை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.



இந்தியாவில் பிரஸ்டிஜ்

ஏற்றுமதிக்கு பிரீத்

டிடி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்-16.

TTP-5799 R

காணிக்கை

ஆர்வி

அத்தியாயம் 5

குணத்தில் அஜிதா அவள் அம்மாவைத்தான் அதிகம் கொண்டிருந்தாள். அதனால் ஒரு சமயம் பாஸ்கரனுக்கு அவளைப் பிடிக்கவில்லையோ என்று பார்வதிக்குச் சந்தேகம் இருந்தது. நாகலக்ஷ்மி தங்கள் வீட்டுக்கு வருவதற்குள் இதை நன்றாகக் கேட்டுத் தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

நாகலக்ஷ்மியின் சுபாவம் எப்படியிருந்தாலும் அஜிதா தனக்கு நாட்டுப் பெண்ணாக வர வேண்டும் என்று அவளுக்கு ஆசை. இந்த விஷயத்தில் பாஸ்கரன் பிடிவாதமாக இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை.

''பாஸ்கரா! உங்க மாமி இன்னிக்கு வந்தாலும் வருவாள். அதுக்குள்ளே யோசிச்சு ஒரு முடிவுக்கு வரச் சொல்லிவிட்டுப் போனாரே உங்க மாமா, நினைவிருக்கா ? அவள் வந்தால் என்ன சொல்லப் போறே ?'' என்று கேட்டாள் பார்வதி.

''உம் உம்; நினைவு இல்லாமல் என்ன? வந்தால் வரட்டும்; அன்னிக்குச் சொன்னதைத்தான் இன்னிக்கும் சொல்லப் போறேன். முதல்லே சொல்றது ஒண்ணு, அப்புறம் யோசிக்கிறது ஒண்ணா? இந்த விஷயத்தில் ஸ்ரீராமனைப் போலத்தான் நானும். சொன்னால் அப்புறம் மாத்திக்கிற பேச்சே கிடையாது. யார் வந்தாலும் சரி'' என்றான் பாஸ்கரன்.

''ஏன், உனக்கு அந்தப் பெண்ணைப் பிடிக்கல்லியா? பிடிக்கல்லேன்னா அதைத் தாராளமா எங்கிட்டே சொல்றதுக்கு உனக்கு என்ன கூச்சம்?''

''அப்படி ஒண்ணும் இல்லை. நம்மையெல்லாம் பார்த்தால் அலட்சியமா இருக்கிறதிலே அவளும் மாமி கட்சியைச் சேர்ந்தவள்தான். இருந்தாலும் என்னிடம்அப்படிப் பழக மாட்டாள். எங்கிட்டே அவளுக்கு ஒரு மதிப்பு உண்டு. எனக்கும் அப்படித்தான். அதனாலே பிடிக்கல்லே என்கிற பேச்சுக்கே இடமில்லை.''

''அப்ப உனக்கு அவளைக் கல்யாணம் செய்துக்கச் சம்மதம்தானே?''

''சம்மதம்தான். ஆனா உடனே முடியாது. வந்த பிறகுதான் !''

''அதான் எனக்குப் புரியல்லே. அவளைப் பிடிச்சிருக்குங்கறே; கல்யாணம் பண்ணிக்கிறேங்கறே. அதை எப்பப் பண்ணினால் உனக்கு என்ன?''

''அதையேதான் நானும் திருப்பிக் கேட்கிறேன்! இப்பக் கல்யாணம் ஆனாலும் அவள் தனியா இங்கேயேதான் இருக்கப் போகிறாள். சேர்ந்து இருக்கப் போறதில்லை. இதுக்கு எப்பப் பண்ணிக் கொண்டால் என்ன? சொல்லேன், கொஞ்சம். ஒருத்தர் கவலையை ஒருத்தர் படாமலாவது இருக்கலாமே. கல்யாணம் ஆகிப் பிரிந்து இருந்தால் வீண் கவலைதானே? இதெல்லாம் எதுக்காக?''

''இதுதானே, இதைத் தவிர உங்களுக்குள்ளே வேறே ஒண்ணும் தகராறு இல்லையே? சந்தேகம் அது இதுன்னு ஒண்ணும் இல்லையே ?''

''நல்ல வேளையாக அந்தமாதிரி இப்ப ஒண்ணும் இல்லே. கல்யாணம்னு பண்ணிட்டா வந்துடும். நிச்சயம் வரும். அதான் வேண்டாம் என்கிறேன்.''



''அவ்வளவு தூரம் போய் நீ தனியா இருக்கப் போறே. ஒரு கால்கட்டுன்னு போட்டு வச்சிருந்தால் இஷ்டப்படி இருக்க முடியாது பாரு. நெஞ்சிலே கொஞ்சம் அச்சம் இருக்கும். அதுக்குத் தான் சொல்றார் அண்ணா.''

''அவர் என்ன, அஜிதாவுக்குக்கூட அந்த எண்ணம்தான். கால்கட்டு இருந்தால்தான் துணிச்சல் கொடுத்துப் போகும். இல்லாட்டா கொஞ்சம் பொறுப்பு இருக்கும்னு நான் நினைக்கிறேன். அதையும் தவிர நான் போகிற காரியம் என்ன? படிப்புக்காகவும் பயிற்சிக்காகவும் போறேன். அப்ப இந்தக் கால்கட்டு இருந்தால் எனக்கு இடைஞ்சலாகத்தானே இருக்கும்? தனிக் கட்டையா, ப்ரீயா இருக்கிறது எப்படி, ஊரிலே இருக்கிற பெண்டாட்டியை நினைச்சிண்டு இருக்கிறது எப்படி? எதைப் படிக்கணுமோ அதைப் படிக்க ஓடாது. இவள் எழுதிக்கிண்டே இருக்கிற கடுதாசியைப் படிக்கிறதுதான் வேலையாய் இருக்கும். எல்லாத்தையும் விட நான் முன்னுக்கு வரவேண்டிய காரியம்தான் முக்கியம். இதெல்லாம் எனக்கு இப்ப முக்கியம் இல்லே.''

பார்வதிக்கு அவன் சொன்னதெல்லாம் நியாயமாகவே பட்டது. ''நீ சொல்றது அவ்வளவும் சரிதான். ஆனா இதனாலே அவனோடே உறவேன்னு விட்டுப் போயிடும் போலிருக்கு!'' என்றாள் கவலையோடு.


''அப்படிப் போனால் அதுக்கு நாமதான் என்ன செய்யலாம்? இவாளுக்காக என்னைக் கட்டுப் படுத்திக்க நான் தயாராக இல்லே.''

''அப்ப மாமி வந்தால் நானே அடித்துச் சொல்லிப் பிடட்டுமா?''

''இதுக்குப் போய் அடிப்பானேன்? அடிக்காமலே சொல்லிப்புடு!''

''விளையாட்டுப்பேச்சுக் கிடக்கட்டும்டா, நீ ஒரு பக்கத்திலே. அண்ணாவை நினைச்சாத்தான் எனக்குக் கஷ்டமாய் இருக்கு. ஒண்ணு விட்டதோ, ரெண்டு விட்டதோ, அவாளாலே உதவியிருக்கோ, இல்லியோ, அண்ணான்னு சொல்லிக்க அவரை விட்டா எனக்கு வேறே எந்த நாதிஇருக்கு? இதுவரைக்கும் அவர் நம்ம உதவியை எதிர்பார்த்து வந்ததில்லே. இப்ப அவரே வந்திருக்கார். வந்தவருக்கு நம்மாலே அந்த உதவியையும் செய்ய முடியல்லே, பாரேன். அதை நினைச்சாத்தான் வருத்தமா இருக்கு.''

''வருத்தமாய் இருந்தால் நினைக்காமலே இருந்து விடேன். இந்த நிலையிலே நாம வேறே ஒண்ணும் செய்யறதுக்கு இல்லே. நாம என்னவோ வேண்டவே வேண்டாம்னு சொல்லல்லே. வந்த பிறகு ஆகட்டும்னுதானே சொல்றோம். இது புரியாதா அவருக்கு?





"அவருக்குப் புரிஞ்சாலும் புரியாட்டாலும் உங்க மாமிக்குன்னு புரியணும்! அவளுக்குச் சௌகரியமாய்ச் சொல்லலேன்னு புரியவே புரியாது. அதுவும் நான் சொன்னேன்னு அவளுக்கு ஆத்திரம்தான் வரும்."

"அதான் ஏழைகளா இருக்கிறதுலே உள்ள கஷ்டம். எதைச் சொன்னாலும் ஏறுது; எடுபடாது. எது வந்தாலும் பொறுத்துக்க வேண்டியதுதான். வேறே வழியில்லே. இந்த அம்மா எனக்கு மாமியாரா வந்துட்டா அமெரிக்காவிலே இருந்தாக்கூட நிம்மதியா இருக்க முடியாது. எல்லாம் நல்லபடியாத் திரும்பி வந்த பிறகு பார்த்துக்கலாம்."

"ஒண்ணு செய்யேன். ஊருக்குப் போய்ப் பெரியவனையும் கலந்துக்கோ. அவன் சொல்ற யோசனைப்படி செய். அதுதான் முறை. வீட்டுக்கு அவன்தான் பெரியவன். அவனைக்

தேக்காமே நாம இவ்வளவு கூடச் சொல்லி யிருக்கப்படாது. உங்க மாமி வந்து கேட்டால், ரெண்டு நாளிலே பதில் வரும்னு சொல்றேன்.''

''அதான் வேண்டாம் என்கிறேன். எதிர்பார்க்க வச்சு ஏமாத்தறப்பலே நாம எதுக்காக நடந்துக்கணும்? அதனாலே கோபம்தான் வரும்; நான் சொல்றதை அண்ணா தட்டப் போறதில்லே. அதனாலே நீ விஷயத்தைத் தெளிவாச் சொல்லிடு. அஜிதாவை எனக்குத்தான் கொடுக்கணும்னு அவா நினைச்சா, உண்மையா ஆசைப்பட்டா, நான் திரும்பி வர்ற வரையிலே பொறுத்துக்கட்டும். இல்லையோ, அவர்கள் சௌகரியப்படி செய்துக்கட்டும். இதுதான் முடிவான பேச்சுன்னு சொல்லிடு. உறவு இருந்தாலும் சரி, இதனாலே இல்லாமல் போனாலும் சரி, இதிலேருந்து நான் மாறப் போறதில்லே!''

பார்வதி மேலே பேசத் தோன்றாமல் உட்கார்ந்திருந்த போது பாஸ்கரன் தோல் பெட்டியை எடுத்துத் தன் துணி மணிகளை வைத்துக் கொண்டான்.

''ஊருக்குப் புறப்படலாம்னா?''

''நீதானே இப்ப சொன்னே? நானே அண்ணாவைப் பார்க்கப் போகணும்னு இருந்தேன். நீ சொன்னதும் இன்னிக்கே புறப்படலாம்னு பார்க்கறேன். போய் ஒரு வாரமாவது அங்கே இருந்துட்டு வர்றேன். அப்புறம் எப்ப வரப் போறேனோ? அண்ணாவுக்கும் ஆறுதலாய் இருக்கும். எனக்கும் குழந்தைகளோட இருந்தாப்பலே இருக்கும்'' என்றான் பாஸ்கரன்.

பார்வதிக்கும் அதுதான் தேவலை என்று பட்டது. அதே சமயத்தில் இவன் சொன்னதை யெல்லாம் நாகலக்ஷ்மியிடம் எப்படிச் சொல்வது என்று கவலையாகவும் இருந்தது. பாஸ்கரன் வண்டிக்குப் புறப்படுகிற வரையில் நாகலக்ஷ்மி வரவேயில்லை.

''என்னம்மா இது? ஏன், என்னமோ போல இருக்கே?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேடா. நீ மகராஜனாப் போயிட்டு வா....''

''அண்ணாகிட்டே வேறே ஏதாவது சொல்லணுமா?''

''அவன்கிட்டே எல்லாத்தையும் சொல்லு. அவனுக்கு எல்லாம் சரியாகத் தான் படும். இதை அவன் முடிவுக்கு விட்டுடு. நீயா ஒண்ணும் சொல்ல வேண்டாம். நடக்கிறது நடக்கட்டும்.''

''அண்ணாவுக்கு எதுக்கும்மா அந்தக் கெட்ட பேரு? இது நம்மோடே இருந்துட்டுப் போகட்டுமே. அண்ணாவாலே தான் கெட்டுதுன்னு மாமி பழியைச் சுமத்தணுமா? உனக்கென்ன, மாமி வந்தால் நான் சொன்னதைச் சொல லேன். பழி என்னோடேயே போகட்டும். இதிலெல்லாம் அண்ணாவைப் பிடிச்சு இழுக்காதே!'' என்று சொல்லி விட்டு, பாஸ்கரன் புறப்பட்டுச் சென்றான்.

அவன் போன பத்து நிமிஷத்துக்கெல்லாம் வாசலில் கார் வந்து நிற்கிற சத்தம் கேட்டுப் பார்வதி எட்டிப் பார்த்தாள். வண்டியிலிருந்து இறங்கி வரும் நாகலக்ஷ்மியை வரவேற்பதற்காக ஓடி வந்தாள். நாகலக்ஷ்மி உள்ளே வராமல் வழி நடையிலேயே நின்று விட்டாள்.

''உள்ளே வாயேன் மன்னி. இங்கே நிப்பானேன்?''

''உக்கார்றதுக்கே நேரமில்லே. யாரோ சாப்பிட வரப் போறாளாம். அதனாலே அவசரமாப் போகணும். வர்றதாச் சொல்லிட்டோமேன்னு ஓடி வர்றேன். இல்லாட்டா இப்ப வந்திருக்கவே முடியாது. சித்தே முன்னாடியும் வர முடியல்லே. பாஸ்கரன் எங்கே, உள்ளேயிருக்கானா?'' என்று வேகமாகப் பேசினாள் நாகலக்ஷ்மி.

''இப்பத்தான் பத்து நிமிஷம்கூட ஆகியிருக்காது, அவன் போய். நீ வருவேன்னு சொல்லிண்டேதான் இருந்தோம்....''

''எங்கே போயிருக்கான்? வர நாழியாகுமோ?''

''அவன் இப்ப எங்கே வரப் போறான்? பட்டாபியைப் பார்த்துட்டு வரலாம்னு ஸ்டேஷனுக்குன்னா புறப்பட்டுப் போயிருக்கான்!''

''ஸ்டேஷனுக்கா, ஊருக்கே போறானா?''

''ஊருக்குத்தான்; வீர சோழபுரத்துக்கு!'' என்றாள்.

''நல்ல வேலை செய்தான்! நான் வர்றதுக்குள்ளே போயிடணும்னு போயிட்டான் போலிருக்கு!''

''பாத்தியா, பாத்தியா! நீ இப்படித்தான் சொல்வேன்னு நினைச்சேன்....''

''அது இருக்கட்டும்; என்ன சொல்லிட்டுப் போனான்?''

''உள்ளே வாயேன், சொல்றேன். இங்கேயேதான் நிக்கணுமா?''

''பரவாயில்லே; அவன் சொல்லிட்டுப் போனதைச் சொல்லு.''

''நம்ம அஜிதாவைப் பண்ணிக்கிறதிலே அவனுக்குப் பூர்ண சம்மதம்....''

''அதான் தெரியுமே. அதுக்கு மேலே — ''

''அதுக்கு மேலே தான் போயிட்டு வந்து பார்த்துக்கலாம் என்கிறான்.''

''அதையேதானே சொல்றேன்? அப்ப நான் வர்றேன்!'' என்று நாகலக்ஷ்மி அங்கிருந்தபடியே திரும்பினாள்.

சித்திரவிசித்திர புடவை

கர்வக்காரி புடவை



பாம்பே டையிங் புடவை பார்ட்டியில் கலந்துகொள்ளுங்கள்

பார்ட்டிகளுக்கும் விருந்துகளுக்கும் ஏற்ற பிரின்டுகளுடன் கூடிய புடவைகள். வாட்ரீன் ('டெரீன்'/காட்டன்), நேர்த்தியான சூபர்ஃபைன் வோயில், ஸ்விஸ் வோயில், இப்படி கவர்ச்சி மிக்க பல ரகங்கள். மேலும், புது வகை பாலியெஸ்டர்/காட்டன், பாலியெஸ்டர்/வோயில் மற்றும் ரூபியா புடவைகளும் உள்ளன. சோளிகளுக்காக 60 நிறங்களில் ரூபியா, 120 நிறங்களில் செவ்லின் (பாபலின்) ஸட்டின் மற்றும் 40 நிறங்களில் வாட்ரீன் ('டெரீன்'/காட்டன்) உள்ளன.

ஒவ்வொரு மாதமும் 100 புது வகைகள் வெளிவருகின்றன!

பாம்பே டையிங்


Kleertone

கிளீயர்டோன்-உன்னத மின்சார சாதனங்கள்

கிளீயர்டோன் எல்லாவித மின்சார சாதனங்களுக்கும் ஈடற்ற பேர் பெற்றது. அனைத்துமே நம்பகம், உறுதி, நீடித்த உழைப்பு ஒருங்கிணைந்தவை. நாடெங்கிலுமுள்ள பல்லாயிரம் இல்லத்தரசிகளின் பாராட்டுப் பெற்றவை. ஒவ்வொரு தயாரிப்பும் ஆண்டுக் கணக்கான அனுபவ நுட்பத்தையும், தொழில் நுணுக்கத்தையும் பின்னணியாகக் கொண்டவை.

உங்கள் இல்லங்களுக்கேற்ற கிளீயர்டோன் மின்சார சாதனங்களையே வாங்குவீர். அது நீங்கள் அளிக்கும் பணத்திற்கும் பன்மடங்கான பலனையே தருகிறது.

நாடு பூராவும் உள்ள 1500-க்கும் அதிகமான கிளீயர்டோன் விற்பனையாளர்கள், விற்பனைக்குப் பின்னும் எப்போதும் சேவைசெய்ய காத்திருக்கிறார்கள்.



நேஷனல் ரேடியோ அண்டு எலெக்ட்ரானிக்ஸ் கம். லிட்
(ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸஸ் பிரிவு) பம்பாய்-கல்கத்தா-டெல்லி-சென்னை.

ULKA KL-3-TH

''நீ சொன்னால் ஒரு சமயம் தட்டாமே கேப்பானோ என்னமோ!''

''அதுக்குப் பயந்திண்டு தானே ஊருக்கே போயிருக்கான்!''

''அவன் என்ன சொல்றான், தெரியுமோ ?''

பார்வதி சொல்லப் போவதை எதிர் பார்த்து நாகலக்ஷ்மி சிறிது தயங்கினாள்.

'' 'அஜிதாவை எனக்குக் கொடுக்கணும்னு அவா உண்மையிலே ஆசைப் பட்டா நான் திரும்பி வர வரையிலே பொறுத்துக்கட்டும். இல்லேயோ அவா சௌகரியப்படி செய்துக்கட்டும்' என்றான்.''

''அதைச் சொல்லிட்டானே, இல்லேயோ ? அதுக்கு மேலே என்ன? இப்பவே இவ்வளவு பேசறவன் நாளைக்கு வந்தப்புறம் என்ன சொல்வானோ ?'' என்று பேசிக் கொண்டே நாகலக்ஷ்மி காரை நோக்கி நடந்தாள்.

பார்வதி பின்னாலேயே வந்து, ''நான் என்னத்தைக் கண்டேன்னு என் வாயை அடக்கறான் அவன். நீ கேட்டால்....''

''இந்த அவமானம் போறாது. இன்னொரு தரம் நேரவே கேட்டு அவமானப் படலாம்னு? அவசியமானா வேறே இடம் பார்க்கத்தானே வேணும்?''

பார்வதி ஏதோ சொல்ல வருவதற்குள் வண்டி வெகுதூரம் நகர்ந்து விட்டது.

அத்தியாயம் 6

ரயிலில் போய் இறங்கி; அங்கிருந்து பஸ்ஸில் ஏறிப் போக வேண்டும் வீர சோழபுரத்துக்கு. சின்ன ஊர்தான் ; அழகான ஊர். விடியற்காலை கிளம்பிய முதல் பஸ்ஸிலே ஏறி, சூரியோதயம் ஆவதற்குள்ளேயே அங்கே போய் இறங்கினான் பாஸ்கரன்..

பஸ் போன பிறகு சாலையில் தனியே நின்ற பாஸ்கரனை மாங்குயில் ஒன்று இருந்த இடத்திலிருந்தே எட்டின வரையில் ஒங்கும் இனிய குரலெடுத்துக் கூவி வரவேற்றது. சாலைப் புளிய மரத்திலிருந்த நாரத்தங் குருவிகள் சிலுசிலுவென்று சிறகுகளினால் சலசலத்தன. வேலியோரத்துச் செடிகளில் இருந்த என்னென்னவோ மலர்கள் அவனைப் பார்த்துப் பூத்துச் சிரித்தன. சாலையை அடுத்திருந்த அரசங் குளமும் கிழண்டை மணல் பாதையும் பசு மணம் கமழும் இளம் காற்றும் அவனை உல்லாசமாக வரவேற்றன.

அவன் அரசங் குளத்தின் தென் புறக் கரையோடு நடக்கத் தொடங்கினான். அங்கிருந்து பார்த்தாலே இடது புறத்தில் பள்ளிக் கட்டடமும் வலது புறத்தில் வீட்டு வரிசைகளும் கண்ணிலே பட்டன. அவனுடைய அண்ணா இருந்த வீடு வெள்ளைக் காறையும் சிவந்த நாட்டோடுமாக, பச்சென்று அடர்ந்த மரங்களுக்கிடையே தெரிந்தது. அண்ணாவையும் மன்னியையும் ஆணும் பெண்ணுமான இரு குழந்தைகளையும் கொண்ட அந்த வீடு கேவலம் கல்லும் மண்ணும் மரமும் சிமெண்டும் கொண்டு கட்டிய வீடாகவே தெரியவில்லை. எலும்பும் சதையும் உடலும் உயிருமாக நிற்கும் உருவமாகவே தென்பட்டது.

அரசங் குளத்தில் தண்ணீர் அத்தனை அதிகம் இல்லை. இறக்கத்தில் யாரோ இரண்டு பேர் குச்சியை ஒடித்துப் பல் விளக்கிக் கொண்டிருந்தார்கள். யாரோ ஒரு பெண்மணி மணலால் குடத்தைத் துலக்கிக் கொண்டிருந்தாள். மூவருமே புதிதாக வருவது யார் என்று தொடர்ந்து பார்த்தார்கள். திடீரென்று பின்னாலிருந்து ஒரு கை தன் கையிலிருந்த தோல் பையைத் தூக்கிக் கொள்ள முயல்வதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான் பாஸ்கரன்.

அறிமுகமில்லாத முகம்; கள்ளமில்லாத களிப்போடு, ''வாங்க! சின்ன எட்மாஸ்டரையா வீட்டுக்குத்தானே ? வாங்க, நான் எடுத்தாறேன்'' என்று கைப் பையை விடாமல் வாங்கிக் கொண்டது.

பாஸ்கரனுக்கு வியப்புத் தாங்கவில்லை. அதெப்படி இந்த ஆள் அத்தனை குறிப்பாகக் கண்டுபிடித்தான் என்று ஆச்சரியமாய் இருந்தது.

''என்ன தயங்குறீங்க? முகச் சாடையிலேருந்து ஒருநிதானத்திலே யாருன்னு தெரிஞ்சுக்க முடியாதுங்களா? நான் அந்தப் பள்ளிக்கூடத்திலேதாங்க சேவகம் பாக்குறேன். அவுங்க தம்பிதானே நீங்க ?''

பாஸ்கரன் தலையை ஆட்டி ஒப்புக் கொண்டான்.

''எம் பேரு நாகசாமி. ஐயா வீட்டுக்குத்தான் வாறேன். இப்ப சத்தியா இவங்கதானே ஆக்டிங் பாக்குறாங்க. தபாலு — கிபாலு வாங்கப் போகணுமில்லே? அதனாலே வெள்ளென வந்துடுவேனுங்க'' என்று தானாகவே கூறிக் கொண்டான்.



" தலைதீபாவளிக்கு வருகிற என் மாப்பிள்ளை தங்க, மாடி அறைக்கு ஏற்பாடு பண்ணிட்டேன் !"

பிறகு சற்றுப் பொறுத்து, " மெட்ராஸிலேருந்தா வர்றீங்க ?" என்று தெரிந்தவன் போல் விசாரித்தான்.

"ஆமாம்."

"அதான் மொத பஸ் மூவேந்தன் டாண்ணு ஆறுக்கெல்லாம் அரசங்குளத்தடியிலே கொண்டாந்து விட்டுப்புடறானே ! முந்தியெல்லாம் போலேயா ? இப்ப அல்லாம் எவ்வளவு சௌகரியமாப் போயிடிச்சி! அதிலேயும் இந்த ஊரு ஹைஸ்கூலாயிட்டதிலேருந்து சொல்லிக்க வேண்டியதில்லே. பெரிய டவுனுட்டமாவுல்லே ஆயிடிச்சு ?"

கேள்வியும் பதிலுமாக அவனே சொல்லிக் கொண்டு பெருமை பிடிபடாமல் முன்னால் நடந்தான். யாரோ எதிரில் வந்த ஒருவரைப் பார்த்து இவனாகவே வலுவில், "நம்ம சின்ன எட்மாஸ்டரையா இல்லே, அவுங்களோட தம்பி. மெட்ராஸிலேருந்து வருது !" என்று மிடுக்கோடு தெரிவித்தான். அந்த ஆசாமி இதைக் கேட்டதும் பாஸ்கரனைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டு விட்டுப் புன்னகையும் புரிந்தார்.

"இந்தா இருக்குல்லே, அதான் நம்ம வீடு. ரொம்பக் கிட்ட!" என்று நாகசாமி தைரியம் கூறினான்.

பாஸ்கரனுக்கு என்னவோ எல்லாம் இதமாய் இருந்தது. மண் வளப்பம் போல் மணக்க இருந்தது. அமெரிக்கா எப்படி எப்படியெல்லாமோ இருக்கலாம். ஆனால் இப்படி, இந்த வியக்தியோடு நிச்சயம் இருக்காது என்று எண்ணிக் கொண்டான். பாஸ்கரனைக் கண்டதும் பசுவைக் கறந்து கொண்டிருந்த மன்னி பாதியிலேயே எழுந்து வந்து விட்டாள். பையனும் பெண்ணும், "சித்தப்பா !" என்று துள்ளிக் கொண்டு வந்தன. பட்டாபிக்குப் பேச்சே பேச வரவில்லை. ஆனந்தம் தாளாமல் வாயைப் பிளந்தபடி நின்றார்.

"அதிசயமான்னா இருக்கு, அமெரிக்கா போறவன் இங்கே வந்தது? நீ இங்கெல்லாம் எங்கே வரப் போறேன்னு நினைச்சிண்டிருந்தோம்!" என்று மன்னி பால் செம்போடு படியிலேயே நின்று விட்டாள்.

"அச்சா, அமெரிக்கா ! — எப்போ, சித்தப்பா?" என்றாள் ரேணு, பாட்டாகவே.

ராமு காலேயே கட்டிக் கொண்டுவிட்டான்: "அதெல்லாம் முடியாது. நானுந்தான் வருவேன் !"

"ஊட்லேருந்து வந்துக்கிட்டேயிருந்தேனா, அரசங் குளத்தடியிலே மூவேந்தன் நின்னுட்டுப் போவுதே, யாரு வர்றாங்கன்னு விரைசா வந்தேனா, அப்பவே டாண்ணு புரிஞ்சிக்கிட்டேன். அப்புறம் கையிலேருக்கிற பையை நானா வாங்கிக்கிட்டு, கொணாந்து சேத்துப்புட்டேன்!" என்று முடித்தான் நாகசாமி.

"நேத்திக்கு வந்த லெட்டர்லே மத்ததெல்லாம் எழுதியிருந்தே. நீ வரப் போறதா எழுதல்லியே. திடீர்னு புறப்பட்டியோ ?" என்று கேட்டார் பட்டாபி.

"வரதாப் பிளான்தான். அதை எழுத விட்டுப் போச்சு."


"அண்ணாவைப் பார்க்க வர்றதுக்கு அறிவிப்புக் கொடுக்கணுமா, என்ன ? நினைச்சா உடனே வரவேண்டியதுதானே ! சரி, பல்லைத் தேய்ச்சுட்டு வா, காப்பி சாப்பிட! பேசறதையெல்லாம் மெதுவாப் பேசிக்கலாம். ராமு, சித்தப்பாவை அழைச்சிண்டு போ !" என்று மன்னி ஒரு நிதானத்துக்கு வந்து சொன்னாள். "பால் இன்னும் கொஞ்சம் கறக்கலாம்; இருந்தா இருந்துட்டுப் போகட்டும். நாகசாமி, அந்தக் கன்னுக்குட்டியை அவுத்து விட்டுடு. கூட இருந்தா அது குடிச்சிட்டுப் போகட்டும்" என்று கூறியவாறே உள்ளே போனாள் பட்டாபியின் மனைவி. (தொடரும்)





பிரபல வங்க நாவலாசிரியரான விமல்மித்ர கல்கத்தாவில் 18 - 3 - 1912ல் பிறந்தார். வங்காள இலக்கியத்தில் எம்.ஏ. பட்டதாரியான இவர் 1956 ஜூன் வரை ரயில்வேயில் டெபுடி சீப் கண்ட்ரோலராகப் பணியாற்றியவர். இவரது பாடல்கள் மிகப் பிரசித்தமானவை. ஐம்பத்திநாலு புத்தகங்களுக்குமேல் எழுதிப் புகழ் பெற்றுள்ள திரு விமல் மித்ர இருபது நாவல்களும் 250 சிறுகதைகளும் [illegible] நாடகங், [illegible] இருக்கின்றனர்.

[illegible] இவர் [illegible] ஆண்டுகளாக எழுதி வருவதோடு காலத்துக்கேற்பத் தம் எழுத்திலும் மாற்றம்காட்டி என்றென்றும் புதுமையோடு புதுப் பிரச்னைகளை அணுகுகிறார்.



இதுவும் கண்டேன்!

விமல் மித்ர

"சொல்லுங்கள். எங்கிருந்து ஆரம்பிக்கலாம் கதையை? தொடக்கத்திலிருந்தா, முடிவிலிருந்தா?" என்று கேட்டார் ரிச்சர்ட்.

கல்கத்தாவி லிருந்து பம்பாய் போய்க் கொண்டிருந்தேன் நான். ரிச்சர்டுடன் வழியில்தான் அறிமுகம் ஏற்பட்டது. அதுவும் நான்கு மணி நேர அறிமுகம். மாலை ஆறு மணிக்கு நான் பறக்கத் தொடங்கினேன், 'தம் தம்' விமான நிலையத்திலிருந்து; வைக்கவுண்ட் ஆகாய விமானத்தில். மிஸ்டர் ரிச்சர்டின் ஸீட்டின் எண் த்ரீ-ஸி. என்னுடையது த்ரீ-டி. நாங்கள் இருவரும் நெருங்கி ஒட்டினாற்போல் உட்கார்ந்திருந்தோம். அவருக்கு ஏதாவது பேச வேண்டும் என்று மனம் துடித்தது போலும். "நீங்கள் சைவமா? 'ஆர் யூ எ வெஜிடேரியன்?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார் அவர்.

நான் சைவமா அசைவமா என்பதைக் கேட்டறிந்து ரிச்சர்டுக்கு ஆகவேண்டிய காரியம் எதுவும் இல்லை. எனவே நான் புரிந்து கொண்டேன், அவருக்குப் பேச்சுத் துணைக்கு ஓர் ஆள் வேண்டும் என்று. அப்புறம் சிறுகத் தொடங்கிய பேச்சு வளர்ந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்தது. சுதந்திரம் அடைந்தபின் ஓடிய இத்தனை ஆண்டுகளில் அது கண்ட முன்னேற்றங்கள், இழைத்த தவறுகள்- இன்னும் என்ன என்ன இட்டங்கள் ஈடேறவில்லை என்பது போன்ற உபயோகமற்ற பேச்சுக்கள் நடந்தன. அதுபோன்ற விஷயங்களில் வெளிநாட்டவர்கள் நம்மைக்காட்டிலும் அதிகமாகவே அக்கறை காட்டுகிறார்கள். மிஸ்டர் ரிச்சர்டோ இந்தியாவைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை. கௌதம புத்தா, லார்டு சைதன்யா, விவேகானந்தா போன்ற ஆன்றோர் வாழ்ந்த நாடு. 'லாண்ட் ஆஃப் டெம்பிள்ஸ்' அதாவது கோவில்கள் நிறைந்த நாடு. 'தி கிரேட் இண்டியா!' 'பெரும் பூமி பாரதம்' அங்கே காஷ்மீர், இங்கே குமரிமுனை. இமாலயமும், கங்கையும்! பண்டாரப் துறவிகள், மதுராவின் பண்டாக்கள், பிருந்தாவனத்துப் பிச்சைக்காரர்கள், இல்லித் தாங்காக்காரர்கள் — என்று எல்லா

விஷயங்களைப் பற்றியும் பேச்சு நடந்தது. எல்லாவற்றையும் பார்த்த பிறகு அவர் கடைசியாகக் கல்கத்தா வந்தார். கல்கத்தாவில் சௌரங்கியில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார். இப்பொழுது தன் தாய்நாட்டுக்கு — அமெரிக்காவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

கல்கத்தாவைப் பற்றிப் பேச்சுத் தொடங்கியதும் எனக்குச் சிறிது ஆவல் அதிகமாகியது. ''கல்கத்தா உங்களுக்குப் பிடித்ததா? எப்படி இருந்தது?'' என்று நான் கேட்டேன்.

மிஸ்டர் ரிச்சர்ட் என் புறமாகத் திரும்பி உட்கார்ந்து, ''சொல்லட்டுமா?'' என்று கேட்டார்.

''சொல்லுங்கள்!'' என்றேன் நான்.

''சொல்லுங்கள். எங்கிருந்து தொடங்கட்டும்? தொடக்கத்திலிருந்தா, முடிவிலிருந்தா?'' என்று கேட்டார் மிஸ்டர் ரிச்சர்ட்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்கு விளங்கவில்லை'' என்றேன் நான்.

மிஸ்டர் ரிச்சர்ட் கூறினார்: ''மொத்தம் ஒரே ஒரு நாள்தான் தங்கினேன், கல்கத்தா ஹோட்டல் ஒன்றில். ஒரு நாள் அநுபவத்தைக் கொண்டு ஓர் இடத்தைப் பற்றி முடிவாக ஒன்று கூறுவது உசிதம் இல்லை. என்றாலும், அந்த முதல் நாளிலேயே ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதன் மூலம் உங்களுக்கு ஒரு முழுக் கதையே கிடைக்கும். ஆனால் அந்த நிகழ்ச்சியின் முடிவை நான் என் கண்ணால் பார்க்க முடியவில்லை.''

''அப்படியானாலும் ஆரம்பத்திலிருந்தே சொல்லுங்களேன்!'' என்றேன் நான்.

''நான் வந்த அன்று இரவே நடந்தது அந்த நிகழ்ச்சி. எங்கள் விமானம் மாலை நான்கு மணிக்கு கல்கத்தா வந்தது. விமான நிலையத்திலிருந்து நேராக ஹோட்டலுக்குச் சென்றேன். மிக நேர்த்தியான ஹோட்டல்! பெரும் கட்டடம்! எனக்கென்று முன்னாலேயே அறை ரிசர்வ் ஆகியிருந்தது. பையன், சமையற்காரன், மானேஜர், காஷியர், போர்டர் எல்லாரையும் பார்த்தேன். எல்லோரும் என்னை மிகவும் நன்றாக உபசரித்தார்கள். நான் என்ன சாப்பிடுகிறேன், என்ன என்ன உணவு வகைகள் எனக்குப் பிடிக்கும்—ஹாட்டா, கோல்டா? எந்த நேரத்தில் என்ன பொருள் எனக்குத் தேவைப்படும்? — சிறுசிறு விஷயங்களிலும் அவர்கள் அக்கறை காட்டிக் கவனம் செலுத்தினார்கள். சிற்றுண்டி அருந்திய சிறிது நேரத்துக்கெல்லாம் நான் நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் போய் விட்டேன். மார்க்கெட் சென்று சில பொருள்கள் வாங்கினேன். 'பங்காலிஸ் ஆர் ஃபென்ஸி பீப்பிள்'—வங்காளிகள் விந்தை மனிதர்கள் என்பதைக் கண்டேன். இன்றும்கூட அவர்கள் ஃபாரினர்ஸ் (அயல் நாட்டவர்)களைத் தெய்வமாக மதிக்கிறார்கள்!''

மிஸ்டர் ரிச்சர்ட் சற்று நிறுத்தி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

''மேலே...?'' என்று கேட்டேன் நான்.

ரிச்சர்ட் மீண்டும் தொடங்கினார்: ''உங்களுடைய இந்தக் கல்கத்தா நகரம் இருக்கிறதே, இது மிக நேர்த்தியானது. ஒரு காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இரண்டாவது நகரமாக அல்லவா இது இருந்திருக்கிறது? மேற்கே எத்தனை பெரிய மைதானம்! அதுவும் 'ஹார்ட் ஆப் தி ஸிடி'—இதய ஸ்தானத்திலே! எங்குமே நான் கண்டதில்லை இது போல. கவர்னர் மாளிகையையும் கண்டேன். உங்கள் மகாத்மா காந்தி ஒரு முறை சொன்னார்: 'விடுதலைக்குப் பின் இங்கே பொருட்காட்சி சாலை அமைக்கப்படும்' என்று. அங்கே பொருட்காட்சியைக் காணப்போவதாக நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் என் வங்காளி வழிகாட்டி சொன்னார், அங்கே பொருட்காட்சி சாலை அமைக்கப்படவில்லை என்று. சரி, அதுவும் ஒருவகையில் நல்லதுதான்! இத்தனை நாட்கள் போராடிய பிறகு சற்று இளைப்பாறுவது இயல்புதானே என்று எண்ணினேன். அப்புறம் கேள்விப்பட்டது என்னவென்றால், எல்லாமே அப்



படி அப்படியேதான் இருக்கிறதாம். முன்பு போலவே, கார்ட் ஆஃப் ஆனர்! எட்டுக் குதிரை மெய்காவல்! ரெடி சாங்க்! பிரிட்டிஷ் சீனிலிருந்து இருந்த எல்லாப் பொருள்களையும் இந்திய வெள்ளைகளும் அப்படியே அனுபவிக்கிறார்களாம். —ஒரு மாற்றுக்கூடக் குறையாமல். — வழிகாட்டியிடம் பேச்சுக் கொடுத்ததில் இது தெரிய வந்தது. அவற்றைக் காண எனக்கு ஒரு திருப்தி. ஆனால் ஒன்று: அந்த மைதானத்திலிருந்து ஜெனரல் ஒட்டிரமின் சிலையை அகற்றி விட்டு, அதற்குப் பதிலாக மகாத்மா காந்தியின் சிலையை வைத்துள்ளார்கள் என்பதைக் கண்டேன். வெரி குட்! நல்லதுதான் செய்தார்கள்! கல்கத்தாவைப் பார்த்து எனக்கு ரொம்பவும் சந்தோஷம் ஏற்பட்டது! இத்தனை நாட்களும் மிஸ் மேயோவையும் எட்வர்ட் ஹக்ஸ்லேயையும் படித்து எனக்கு எத்தனையோ தவறான கருத்துக்கள் ஏற்பட்டிருந்தன. இப்பொழுது எல்லாம் தீர்ந்தன. எல்லாம் பொய், எதுவுமே பிரசாரம், புரொபகாண்டா, மிஸிபிகேஷன் என்பதை நான் உணர்ந்தேன். எப்பொழுதோ கிழக்கிந்தியக் கம்பெனி இந்த நகரத்தை நிர்மாணித்துள்ளது. இப்பொழுது அந்த மக்கள் எல்லாம் எங்கே? இத்தனை நாட்களுக்குப் பிறகு அந்தப் பிரிட்டிஷ் வியாபாரிகள் எங்கு தங்கி விட்டார்கள்? அந்த ராணி விக்டோரியா எங்கே போனாள்? இந் நாட்டுக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இடம் கொடுத்து இதன் மதிப்பை உயர்த்தினளே! — நான் வரலாற்றில் படித்திருந்தேன். இந்தியர்கள் மகாராணி விக்டோரியாவை அம்மா என்று அழைத்ததாகக்கூட. அவருக்குத் தந்தியில் வாழ்த்து அனுப்பியதாகவும் படித்திருக்கிறேன். அந்த நாடு, அதே தேசம் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை பெற்றது! இது பிரிட்டனுக்குக்கூடக் கர்வமூட்டும் விஷயம்தான்; இந்தியாவுக்குமேகூடத் தான். ஆகா! என்ன அழகு! என்ன அழகு!''

அழகிலேயே அவர் வட்டமடிக்கக்கூடாது என்பதற்காக ''மேலே அப்புறம்?'' என்றேன்.

''அப்புறம் டின்னரை முடித்துக் கொண்டு நான் என் அறையில் வந்து படுத்துவிட்டேன். தூங்குவதற்கு முன் பையன் எனக்குக் காப்பி கொண்டு வந்தான். நான் கைடு புத்தகத்தைப் பார்த்தவாறே தூங்கி விட்டேன். திடீரென்று என் தூக்கம் கலைந்தது. இரவு எத்தனை நேரம் ஆகியிருக்குமோ, எனக்குத் தெரியாது. யாரோ கதவைத் தட்டுவது போல் தோன்றியது எனக்கு. முதலில் அது வீண் பிரமை என்று எண்ணினேன். ஆனால் சிறிது நேரத்துக்குப் பின் மீண்டும் தட்டினாற்போல் தோன்றியது. நான் எழுந்து உட்கார்ந்தேன். உள்ளிருந்தவாறே, '' 'ஹூ இஸ் தட்?'-யார் அது?'' என்று கேட்டேன்.

சிறிது நேரம் வரை அமைதி நிலவியது. கேள்விக்கு விடை கிடைக்காமற் போகவே, நானே எழுந்து சென்று கதவைத் திறந்தேன். என் அறைப் பையன் ஹாஷிம் அலி நின்று கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அடிக்கடி தலை குனிந்து சலாம் வைத்தான். ''எசமான், மன்னிக்கணும்!'' என்றான் வெகு பிரயாசையோடும் பயத்தோடும்.

''என்ன ஹாஷிம் அலி! உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டேன் நான்.

''ஒருவர் எசமானரைக் காண வந்திருக்கிறார்!'' என்று மென்று விழுங்கினான் ஹாஷிம் அலி.

''யார் அது?''

அதுவரை என் பார்வையில் யாரும் படவில்லை. மொட்டை மாடி ஹாலில் இருளோடு இருளாக ஓர் ஆள் நின்றுகொண்டிருந்ததை அப்புறம்தான் கவனித்தேன். ஓர் அடி எடுத்து வைத்து அவன் என் எதிரே வந்தான். அமெரிக்க முறையில் சட்டையும் பாண்டும் அணிந்த ஓர் இளைஞன் அவன். இன்றைக்கிருந்தால் ஒரு முப்பது வயதிருக்கலாம் அவனுக்கு! உடல் நிறம் கறுப்பும் இல்லை; சிவப்பும் இல்லை. கையில் ஒரு தோல் 'போர்ட்போலியோ' பை இருந்தது. அருகில் வந்து அவன், ''குட் ஈவினிங் சார், குட் ஈவினிங்!'' என்றான்.

''குட் ஈவினிங். எஸ்....!'' என்றேன் நான்.

''யூ வாண்ட் ஆர்டிஸ்ட் ஸார்? உங்களுக்கு ஆர்டிஸ்ட் வேண்டுமா?'' என்று கேட்டான் அவன்.

'ஆர்டிஸ்டா? ஆர்டிஸ்ட் என்றால் என்ன ஆர்டிஸ்ட்? ஓவியம் வரைகிறவரா? என்னை எதற்கு ஒருவர் படம் வரைய வேண்டும்?'

எனக்கு அவன் கேள்வி விளங்கவில்லை. ''ஆர்டிஸ்ட் என்றால் என்ன பொருள்?'' என்று கேட்டேன் நான்.

''வெரி குட் ஆர்டிஸ்ட் ஸார், யங் அண்டு பியூடிஃபுல்'—நல்ல ஆர்டிஸ்ட் ஸார், இளமை, அழகு...'' என்று இழுத்தான் அவன்.

''என்ன சொல்கிறாய் நீ?''


''இளம் பெண்கள் சார், எல்லோருமே கல்லூரிப் பெண்கள். என்னிடம் இதோ, அவர்களுடைய புகைப்படங்களே இருக்கின்றன, பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று கூறியவன் தன் பையைத் திறந்து படங்களைக் கும்பலாக எடுத்துப் போட்டான். விதம் விதமான படங்கள்! எல்லாம் இளம் பெண்களினுடையவை. அவ்வளவு பேரும் இனிய இளம் பெண்கள்! அழகு என்றால் என்ன அழகு! நன்றாக உடை உடுத்தி அழகுக்கு அழகு சேர்த்திருந்தார்கள்! ஏறக்குறைய ஒரு டஜன் பெண்கள்!

படங்களைக் காட்டிய அவன் அவர்களைப் பற்றி வர்ணிக்கவும் தொடங்கி விட்டான்: ''உங்களுக்கு யார் பிடித்தமோ, யாரை நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்களோ, அவர்களை... எல்லோருமே ரெஸ்பெக்டபிள் ஸொஸைட்டி கேர்ல்ஸ்! மரியாதை மிகுந்த குடும்பப் பெண்கள்! இவள்தான் மிஸ் லொலிடா! வயது பத்தொன்பது. இவளுக்குப் பதினேழு தான்! இதோ பார்க்கிறீர்களே, இவள் பஞ்சாபிப் பெண்! தலைமயிரை 'பாப்' செய்துகொண்டிருக்கிறாளே, இவள்தான்! — எல்லாவிதமான 'ஆர்டிஸ்ட்'களும் கிடைப்பார்கள். அத்தனை வகைப் பெண்களும் என்னிடம் இருக்கின்றார்கள். சைனீஸ், பர்மீஸ், வங்காளி —ஆல் வெரைட்டீஸ்!''

நான் மௌனமாயிருப்பதைக் கண்ட அவனுக்கு ஓர் உத்வேகம் உண்டாயிற்று. ''வேறு ஏஜெண்டுகள்கூட உங்களிடம் வரலாம். விதம்



இனிய பண்டிகை
நாட்களில்
இசைக் கலைஞர்கள்
உங்கள் இல்லத்தில் வந்து
நிரந்தர செவி இன்பம்
வழங்கிட வைப்பது
எப்படி ?
நெல்கோ ரேடியோ
அல்லது
டிரான்ஸிஸ்டர்
வாங்குவது மூலம்
ULKA-NE-18 TAM
① தாரா—மீடியம் வேவ் செட் விலை ரூ. 115/-* மட்டுமே
② திருப்தி—2-பாண்ட் டிரான்ஸிஸ்டர் ரூ. 175/-* மட்டுமே
③ விவிக்கான் 321—2-பாண்ட் டீலக்ஸ் டிரான்ஸிஸ்டர் ரூ. 235/-* மட்டுமே
④ தரங்க்—3-பாண்ட் போர்ட்டபிள் செட் ரூ. 298/-* மட்டுமே
⑤ தருண்—3-பாண்ட் ஏஸி மெயின்ஸ் செட் ரூ. 315/-* மட்டுமே
⑥ தாராணு—4-பாண்ட் ஏஸி மெயின்ஸ் செட் ரூ. 415/-* மட்டுமே
* வரிகளை உள்ளிட்டது, பிரதேச வரிகள் தனி
நெல்கோ
டாடா எலக்ட்ரிக் கம்பெனியின்
ஆர் & டி லாபரேட்டரிகளால்
டிஸைன் செய்யப்பட்டது.
நேஷனல் ரேடியோ அன்ட்
எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி லிட்.
பம்பாய்-கல்கத்தா-டில்லி-சென்னை



பாலுசேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

"பாலுசேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5

தந்தி: 'EVERMANS' போன்: 85834

மதராஸ் சிட் பண்டு 1961 ஆக்ட்படி கீழ்க்காணும் சீட்டுகள் நடத்தப்படுகின்றன

(மதராஸ் ஆக்ட் நெ. 24 OF 1961)

நீண்ட காலச் சீட்டுகள்

50 மாதங்கள் — 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTM	ரூ. 200/-	ரூ. 10,000/-
LTN	ரூ. 100/-	ரூ. 5,000/-
LTO	ரூ. 50/-	ரூ. 2,500/-
LTP	ரூ. 20/-	ரூ. 1,000/-

40 மாதங்கள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-

குறுகிய காலச் சீட்டுகள்

25 மாதங்கள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-

சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள்: புது டில்லி — பம்பாய் — பெங்களூர் — கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

விதமான புகைப்படங்களை எடுத்து வருவார்கள். ஆனல் உண்மையைக் கேட்டால் நாணயக் குறைவாக நான் நடந்துகொள்ள மாட்டேன். அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்'' என்ருன்.

பிறகு அவன் படங்களை அடுக்கியபடியே, ''உங்களுக்கு என்மேல் நம்பிக்கை ஏற்படவில்லை போலிருக்கிறது. வெளி நாட்டவர் என்று கண்டு கொண்டு இரவு நேரத்தில் வந்து நான் உங்களை ஏமாற்றுவதாகவும் ஒரு வேளை நீங்கள் நினைக்கலாம். பலர் இதுபோல் செய்வதும் உண்டு. அதுவும் முக்கியமாக இந்தத் தொழிலில் உள்ளவர்கள். ஆனல் என்னை நம்புங்கள். என்னைப் பற்றி நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், நான் ஒன்று மட்டும் சொல்லிக் கொள்ள முடியும். நான் ஓர் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரிகூட!'' என்ருன். அதே கையோடு ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து என் கையில் அழுத்தினன். அதில் எழுதியிருந்தது: ஏ.வி. சக்கரவர்த்தி — ஆர்டிஸ்ட் ஸப்ளையர்.

ஹாசும் அலி தொலைவிலேயே நின்று கொண்டிருந்தான். இப்பொழுது அவனும் என்னை நெருங்கி வந்தான். ''எசமான்! இவர் தான் இந்த ஹோட்டலில் தங்குகிறவர்களுக்குப் பெரும்பாலும் 'சர்விஸ்' செய்கிறவர். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்!'' என்று சிபாரிசு செய்தான்.

''இவர்களுக்கு எல்லா விவரமும் தெரியும், சார்! எல்லாமே தெரியும். நான் மோசடி—கேசடி செய்ய மாட்டேன். நீங்கள் ஒரு முறை என்னை 'டெஸ்ட்' செய்து பாருங்கள்! நான் ஏதாவது தாறுமாருக நடந்து கொண்டால் தங்களிடம்தான் என் கார்டு இருக்கிறதே!'' என்ருன் சக்கரவர்த்தி.

என் வியப்புக்கு ஓர் எல்லையே இல்லை. கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் ஒரு பட்டதாரி இவனுன், அதோடு நல்ல அழகன்—முகத்திலும் கண்ணியம் தெரிகிறது. — இந்தத் தொழிலை எப்படி மேற்கொள்ள முன்வந்தான்? இதற்கு என்ன காரணம் இருக்கக் கூடும்? — எத்தனையோ இடங்களை நான் பார்த்திருக்கிறேன். — உலகம் முழுவதுமே சுற்றியிருக்கிறேன். 'ஃபார் ஈஸ்ட்', 'மிடில் ஈஸ்ட்'களில் உள்ள எல்லா நகரங்களுக்கும் சென்றிருக்கிறேன். ஆனல் இது போன்ற நிகழ்ச்சி என் விஷயத்தில் நடந்ததில்லை. அதனல்தான் வாயடைத்துச் சிலையாகச் சமைந்திருந்தேன். சக்கரவர்த்திக்கு இதன் காரணமாக இன்னும் துணிச்சல் ஏற்பட்டு விட்டது. '' 'ரேட்'டைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள்! என் 'ரேட்' எல்லாம் 'ஃபிக்ஸ்ட்'. ஆனல் கம்பேரிடிவ்லி சீப். குறைச்சல். பொய் இல்லை; ரொம்பக் குறைச்சல்! மணிக்கு ஐம்பது ரூபாய்! பத்து டாலர்களுக்கு உள்ளே தான்!'' என்ருன்.

நான் அதற்கு மேலும் அவன் பேச்சை வளர்த்த விரும்பாமல், ''ஹோட்டல் மானேஜரிடம் நீங்கள் பர்மிஷன் வாங்கியிருக்கிறீர்களா?'' என்று கேட்டேன். என் கேள்வியைச் செவிமடுத்தவன் துணுக்குற்ருன். ''பர்மிஷனு?'' என்று வியப்பும் கேள்விக் குறியும் தொனிக்கக் கேட்டான்.



''கல்யாணத்துக்குத் தயாரா உங்களுக்கு ஒரு பெண் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேனே!''

''ஆமாம், மூன்று வருஷமாக அவள் கல்யாணத்துக்குத் தயாராகத்தான் இருக்கிருள். இன்னும் மாப்பிள்ளைதான் கிடைக்கலே!''

''ஆமாம், நீங்கள் ஆர்டிஸ்ட் சப்ளை செய்யும் தொழில் செய்கிறீர்களே, ஹோட்டலுக்குள்ளே வந்து. இதைப் பற்றி மானேஜருக்கு ஏதாவது தெரியுமா? அவரிடம் முன்கூட்டியே அனுமதி பெற்றிருக்கிறீர்களா?'' என்று குரலில் அழுத்தம் கொடுத்துக் கேட்டேன்.

என் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று சக்கரவர்த்திக்குப் புரியவில்லை. அவன் ஹாசும் அலியைப் பார்த்தான். அப்புறம், ''இதற்குப் 'பர்மிஷன்' எதற்கு ஸார்?'' என்று மென்று விழுங்கியவாறே கேட்டான்.

''பர்மிஷன் இருக்கிறதா, இல்லையா? சொல்லு!'' — என் குரலைக் கேட்டு அவன் கதிகலங்கி விட்டான்.

''உம், சொல்லு சீக்கிரம். பர்மிஷன் இருக்கிறதா, இல்லையா? குவிக்!'' என்று நான் அவசரப்படுத்தினேன்.

ஆள் அப்படியே அயர்ந்துவிட்டான். இங்கும் அங்கும் பார்க்கலானன், எப்படியாவது என் முன்னிலையிலிருந்து கம்பி நீட்டிவிட வேண்டும் என்ற நோக்கத்துடன். ஹாசும் அலியும் அதுவரைக்கும் அருகில்தான் நின்று கொண்டிருந்தான். இப்பொழுது திரும்பிப் பார்த்தால் ஆளைக் காணேம்! எங்குதான், எப்படித்தான் ஓடி ஒளிந்தானே? இவனுனும் நகரத் தொடங்கவே, நான் சட்டென்று தாவி அவன் கையைப் பிடித்துவிட்டேன். ''வா, இப்பொழுதே மானேஜரிடம் போவோம்!'' என்றேன்.

என் போக்கைக் கண்டவனுக்கு முகம் ஒரேயடியாக வெளிறி விட்டது. அழவே தொடங்கி விட்டான். ''சார், என்னை விட்டு விடுங்கள், சார்! என்னை விட்டுவிடுங்கள். உங்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்!'' என்று கெஞ்சினன்.

"நோ. நெவர். முடியாது!" — நான் அவன் கையை இன்னும் அழுத்தமாகப் பிடித்தேன். என்னோடு பலப் பரீட்சையில் அவன் போட்டியிட்டு வெற்றிகாண முடியுமா, என்ன? இருந்தாலும் முறுக்கிக்கொண்டு தப்பியோட முயன்று பார்த்தான்.

"உன்னைப் போலீஸில் ஒப்படைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன். என்னை யார் என்று எண்ணினாய்?" என்று கடிந்தேன்.

"என்னை விட்டுவிடுங்கள் சார்! பிளீஸ்! சத்தியமாகச் சொல்றேன், சார்! நான் இனி உங்கள் பக்கம் வரமாட்டேன், சார்! கையடித்து வேண்டுமானாலும் கொடுக்கிறேன்!" என்று கெஞ்சினான் இளைஞன்.

இரவின் இருளிலும் அவன் முகம் மிகவும் 'பேதெடிக்'காக, இரக்கத்தின் உருவமாகக் காட்சி தந்தது. ஆதரவற்ற அநாதையாகத் தோற்றினான் அவன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் எங்கள் நாட்டிலும் நடக்கின்றன; அடிக்கடி நடக்கின்றன. இதைக் காட்டிலும் மோசமான ஆபாசமான காரியங்கள் அங்கு நடைபெறுகின்றன... ஆனால் இங்கேயும் இந்த இந்தியாவிலும் தூய்மைக்குப் பெயர்போன பாரத நாட்டிலுமா இத்தகைய ஈன செயல்கள் நடைபெற வேண்டும்? இது எங்களுக்கு லாண்ட் ஆஃப் லார்டு சைதன்யா, லாண்ட் ஆஃப் புத்தா, லாண்ட் ஆஃப் மகாத்மா காந்தி ஆயிற்றே!

அவனை நான் மீண்டும் கேட்டேன்: "நீ இந்த ஹோட்டலுக்குள் எப்படி நுழைந்தாய்? அதுவும் இரவு இந்நேரம் கழித்து?"

இளைஞன் [illegible] கைக்கூலி கொடுத்து உள்ளே நுழைந்ததாக ஒப்புக் கொண்டான்.

"எத்தனை ரூபாய் கொடுத்தாய் லஞ்சம்?"

"ஒரு ரூபாய்!" என்றான் அவன். பிறகு, "என்னை நீங்கள் விட்டுவிடுங்கள், சார்!... ப்ளீஸ்! இனி இந்தப் பக்கம் தலைகாட்டுவதில்லை என்று நான் ஆணையிட்டுச் சொல்கிறேன், சார்! என் பேச்சை நம்புங்கள்! நான் கல்கத்தா யூனிவர்ஸிடியின் கிராஜுவேட், சார்! பணக் கொடுமையினால்தான் சார், இந்தத் தொழிலை மேற்கொண்டேன். என் குழந்தைகள் பல நாட்களாகப் பட்டினி சார்! என் மனைவிக்கு டி. பி. பல வருஷங்களாக. நான்... நான்..." அவன் தொண்டையை அடைத்தது. பேச்சு எழவில்லை.

எல்லாமே பாசாங்கு; புனைந்து கூறும் பொய்யுரை என்று நான் தீர்மானித்தேன். இப்படி இசைகேடாகப் பிடிபட்டால் இம்மாதிரி ஆசாமிகள் இப்படித்தான் பேசுவார்கள். "நீ பட்டதாரி என்கிறாயே, உன்னிடம் சர்டிபிகேட் இருக்கிறதா? கல்லூரிச் சான்றிதழ் இருக்கிறதா? காட்டு, பார்ப்போம்!" என்றேன்.

"இருக்கிறது, சார்! கட்டாயம் காட்டுகிறேன். நாளைக்கே எடுத்துவந்து உங்களுக்குக் காண்பிக்கிறேன்!" என்றான் இளைஞன்.

போக்கிரிப் பயல் என்னை அசடாக்கப் பார்க்கிறான்! நாளைக்கு நமக்கு இவன் இருப்பிடம் தெரியப் போகிறதா, என்ன? — இந்த எண்ணத்தில், "நாளைக்கு, கீளைக்கு எல்லாம் வெறும் தப்பிலிப் பேச்சு. இன்றைக்கே காட்ட வேண்டும். அதுவும் இப்பொழுதே காட்ட வேண்டும்" என்றேன்.

"என் வீடு வெகு தொலைவில் இருக்கிறது. அங்கு நீங்கள் வருவதென்றால் நேரம் ஆகும். உங்களுக்கும் வீண் சிரமமாகும்!" என்றான் அவன். நான் அசைந்து கொடுக்கவில்லை. "பரவாயில்லை. டாக்ஸி வாடகை நான் தருகிறேன், புறப்படு!" என்றேன். வேறு வழியின்றி அவன் சம்மதித்து விட்டான்.

சரி, வந்ததுதான் வந்திருக்கிறோம். இந்தியாவின் உண்மை நிலையை நேருக்கு நேர் கண்களால் பார்த்ததாக இருக்கட்டுமே என்று எண்ணினேன். லார்ட் சைதன்யா, லார்ட் புத்தா வாழ்ந்த நாட்டைப் பார்க்கப் போகிறோம். விடுதலை பெற்ற பாரதத்தைக் காணப் போகிறோம் என்ற ஆவலுடன் வந்தவன் ஆயிற்றே!

நான் அந்நேரம் வரை சக்கரவர்த்தியின் கையை விடாமல் பற்றியிருந்தேன். அவன் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்தேன். என்ன வலுவில்லாத கை? சற்று அழுத்திப் பிடித்தால் மடமடவென்று முறிந்துவிடும்போல! வயிறு நிறையச் சாப்பாடே கிடைக்காதா இவனுக்கு? பிடித்த கையை நான் விடவில்லை. ஓடிவிட்டால் அப்புறம் நான் எங்கே என்று போய்த் தேடுவேன்? வாயிற்காப்போன் ஒரு டாக்ஸியைக் கூப்பிட்டு வந்தான். டாக்ஸியில் உட்கார்ந்ததும், நான் சக்கரவர்த்தியிடம், "நாம் எந்தப்பக்கம் போக வேண்டும் என்று டாக்ஸிக்காரனுக்குச் சொல்லு!" என்றேன்.

சக்கரவர்த்தியின் வாயிலிருந்து வார்த்தைகளே வெளிவரவில்லை. டாக்ஸிக்காரனுக்குச் சக்கரவர்த்தியைத் தெரியும் என்று தோன்றியது. ஆம், அவன் அவனுக்கு ஏற்கனவே அறிமுகம் ஆனவன்தான்! "நாம் போகவேண்டிய இடத்தை அவனுக்குச் சொல்லு" என்று சக்கரவர்த்தியை மீண்டும் தூண்டினேன்.

சக்கரவர்த்தி டாக்ஸிக்காரனுக்கு இடத்தைச் சொன்னான். டாக்ஸி காற்றினும் கடுவேகமாக விரைந்தது.

சக்கரவர்த்தி திடீரென்று, "சார்! உங்களுக்கு ரொம்பக் கஷ்டமாகுமே! நாம் போக வேண்டிய இடம் தொலைவில், வெகு தொலைவில் இருக்கிறதே!" என்றான்.

எந்த இடம் என்று நான் கேட்டதும், "டாலிகஞ்சு என்னும்பகுதி" என்றான் அவன். நான் என் கைடுப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன். வெளிச்சத்தில் துருவித் துருவிப் பார்த்தேன். ஆனால் அது இருக்கும் இடமே தெரியவில்லை. அதில் பொடானிகல் கார்டன்ஸ், விக்டோரியா மெமோரியல், லேக்ஸ், மிருகக்காட்சி சாலை, காந்தி காட், மியூஸியம் எல்லாம் இருந்தன. எல்லாவற்றைப் பற்றிக் குறிப்புகளும் இருந்தன. ஆனால் டாலிகஞ்சைப் பற்றிய குறிப்பைத்தான் காணவில்லை.

"டாலிகஞ்ச் கல்கத்தாவுக்கு வெளியில் இருக்கிறதோ?" என்று அவனிடம் கேட்டேன்.

"இல்லை, கல்கத்தாவில்தான் இருக்கிறது!" என்று விடையளித்தான் சக்கரவர்த்தி.

இவரால் முடியுமா?

வண்டியோட்டிச் செல்லும் வேளையில் ஒவ்வொரு டிரைவரும் எந்த நிலையிலும் உஷாராக இருந்து, சரியான முடிவுகளைச் சட்டென எடுப்பது அவசியம்.

ஸதர்ன் ரோட்வேஸின் மற்றவர்களின் நலத்திற்கேற்ப இவர் இருக்கவேண்டுமானால், இவரிடம் மெய்யான தரம் இருந்தாக வேண்டும்; முடிவுகளை உடனுக்குடன் எடுத்தாக வேண்டும்.

அதனால்தான் வேலைக்கு நியமிக்குமுன் ஒவ்வொரு டிரைவரையும் நாங்கள் நன்கு சோதிக்கிறோம். பிறகும் அவ்வப்போது இவர்கள் சோதிக்கப்படுகிறார்கள்.

உடல்நிலையையும், உளநிலையையும் பொறுத்து நாங்கள் நடத்தும் பூரணப் பரிசோதனைகள், தூரத்தைப்பற்றிய துல்லியமான மதிப்பீடு, பக்கவாட்டில் முழுமையாக பார்க்கும் திறன், வண்ணங்களை நன்கு பகுத்தறியும்பான்மை, பிரகாசமான ஒளியால் கூசும்கண்களை விரைவில் மறுபடி இயக்கும் வல்லமை, கண்—கால்களிடை கச்சிதமான ஒத்துழைப்பு ஆகிய அனைத்தும் டிரைவரிடம் பொருந்தியிருக்குமாறு பார்த்துக் கொள்கின்றன.

நமது திறமையான சேவையானது நமது டிரைவர்களின் திறமையையும் சார்ந்துள்ளது என்பதை ஸதர்ன் ரோட்வேஸ் எப்போதும் உணர்ந்து இருக்கிறது.

இதன் லாரிகள் இரவு 11-மணியிலிருந்து அதிகாலை 4-மணிவரை ஓட்டப்படுவதில்லை — ஏனெனில், இந்த நேரம்தான் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரும் நேரம்; இந்த நேரத்தில்தான் பெரும்பாலான சாலை விபத்துகள் நடக்கின்றன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் முதலிய மாநிலங்களின் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெரு நம்பிக்கை பெற்றிருப்பதற்கான காரணங்களில் இது ஒன்று.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

மதுரை





கீதைக் கதைகள்



'ஞானத்துக்குத் தவிணையிடலாம்; தருமத்திற்கு அப்படிச் செய்யலாகாது....'

13. ஈகை

அவர் ஒரு மகா மேதை. மகா லோபியும்கூட. வித்துவத்திற்கு முதன்மை அளிப்பவர். அறிவை விலையாக்கிப் பொருளீட்டும் பேராசையினர்.

அறிவுப் பசியுள்ளவர்கள் அவரை நாடுவதுண்டு. அன்று அயலூரவன் ஒருவன் அவரிடம் பாடம் கேட்க வந்திருந்தான். வீட்டுத் திண்ணையில் அமர்ந்து பாடம் சொல்லிக் கொண்டிருந்தார் மாமேதை. அப்பொழுது மிடிமையின் பிடியில் அலைக்கழிவுற்ற பிச்சைக்காரன் ஒருவன் அங்கு வந்து சேர்ந்தான்.

''ஐயா, கடிய பசி. உயிர் போகிறதே... மனம் இரங்குங்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியம் கிட்டும்...'' குரல் கெஞ்சிற்று. உடல் தள்ளாடியது.

''பாவம்; நல்ல பசி. உணவு கொடுக்காவிடில் செத்தாலும்...'' அயலூரவனின் மனம் நெகிழ்ந்தது.

''உனக்கு அறிவின் பக்குவ நிலை கைவரப்பெற வில்லை. பலவீன உணர்ச்சிகளின் விளைச்சலே இரக்கம். அஃது அறிவின் விரோதி'' என்றார் மாமேதை. அவருடைய குரலிலே தெறித்த அதிகாரம் அக்கூற்றிலே ஏதோ மகா தத்துவம் பொதிந்து கிடப்பதான மன மயக்கத்தை ஏற்படுத்தியது.

''சுவாமி! தங்கள் கூற்றினைத் தயைசெய்து விளக்கி அருளுங்கள்....'' அயலூரவன் கேட்டான்.

''நான் உணவளித்தால் பிச்சைக்காரன் உயிர் பிழைத்துவிடுவான் என்பது உன் மனப் பிரமையாகும். பிரமையும் அறிவின் விரோதியே. பசித்த வேளைக்குச் சாப்பிடுவதனால் சாவைத் தடுக்க முடியுமென்றால் சாவு எப்படிச் சம்பவிக்கின்றது?''

''சாவினைப் பற்றிய தத்துவம் நான் அறியாதது. பசித்த வேளைக்கு உணவு இடுதல் தர்மமான தல்லவா?''

''சகல வேதங்களையும் கற்றுத் தேர்ந்த எனக்குத் தர்மத்தைப் பற்றிப் போதித்தல் அடாது. நான் அவனுக்கு உணவளிக்கின்றேன் என வைத்துக் கொள். சாப்பிடும்போது அவன் தொண்டை விக்கி இறந்து போனால்?.... அன்றேல், சாப்பிட்ட பின்னர் அவன் அஜீரணத்தால் இறந்து போனால்? அவனுடைய சாவு என்னுடைய அன்னத்தினாற் சம்பவித்தபடியால் பழியும் பாவமும் என்னையல்லவா வந்தடையும்? பழியும் பாவமும் சம்பாதித்தல் தருமமானது என எந்த சாத்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது? சாவு என்பது ஈசன் விதித்த நியதி. நான் உணவு அளித்து அவனுடைய சாவு வேளையைப் பிற்போடுவேனாகில், அந்த நிர்ச்சுரச் செயல் யாரைச் சாரும்?'' என அறிவின் அகந்தை கொப்பளிக்க மாமேதை கேட்டார்.

அயலூரவன் திண்ணையிலிருந்து இறங்கினான். பிச்சைக்காரனைச் சமீபித்தான். ''என்னுடன் சற்றுத் தூரம் வா! அயலில் யாசித்தாவது நான் உனது பசியை நீக்குகின்றேன்....'' என்று அவனை அழைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினான்.

''நீ மகா அறிவினன்!'' என மாமேதை கத்தினார்.

''இருக்கலாம்; 'ஞானத்துக்குத் தவிணை இடலாம்; தர்மத்துக்கு அப்படிச் செய்யலாகாது' என்று மகான் ஒருவர் போதித்துள்ளதை நான் இன்னமும் மறக்கவில்லை....'' எனக் கூறிய அயலூரவன் பிச்சைக்காரனை ஆதரவுடன் அணைத்தனன்.

- எஸ். பொன்னுத்துரை

''கல்கத்தாவில் இருந்தால் ஏன் இந்த வழி காட்டி நூலில் இல்லை?'' என்று கேட்டேன்.

''டூரிஸ்ட்கள் பார்க்கக் கூடிய பகுதி இல்லை, சார் அது!'' என்றான் சக்கரவர்த்தி.

'இருக்கலாம், ஒருவேளை நகரத்தின் புறப் பகுதியாக இருக்கலாம்; பின்தங்கிய பகுதியாக இருக்கலாம். பயணிகள் அங்கு போகத் தேவையிராது என்று விட்டிருக்கலாம்' என்று எண்ணிக் கொண்டேன். சிறிது நேரம் கழித்து ''எத்தனையோ தொழில்கள் இருக்கும்போது இந்தத் தொழிலை நீ ஏன் தேர்ந்தெடுத்தாய்?'' என்று சக்கரவர்த்தியைக் கேட்டேன்.

''சார்! நான் முதலில் ஓர் அரசாங்க அலுவலகத்தில்தான் வேலை பார்த்தேன். நூற்றைம்பது ரூபாய் சம்பளம். ஒரு சமயம் ஆபீஸில் மறியல் நடந்தது. நானும் அதில் கலந்துகொண்டேன். என் உத்தியோகம் தாற்காலிகமானது. அதனால் என்னைச் சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். என்னை 'டிஸ்டர்பிங் எலிமென்ட்' என்றும், உபத்திரவக்காரன் என்றும், கம்யூனிஸ்ட் என்றும் முடிவு கட்டி ஏறக்கட்டி விட்டார்கள்.''

நான் சக்கரவர்த்தியை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தேன். ''நீ என்ன உண்மையில் கம்யூனிஸ்டா?'' என்று கேட்டேன்.

''இல்லை சார்! நான் கம்யூனிஸ்ட் இல்லை. கடவுள்மீது ஆணையாகச் சொல்கிறேன். நான் கம்யூனிஸ்ட் அல்லவே அல்ல. அதிகாரிகளுக்கு என்மேல் கோபம். ஏனெனில் அவர்கள் ஆபீஸ் வானில் 'பிக்னிக்' போவதை நான் கண்டிருக்கிறேன். ஆபீஸ் அட்டெண்டர்களிடம் தங்கள் வீட்டு வேலைகளை வாங்குவதைப் பார்த்திருக்கிறேன். மசாலா அரைப்பது, நீர் நிரப்புவது, சமையல் செய்வது போன்ற காரியங்களுக்கு சர்க்கார் சிப்பந்திகளைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் தயங்கியதில்லை. ஆனால் நான் யாரைப் பற்றியும் எதுவும்

இவை என்ன ?

ஹோட்டல் மோட்டல் போட்டல் ரோட்டல்

(83-ம் பக்கம் பார்க்க)

சொன்னதில்லை. நாம் குமாஸ்தா வேலைக்குத் தான் சேர்ந்திருக்கிறோம் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. செல்வந்தர்கள், அமைச்சர்கள் போன்றோர்களின் பிள்ளைகள் தான் அதிகாரிகள் ஆவதற்கென்றே அவ தரித்திருக்கிறார்கள் என்பதையும் உணர்ந் திருக்கிறேன். என் உத்தியோகமோ தாற் காலிகமானது. வீட்டில் வயதான தாயார், உடல்நலம் கெட்ட மனைவி, விவரம் அறியா இரண்டுங்கெட்டான் குழந்தைகள் ஆகியோர் இருந்தனர். அதனால் அம்மாதிரிப் பேசக் கூடப் போனால் குற்றம். 'இரைம்' என் பதை நான் நன்கு உணர்ந்திருந்தேன். அத னால் நான் உண்டு, என் வேலை உண்டு என்று தான் இருந்து வந்தேன்."

"அப்படி யிருந்துமா உன் வேலை போய் விட்டது?"

"ஆமாம், சார்! நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, ஏழெட்டு உத்தி யோகங்கள் பார்த்தும் நான் 'டெம்பரரி' யாகவே தான் இருந்தேன். எனக்குக் கன்பர் மேஷனே கிடைக்கவில்லை. அதனால் என் வேலை போனது மட்டுமா? வேலை நிரந்தர நிலைக்கு ஐந்து ஐந்து ரூபாய் கட்டியிருந் தேனே, அதுவும் போயிற்று."

அப்பொழுதும் எனக்கு அவன் சொல்லுவ தெல்லாம் பொய்யும் புனைசுருட்டும் என்றே தோன்றியது. ஏழு ஆண்டுகள் வேலை பார்த் தும் ஒருவன் தாற்காலிகமாகவேயா இருப் பான்? வெறும் அளப்பாகத்தான் இருக்கும்? அப்படியாக் செய்தால் வேலை எதற்குப் போக வேண்டும்? அதுவும் எனக்குப் புரியவில்லை. நீங்கள் எங்கள் அமெரிக்காவை என்னதான் முதலாளித்துவ நாடு என்று வசை பாடி னாலும், இதுபோன்ற காரியங்கள் அங்கு நடைபெறுவதில்லை. வேலைநிறுத்தம் செய்வ தனால் மட்டும் நிச்சயம் அங்கே வேலை போவ தில்லை.

"அப்புறம் என்ன ஆயிற்று?" என்று மட்டுமே கேட்டேன் நான்.

"அப்புறம் வேலை தேட நான் எவ்வளவோ முயன்றேன். எத்தனையோ விண்ணப்பங்கள் போட்டேன். ஆனால் வேலைதான் கிடைக்க வில்லை. நான் எத்தனை நாட்கள்தான் பட்டினி யாகக் கிடக்க முடியும்? எத்தனை நாட்கள் நான் கடன் வாங்கிக் காலம் கழிக்க முடியும்? கடன் கொடுப்பாரும்தான் எங்கே இருந் தார்கள்? என் நண்பர்களின் நிலையும் எனக்கு மேலாகத்தான் இருந்தது. கடைசியில் மனைவி மிகவும் நோயுற்றுப் படுத்த படுக்கையாகி விட்டாள். ஒரு நாள் வேறு வழியின்றி டாக் டரை அழைத்துக் காட்டினேன். அதற்குள் வியாதி முற்றிவிட்டது. டாக்டர் டி. பி. என்று கூறி விட்டார்!"

"அப்புறம் என்ன ஆயிற்று?" இடையே நிறுத்திவிட்டவனை நான் மீண்டும் முடுக் கினேன்.

"அப்புறம் இந்த ஏஜென்ஸி கிடைத்தது."

"ஏஜென்ஸியா? அப்படி என்றால்?"

சக்கரவர்த்தி விளக்கினான். "வரும்படி யில் அரை சத விகிதத்துக்குத்தான் நான் உரிமையாளன். அதாவது மொத்தம் என்ன வருமானம் வருகிறதோ, அதில் எனக்கு அரை சதவிகிதம்தான் பங்கு கிடைக்கும். பாக்கித் தொகையை அலுவலகத்தில் கட்டிவிட வேண்டும்."

"என்ன? உனக்கு ஓர் அலுவலகமும் இருக் கிறதா?"

"இருக்கிறது, சார்! நான் கமிஷன் ஏஜெண்ட் மட்டும்தான். மற்றபடி கொழுத்த லாபம் அவர்களைச் சேர்ந்தது."

"அவர்கள் என்றால் எவர்கள்? உன் அலு வலகம் என்றாயே, அது எங்கே இருக்கிறது?" என்று கேட்டேன் நான்.

சக்கரவர்த்தி ஒரேயடியாகத் தழைந்து, "சார்! மன்னிக்கணும்! அதை மட்டும் கேட்காதீர்கள். சொல்லமுடியாது" என்றான்.

"ஏன்?"

"ஏனென்று கேட்காதீர்கள் சார்! அவர் களுடைய பெயர், முகவரி முதலியவற்றை நான் ஒரு நாளும் சொல்ல மாட்டேன். நீங்கள் என்னை வெட்டித் துண்டம் துண்ட மாகப் போட்டாலும் சரி. என் சிரமதசைக்கு அவர்கள் இந்த வேலையாவது கொடுத்து என்னைக் காப்பாற்றுகிறார்களே, அந்த நன் றிக் கடனை என்றும் மறக்கவே முடியாது. அவர்கள் உதவாவிட்டால் இன்றைக்கு என் நிலைமை என்னவாகியிருக்கும்?" என்றான் சக் கரவர்த்தி.

டாக்ஸி வேகமாய்ப் போய்க் கொண்டிருந் தது. எங்கே போய்க் கொண்டிருக்கிறோம், எந்தத் திக்கில் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதெல்லாம் விளங்கவில்லை. என் வழி காட்டிப் புத்தகத்தில் இந்தப் பக்கத்தைப் பற்றிய குறிப்பு எதுவுமே இல்லை. "இன்னும் எத்தனை தூரம் இருக்கிறது?" என்று நான் கேட்டேன்.

"அதிகத் தொலைவில்லை. நாம் நெருங்கி விட்டோம். — இடது பக்கம் திரும்பு, சர்தார்ஜி!" என்றான் சக்கரவர்த்தி. சிறிது நேரத்து மௌனத்துக்குப்பின், "வீட்டுக்குப் போய் என்ன காட்சியைக் காணப் போகி றேனோ, தெரியாது!" என்று உள்ளம் மிகத் தளர்ந்து கூறினான்.

டியூப் லைட்டை எப்பொழுது வாங்க வேண்டும், பல்பை எப்பொழுது வாங்க வேண்டும்?



இதை தீர்மானிப்பது சில சமயங்களில் கடினமாக இருக்கிறது, அல்லவா? உண்மையில் டியூப் லைட்டிற்கும் பல்புக்கும் தனித் தனி உபயோகங்கள் உள்ளன.



சமையலறை, வராந்தா, மாடிப்படி போன்ற விரிவான இடங்களில் உபயோகிக்க பிலிப்ஸ் டியூப் லைட் தான் சிறந்தது. கிட்டலேஸ் லைட் எரிய வேண்டிய தாழ்வாரம் போன்ற இடங்களில் உபயோகிப்பதற்கும் டியூப் லைட் தான் மேல். ஏனென்றால் டியூப் லைட் சாதாரண பல்பைவிட சிக்கனமானது. ஒரு 40 வாட் பிலிப்ஸ் டியூப் லைட் ஒரு 100 வாட் பல்பைவிட இரு மடங்கு அதிக ஒளியைத் தருகிறது. செலவும் பல்பைவிட பாதி தான் ஆகும். மேலும், டியூப் லைட் பல்பைவிட 5 மடங்கு அதிக காலம் உழைக்கிறது.



வீட்டின் முக்கிய அறையில் பிரகாசமான குளுமையை உண்டாக்கும் பிலிப்ஸ் டியூப் லைட் தான் சிறந்தது. வெப்பம் அதிகமான சமையலறையில் உபயோகிக்க தன்மையான ஒளியைத் தரும் பிலிப்ஸ் ப்ளூசெண்ட் லாம்ப் தான் சிறந்தது. அதன் ஒளியில் நிறம் விழுது கண்களுக்கு சிரமமின்றி சமையல் செய்ய முடியும்.



படிக்கும் அறையிலும் ஓய்வு அறையிலும் செம்மையான ஒளி தேவை, அல்லவா. ஆகவே பிலிப்ஸ் ஆர்ஜென்டா லாம்புகளை உபயோகியுங்கள். கண்ணுக்கு இதமான ஒளியை ஒரே சீராகப் பரப்புவதற்காக பிலிப்ஸ் ஆர்ஜென்டா லாம்புகளின் உட்புறம் பூச்சுடன் கூடியது.

ஆகவே இனிமேல் பிலிப்ஸ் லாம்புகளையே வாங்குங்கள். அவை உங்களுக்கு கண்ணுக்கு இதமான, பிரகாசமான மற்றும் மகிழ்ச்சிகரமான ஒளியைத் தரும். 40 வருடங்களாக லைட்டிங் துறையில் பிலிப்ஸ் இந்தியாவில் முன்னணியில் நிற்கிறது என்பதை ஞாபகத்திற் கொள்ளுங்கள்.

பிலிப்ஸ்

சீரான ஒளிக்குச் சிறந்தது

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

மாமியாரின் மூக்குக் கண்ணாடி !

"வயசான காலத்திலே இருவ்ருடு ராமான்னு ஒரு மூலையிலே முடங்கிக் கிடக்கிறதை விட்டுட்டு எதுக்கு என்னோடு இப்படி வம்பு பண்ணுகிறாரோ என் மாமியார்?"

"வா கமலா, வா! என்ன வரும்போதே அலுத்துக் கிட்டே வரே?"

"பின்னே என்ன? வர வர என் மாமியாருக்குச் சண்டைக்கு இழுக்கிறதே தொழிலாகப் போச்சு. பாருங்களேன், இன்னிக்கு வெண்டைக்காய்க் கறி கொஞ்சம் அடிபிடிக்கப் போச்சு. அதுக்கு இப்படியா? இலையிலே உட்கார்ந்துண்டு ஒவ்வொண்ணா எடுத்துக் கண்ணு கிட்டே பார்த்து 'இது என்ன வெண்டைக்காய் கறியாம்மா, அசல் கரியாட்டமா செஞ்சுட்டே'ன்னு முணு முணுக்கிறா. 'அவன் எப்படித்தான் சாப்பிட்டானோ'ன்னு பிள்ளைக்கு அனுதாபம் வேறே படறா மாமி!"

"வயசானவங்கன்னா இப்படித்தான். விட்டுத் தள்ளு கமலா!"

"நேத்துப் பாருங்க! காப்பியிலே தவறிப்போய் ஒரு எறும்பு இருந்து போச்சு! சர்க்கரையை என்ன மூடினாலும்தான் அது எப்படியோ வந்துவிடறதே! காப்பியிலேருந்து அந்தச் சின்ன எறும்பைத் துழாவிப் பிடிச்சு எடுத்து உள்ளங் கையிலே வெச்சுண்டு, நான் சாமான்களை சரியாகவே மூடிறதில்லேன்னு ஒரு புகார்!... பிள்ளை கிட்டே போய்க் காண்பிச்சுட்டு ஒரே முணுமுணுப்பு!"

"மாமியார்னா இப்படித்தான்! என்ன செய்யறது?"

"நன்னாச் சொன்னேளே! நேத்துவரை போட்டதைச் சாப்பிட்டுக்கிட்டுக் கொடுத்ததைக் குடிச்சிண்டு இல்லையா என்ன?"

"அப்போ உன் மாமியார் கிட்டே யாராவது கோள் மூட்டி அவங்க மனசைக் கலைச்சிட்டாங்களோ, என்னவோ?"

"சே! சே! அதெல்லாம் ஒண்ணுமில்லே. நேத்து காலையிலே என் சின்னப் பையன் ரமேஷ்தான் என் மாமியாரோட மூக்குக் கண்ணாடியைப் பிடிச் சிழுத்து உடைச்சிட்டான். நான் தானா தொறுவிப் போச்சு! அதுலேருந்துதான் இப்படித் தகராறு வந்துக்கிட்டே இருக்கு!"

"அடப் பாவமே! கண்ணாடி இல்லாததுனாலே கண் தெரியல்லே. ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல் லிச் சண்டை பிடிக்கிறாளாக்கும்? பாவம்!"

"ஐயோ நீங்க ஒண்ணு! கண் தெரியல்லே யாவது? கண்ணாடி இல்லாதிருக்கப் போகத் தானே காப்பியிலே இருக்கிற எறும்பும், கறி யோட நிறமும் அவருக்குப் பளிச்சென்று தெரி



யறது போலிருக்கு! கிடக்கிறது எல்லாம் கிடக்க முதல்லே அவருக்கு ஒரு மூக்குக் கண்ணாடியை வாங்கி மாட்டித் தொலைக்கணும் போலிருக்கு! மாசக் கடைசியாச்சே! பணத்துக்கு எங்கே போவேன்? உங்க கிட்ட ஒரு பத்தோ பதினைந்தோ பணம் இருந்தால் கைமாத்தாக் கொடுங்களேன்! உங்களுக் குப் புண்ணியமா இருக்கும்!"

-ரமணி ரங்கநாதன்

"ஏன், என்ன விஷயம்?"

"காலையில் ஏழு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டேன். மனைவிக்குக் கடுமையான ஜுரம். டாக்டரை அழைத்து வருவதாகச் சொல்லி வந்தேன். ஆனால் என் விதியைப் பாருங்கள். இன்றைக்கென்று காலையிலிருந்து இந்நேரம் வரை வருமானமே இல்லை. வீட்டுக்குப் போவோமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில்தான் ஒரு முறை உங்கள் ஹோட்டலையும் பார்த்துக் கொண்டு போகலாமே என்று தோன்றியது. ஹாரும் அலி, இன்று மாலைதான் ஓர் அமெரிக்கப் பயணி வந்திருப்பதாகச் சொன்னான். அவனுக்கு நூறு ரூபாய் பணத்தாளைக் காட்டி உங்களிடம்..." என்று நிறுத்தினான் சக்கரவர்த்தி.

"என்னை ஏமாற்றப் பார்க்காதே! டோன்ட் புரை டு ப்ளப்'.மி! என் நெஞ்சு இளகாது!" என்றேன்.

"அழுது புலம்பி உங்களை ஏமாற்ற மாட்டேன், சார்! இப்போதெல்லாம் இந்தியர்கள் கூட அழுகைக்கு மசிவதில்லை; இளகுவதில்லை. என்னை நம்புங்கள், நான் உடம்பிட்டுப் போய் சொல்லவில்லை. நான் இறைக்கும் செல் வக்கூட அஞ்சவில்லை. ஆனால் நான் சிறை சென்று விட்டால், என் அம்மா, என் குழந்தைகள், என் மனைவி எல்லாரும் இறந்து போவார்கள். ஆனாலும் என்னை நம்புங்கள், சார்! ஆண்டவன் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன் நான்!" என்றான் சக்கரவர்த்தி.

அடுத்த கணமே சட்டென்று டிரைவரை நோக்கி, "நிறுத்து, வண்டியை!" என்றான்.

டாக்ஸி நின்றது. "இறங்கி வாருங்கள், சார்!" என்றான் சக்கரவர்த்தி என்னைப் பார்த்து. "இதோ பாருங்கள்! இங்கு ரொம்பச் சகதியாக இருக்கும். வண்டி உள்ளே வந்தால் புதைந்து போகும். ஆனால் நல்ல டாறையிலேயே நிறுத்தச் சொல்லி விட்டேன். வாருங்கள்! ஐந்து நிமிஷ நடை தான்; போய் விடலாம்!" என்றான்.

ஒரு விசித்திரமான இடம் அது. கல்கத்தா நகரத்திலே இப்படியும் ஓர் இடம் இருக்க முடியும் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்த தில்லை. சௌரங்கியில் உள்ள ஹோட்டலின் மொட்டை மாடியில் நின்றுகொண்டு, நீங்கள் இதுபோன்ற இடத்தைக் கனவில் கூடக் கண்டிருக்க முடியாது.

போர் புரியும் அமெரிக்கத் துருப்புகளை உற்சாகப் படுத்தும் நகைச்சுவை நடிகர் பாப் ஹோப் வியட்நாமுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு நிருபர் கேட்டார் : "உங்கள் சொத்தின் மதிப்பு 50 கோடி டாலர் இருக்குமா?"

"அவ்வளவு பணம் என்னிடம் இருந்தால் நான் வியட்நாமுக்குப் போக மாட்டேன். வியட்நாமை இங்கே வரச் சொல்லு வேன்" என்றார் பாப்ஹோப்.

-பிகேவல்லி வீக்

தகவல் : பாலி



"நீங்கள் சற்று இங்கேயே நில்லுங்கள். நான் சென்று சர்டிபிகேட்டுகளை எடுத்து வந்து உங்களுக்குக் காட்டுகிறேன்!" என்றான் சக்கரவர்த்தி.

அவன் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே நான் அவன் கோட்டைப் பிடித்துக் கொண்டு விட்டேன். ஏனெனில் அவன் கம்பி நீட்ட முயல்வதாக எனக்குப் பட்டது. "நோ, நோ. ஐ டோன்ட் பிலீவ் யூ. நான் உன்னை நம்ப வில்லை. நானும் உன் கூடவேதான் வரு வேன்!" என்றேன்.

"அப்படியானால் வாருங்கள்!" என்று கூறிச் சக்கரவர்த்தி முன்னே நடந்தான். நான் அவன் பின்னே நடந்தேன். இருள் சூழ்ந்த இரவு. இரண்டொரு நாய்கள் எங்களைப் பார்த்துக் குரைத்தன. அவிழ்த்து விடப்பட்ட பசுக்கள் தெருவில் சுற்றிக்கொண் டிருந்தன.

நான் என் கைக்கடிகாரத்தைப் பார்த் தேன்.

இரவு மணி ஒன்றரை அடித்து விட்டது. திடீரென்று சக்கரவர்த்தி திரும்பினான். "சார்! ஒரு விஷயம் சொல்லட்டுமா? கேட் பீர்களா? எனக்காகத் தாங்கள் கட்டாயம் கேட்டுத்தான் ஆக வேண்டும்!" என்றான்.

'மீண்டும் அதே பிளஃப், மோசக்கருத்து! நடுத்தர வங்காளிகளே இப்படித்தான் பெருத்த ஏமாற்றுக்காரர்களாக இருப்பார் களோ? இவர்களைப் போன்ற மோசக்காரர்கள் மனித இனத்திலேயே இருக்க முடியாது.' என் எண்ணம் திரும்பத் திரும்ப இப்படியே ஓடியது. நானும் 'அடமென்டா'க, பிடிவாத மாக இருந்தேன். என்னவானாலும் விடப் போவதில்லை. கடைசிவரை ஒரு கை பார்த்து விட்டே மறு காரியம். என்ன என்று தெரிந்து கொள்ளாமல் தகருவதில்லை என்று முடிவு கட்டிக் கொண்டேன்.

"நான் வீட்டிலிருந்து புறப்பட்டபொழுது, வரும்பொழுது டாக்டரை அழைத்து வருவ தாக அம்மாவிடம் சொல்லி வந்தேன். இப் பொழுது தங்களைக் காட்டித் தாங்கள்தான் டாக்டர் என்று சொல்ல எனக்கு அநுமதி தேவை" என்றான் சக்கரவர்த்தி.

"சரி, போ!" என்றேன் நான்.

"இன்னொரு விஷயம்!" சக்கரவர்த்தி மீண் டும் நின்றுவிட்டான். "'ஆர்டிஸ்ட் சப்ளை' செய்யும் கமிஷன் ஏஜென்ஸியில் நான் வேலை செய்வதாக மட்டும் தயவுசெய்து அவர் களிடம் சொல்லி விடாதீர்கள்!"

"அவர்களுக்கு இவ்விவரம் தெரியாதா?"

"தெரியாது. யாருக்குமே தெரியாது. அக் கம் பக்கத்து வீட்டுக்காரர்கள்கூட நான் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டாக வேலை செய்வ தாகத்தான் அறிவார்கள். இந்தக் குட்டை உடைந்து விட்டால், அப்புறம் என் மானம் பறிபோய் விடும்!"

"சரி, நீ சொன்னபடியே செய்கிறேன். கவலைப்படாதே போ!" என்றேன்.

சக்கரவர்த்தி ஒரு வீட்டு வாசலில் போய்க் கதவை இடித்தான். "அம்மா! அம்மா!" என்று குரலும் கொடுத்தான்.

உள்ளிருந்து ஒரு பெண் குரல் கேட்டது: "யாரு? மகளு? வந்து விட்டாயா?"

எனக்கு வங்காளி மொழி தெரியாது. இருந் தாலும் ஒருவாறு அநுமானித்துக் கொண் டேன். கதவு திறந்ததும் கண் முன்னே தோன்றியவள் ஒரு கிழவி. கையில் லாந்தர் பிடித்திருந்தாள். என்னைக் கண்டதும் குறுகி விட்டாள். அவள்தான் சக்கரவர்த்தியின் தாயார் என்பது விளங்கியது.

"நீ என்ன இத்தனை நேரமாக்கி விட்டாய்? எனக்கு ஒரே கவலையாகிவிட்டது. மருமகளும், பாவம்! இத்தனை நேரம் அவளுக்குக் 'கிடை கொள்ள'வில்லை. இப்பொழுதுதான் சற்றுக் கண் அயர்ந்திருக்கிறாள்" என்றாள் தாயார்.

"அலுவலக வேலையிலும் கொஞ்சம் நேர மாகிவிட்டது, அம்மா!" என்றான் சக்கர வர்த்தி.

சக்கரவர்த்தி உள்ளே நுழைந்தான். என் னையும் உள்ளே வருமாறு அழைத்தான். பிறகு தன் தாயாரைப் பார்த்து, "டாக்டரையும் கூட அழைத்து வந்திருக்கிறேன், அம்மா!" என்றான்.

சக்கரவர்த்தியின் தாயார் ஒரு முறை என்னை ஊன்றிக் காலோடு தலை கவனித்தாள். பிறகு, "ஏண்டா பிள்ளே! எதற்காக நீ இந்த டாக்டர் துரையை அழைத்து வந் தாய்? இந்தத் தெருவில்தான் கெட்டிக்கார ஹோமியோபதி டாக்டர் இருக்கிறாரே! இந்த நாட்களில் ஹோமியோபதியிலும்கூடக் குணம் காண்கிறதே! அவரை அழைத்து வந்தால் போதாதோ?" என்றாள்.

"இருக்கட்டும், அம்மா! பரவாயில்லை!"

சக்கரவர்த்தி என்னை வீட்டுக்குள் அழைத் துச் சென்றான். அறையைப் பார்த்து நான் அயர்ந்து போய்விட்டேன். வெற்றுத் தரை யில் இரண்டு இளம் குழந்தைகள் படுத்துக் கிடந்தன. உடலில் துணி இல்லை. 'கம்ப்ளீட்நேக்கெட்'. துருத்திக்கொண்டிருந்த மார்க்கூலை எலும்புகளை எண்ணிவிடலாம். பெஞ்சு என்று பெயருக்கு ஒன்று. அதன் மேல் ஆயிரம் கண் கொண்ட ஒரு விரிப்பு. அதில் படுத்திருந்தாள் சக்கரவர்த்தியின் 'ஒய்ஃப்'. வயது ஒன்றும் அதிகம் இராது. முகம் ஏகமாக வெளுத்துக் கிடந்தது. ரத்த சோகை காரண மாக. இப்படியா ரத்தம் கண்டிப் போகும் ஒருத்திக்கு! உலகத்தில் இப்படி ஒரு காட்சி இருக்க முடியும் என்று எந்த அமெரிக்கனும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஒரே அறை; இல்லை, உலகம்! அந்த உலகத்துக்குள் எல்லாமே அடக்கம்! காற்று, உயிர், இன்பம்,



"அதிகமான வேலையில் ஈடுபட்டிருக்கும் போது சில சமயம் எனக்குக் கடுமையான தலைவலி வருகிறது"

என்கிறார் விபின் ஜெயின்
பம்பாய் ஆபீசர்

தலைவலியா? விரைவிலே குணம் பெற அனாஸின் சாப்பிடுங்கள்



வயது வந்தவர்களுக்குப் போதுமான சக்தி வாய்ந்தது குழந்தைகளுக்கு நம்பகமானது

அனாஸின் சக்தி வாய்ந்தது—உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாகச் சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது. அனாஸின் நம்பகமானது. டாக்டரின் மருந்தைப் போல பல மருந்துகளின் சரிவிகிதக் கலவையே அது. தலைவலி, ஜலதோஷமும் ஃப்ளூவும், முதுகுவலி, பல்வலி, மற்றும் தசை வலிகளுக்கு அனாஸின் சாப்பிடுங்கள்.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் மிகப் பிரசித்தமான வலி நிவாரணி

4 வழிகளில் செயலாற்றுகிறது.




நம்பிக்கை, சொல்லொணாத வாழ்க்கைக் கஷ்டங்கள், சொல்லப் போனால் எல்லாமே குறுகலான அந்த நான்கு சுவருக்குள் அடங்கிவிட்டன; மூச்சு முட்டித் திணறிக் கொண்டிருந்தன.

"அம்மா! அந்தப் பெட்டியின் சாவியைத் தாயேன்!" என்று தாயாரைக் கேட்டான் சக்கரவர்த்தி.

தாயார் சாவியைக் கொடுத்தவாறே, "என்ன செய்யப் போகிறாய், இந்நேரத்துக்குச் சாவியை வைத்துக் கொண்டு?" என்று கேட்டாள்.

"ஒரு பொருள் எடுக்கணும்!"

படுக்கைக்கு ஒரு புறத்தில் இரண்டு பெட்டிகள் இருந்தன, ஒன்றன் மேல் ஒன்றாக. சக்கரவர்த்தி பெட்டியைத் திறந்து எல்லாப் பொருள்களையும் வெளியே எடுத்தான். எல்லாமே வெகு சாதாரணப் பொருள்கள்! மிகவும் தேடித் துருவியபின் அவன் தேடிய பொருள் கிடைத்தது. 'கிடைத்து விட்டது, சார்! இதோ இருக்கிறது. கல்கத்தா யூனிவர்ஸிடியின் பி.ஏ. டிகிரி!" என்றான் உடனே.



ஹோட்டல்: எல்லாருக்கும் தெரிந்த விஷயம். தங்க இடமும் உண்ண உணவும் வழங்கும் விடுதி.

மோட்டல்: அமெரிக்காவில் காரில் வெளியூர் செல்வோர் மிகுதி. அவர்களுக்காகக் கார் நிறுத்த இடமும் அதையொட்டினாற் போல் தங்க வசதியான அறையும் அளிப்பது மோட்டல்.

போட்டல்: படகுகளில் பெரிய ஆற்றிலோ கடல் கரை ஓரமாகவோ பிரயாணம் செய்வோர் படகை நிறுத்திக்கொள்ள வசதியும் தங்க அறைகளும் தரும் இடம்தான் போட்டல்.

ரோட்டல்: பஸ்ஸிலே நெடுந் தூரம் பிரயாணம் செய்பவர்கள் வழியில் தங்க ஹோட்டலில் இடம் கிடைக்குமா என்று கவலைப்படுவதற்கு முடிவு கட்டுகிறது ரோட்டல். ரோட்டல் பஸ்ஸில் கீழ் மாடியில் தங்கவும் மேல் மாடியில் படுக்கவும் இருபத்தெட்டு பிரயாணிகளுக்கு வசதி உண்டு. இந்த ஹோட்டல் பஸ்ஸை ரோட்டல் என்கின்றனர்.

ரோட்டல் படம்: யூ.பி.எஸ்.

அதை அவன் ஒரு காகிதம் போட்டுச் சுற்றி வைத்திருந்தான். நான் அதை வாங்கிக் கொண்டேன். ஆனால் அதைப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. நான் அப்படியே ஊமையாகச் சமைந்தேன். எனக்கு யாரோ நிறைய 'அபினி'யைக் கொடுத்து விட்டது போன்ற சுழற்சி! ஓர் அடி எடுத்து வைக்கக்கூட எனக்குத் திராணி இல்லை. எலும்பும் தோலுமான இந்த உருவம்தான் மனித உடல் என்பதா? இவ்வுடலுக்கு உயிர் இருக்கிறதா, அல்லது இது வெறும் சடலமா? விளங்கவில்லை. உடலைக் கூனிக் குறுகிச் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்திருந்தான் அவன். அந்த உடல் சக்கரவர்த்தியின் மனைவியுடைய உடலாகவோ ஓர் எலும்பு உருக்கி நோயாளியின் தேகமாகவோ எனக்குப் படவில்லை. மாபெரும் கேள்விக்குறி ஒன்று மார்பு நிமிர்ந்து கண் முன்னே நிற்பதாகவே தோன்றியது. ஆம், ஒரு 'தோட் ஆஃப் இண்ட்ராகேஷன்' — புதிர் அவிழ்க்க முடியாத பிரச்னைக் குறி — இருபதாவது நூற்றாண்டின் நாகரிகத்துக்கே சவால் விடும் கூரிய அம்பாகக் காட்சி தந்தது. மர்மத்தைத் தாக்கும் அதன் கூர்மையில் மலைத்து நின்றேன்.

சக்கரவர்த்தி இதற்குள் என்னருகில் வந்து நின்று, "அதைத் திறந்து பாருங்கள், சார்! 'ஜெனுயின் டிகிரி'! உண்மையான பட்டம், சார்! கீழே வைஸ்சான்ஸலரின் கையெழுத்துக்கூட இருக்கிறது!" என்றான்.

நான் அது வரையில் மௌனமே உருவாக அந்த அறையில் நின்று கொண்டிருந்தேன். சக்கரவர்த்தி என் செவிகளின் அருகில் வந்து கிசுகிசுத்தான், "ஏதாவது பேசுங்கள், சார்! இல்லா விட்டால் அம்மா சந்தேகப் படுவாள்!" என்றான்.

திடீரென்று ஒரு குழந்தை அழுதது. சக்கரவர்த்தியின் தாயார் அதை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு தூங்கப் பண்ணினாள். இதற்குள் மற்றொன்று விழித்துக் கொண்டு விட்டது. அதுவும் அழத் தொடங்கியது. இரவு ஒன்றரை மணி சுமாருக்கு அந்தக் குழந்தை அழுத அழுகை உலகம் முழுவதிலும் எதிரொலித்திருக்க வேண்டும். அந்தக் கண நேரத்தில், நான் ஓர் அமெரிக்க உல்லாசப் பயணி என்பதை மறந்து விட்டேன்; நான் வெளிநாட்டவன் என்பதையுமே மறந்துவிட்டேன். இந்த இடத்தைப் பற்றி என் வழிகாட்டி நூலில் எவ்விதக் குறிப்பும் இல்லையென்றாலும் என்னை நான் இழந்து விட்டேன். அதே இடத்தில் வேரோடிப் போய்க் கல்லாகச் சமைந்துவிட்டேன். சக்கரவர்த்தி, "ஸார்!" என்று குரல் கொடுத்தபின்தான் என் நினைவு எனக்குத் திரும்பியது. "வா, வெளியே வா!" என்றேன்.

என் பின்னாலேயே சக்கரவர்த்தி வெளியே வந்தான்! "உன் மனைவியை ஏன் மருத்துவமனைக்கு அனுப்பவில்லை? இது போன்ற நோயாளியை எந்த நிலையிலும் வீட்டில் வைத்துக் கொள்ளக் கூடாது. ஒரே அறையில் உன் குழந்தைகள் இருக்கின்றன, உன் தாயார் இருக்கிறாள், நீ இருக்கிறாய். அது மிக மிகப் பயங்கரமான நோய் அப்பா!" என்றேன்.

"மருத்துவ மனையில் எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் கிடையாது, சார்! யாராவது ஒரு மந்திரி சிபாரிசு செய்தாலோ, அல்லது ஒரு எம். எல். ஏ. மூலம் நின்றாலோ தான் சார், அட்மிஷன் கிடைக்கும்; கவனமும் இருக்கும்!" என்றான் சக்கரவர்த்தி.

எனக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பார்த்தேன். நோட்டுகளாக மொத்தம் எழுநூறு ரூபாய்கள் இருந்தன. சட்டென்று அப்படியே எல்லாவற்றையும் எடுத்துச் சக்கரவர்த்தியிடம் கொடுத்து, "இதை வைத்துக் கொள், சக்கரவர்த்தி! 'கீப் இட் ஃபார் யுவர் ஒய்ஃப்'ஸ் ட்ரீட்மெண்ட்'. உன் மனைவியின் சிகிச்சைக்காக இதை வைத்துக் கொள்! விரைவில் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்!" என்றேன்.

நான் வலுக் கட்டாயமாக அந்த ரூபாய்களை அவன் கையில் அழுத்தினேன். அவன் எந்த விதத்திலும் அதைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. ரொம்பவும் எடுத்துச் சொல்லிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அவனை வற்புறுத்தியதன் பேரில் வேண்டா விருப்பாக வாங்கிக் கொண்டான்.

டாக்ஸி இன்னும் நின்று கொண்டிருந்தது. நான் டாக்ஸியை நோக்கி நடந்தேன். சக்கரவர்த்தியும் என்னை வண்டி வரை கொண்டு விடுவதற்காக வந்தான். "ஆமாம், நீ உன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் நாய்க்கும் ஏன் சரிவர உணவு அளிப்பதில்லை?" என்று கேட்டேன்.

இத்தனை நேரத்துக்குப் பின் சக்கரவர்த்தி இலேசாக இளநகை புரிந்தான். 'பிரஞ்சு நாட்டு ராணி ஒருத்தி இதே கேள்வியைக் கேட்டாளாம்!" என்றான்.

"இல்லை. நான் அதற்குச் சொல்லவில்லை. நாங்கள் அமெரிக்காவிலிருந்து இலட்சக் கணக்கான டன்கள் கோதுமை, அரிசி, பவுடர் பால் என்று இந்தியாவுக்கு அனுப்புகிறோமே, அதெல்லாம் உங்களைப் போன்றவர்களுக்கு உதவத்தானே? அதை ஏன் நீ வாங்கிக் கொள்ள வில்லை?" என்று கேட்டேன்.

சிறிது நேரம் சக்கரவர்த்தி மௌனமாக இருந்தான். "மெய்தான், சார்! நீங்கள் இவையெல்லாம் அனுப்புவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகின்றன. மெய்தான் சார்!" என்றான்.

இப்பொழுதுதான், இந்தப் பொருள்கள் சரியான இடத்துக்குப் போய்ச் சேருவதில்லை என்பதை நான் புரிந்து கொண்டேன். "நான் நாளைக்குச் சரியாக மாலை ஆறு மணிக்குக் கல்கத்தாவை விட்டுப் புறப்படுகிறேன். நீ நாளை மதியத்துக்குப்பின், சரியாக மூன்று மணிக்கு என்னைச் சந்திக்க முடியுமா?.... 'பாசிடிவ்லி' மூன்று மணிக்கு!" என்று அழுத்தம் கொடுத்துக் கூறினேன்.

"ஏன்? எதற்கு சார், இப்படி ஓர் உத்தரவு போடுகிறீர்கள்?" என்று ஐயத்தோடு கேட்டான் சக்கரவர்த்தி.

"நான் உனக்கு இன்னும் கொஞ்சம் பணம் தர விரும்புகிறேன். ஆமாம், இப்பொழுது என்னிடம் இருந்ததை உன்னிடம் கொடுத்து விட்டேன். நாளைக்குக் கட்டாயம் என்னை ஹோட்டலில் வந்து பார்! இன்னும் முந்நூறு என்றால் உனக்குத் தர முடியும். எந்த வகையிலாவது உனக்கு நான் உதவ விரும்புகிறேன். அதற்குத்தான்!" என்றேன்.

சக்கரவர்த்தி இலேசில் ஒப்புக் கொள்ளவில்லை. நான் மிகவும் வற்புறுத்தியதன் பேரில் ஒருவாறு சம்மதித்தான். டாக்ஸியில் உட்கார்ந்தபின் மறுபடியும் ஒரு முறை அவனுக்கு நினைவுபடுத்தினேன். "மூன்று மணிக்குக் கட்டாயம் வந்து விடு. நான் உனக்காக 'வெயிட்' செய்வேன். ஆமாம், காத்திருப்பேன்!" என்றேன்.

அப்பொழுது கடிகாரத்தில் மணி இரவு இரண்டரை.

காலைத் தூக்கம் கலைய நேரமாகி விட்டது. நான் எங்கும் வெளியே போக வில்லை.

என் வழிகாட்டி வந்து திரும்பி விட்டான். நானே 'லைட் ஸீயிங்' செய்து விட்டதாக அவனுக்குக் கூறி அனுப்பி விட்டேன். ஹாரூம் அலியும் இரண்டொரு முறை என் அறையை வட்டமிட்டான். கடிகாரத்தைப் பார்த்தேன். மணி மூன்று ஆகிக் கொண்டிருந்தது. சக்கரவர்த்தி எப்பொழுதும் வரலாம். எனவே, முந்நூறு ரூபாய்களை எடுத்துச் சட்டைப் பைக்குள் தயாராக வைத்துக் கொண்டேன். நான் இனி நேரமாக்க முடியாது; கூடாது. திரும்ப ஒரு முறை கடிகாரத்தைப் பார்த்தேன். மணி மூன்று அடித்து விட்டது. மூன்று அடித்துப் பதினைந்து நிமிஷங்களும் ஆயின. மூன்று முப்பது. நான் சட்டென்று எழுந்தேன். இனி நான் எதிர்பார்க்க முடியாது! காத்திருக்கவும் முடியாது. ஏனெனில் விமான நிலையத்துக்குப் போக பஸ் வரும் நேரமாகி விட்டது. விமானம் புறப்படும் நேரம் மாலை ஆறு மணி. நான் எதற்கும் முந்தித் தயாராகிவிட வேண்டாமா? இப்படி எண்ணி எழுந்தவிடம், ஹாரூம் அலி ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தான்.

"யார் கொடுத்தது இந்தக் கடிதம்?" என்று கேட்டேன்.

"யாரோ ஒருவர் இதை மானேஜரிடம் கொடுத்துச் சென்றாராம்!" என்றான் ஹாரூம் அலி.

அரக்கினால் முத்திரை வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில். உறையைக் கிழித்துப் பார்த்தபின் அப்படியே அயர்ந்துவிட்டேன். அதற்குள் அந்த எழுநூறு ரூபாய் நோட்டுகளும் அப்படியே விள்ளாமல் விரியாமல் இருந்தன. கூடவே, ஒரு சிறு கடிதமும் இருந்தது. இடது மூலையில் அச்சிட்டிருந்தது, 'ஏ. வி. சக்கரவர்த்தி. ஆர்டிஸ்ட் பெய்ண்டர்' என்று.

"அன்புள்ள ஐயா,

நேற்று தாங்கள் கொடுத்த எழுநூறு ரூபாயையும் இத்துடன் திருப்பியனுப்புகிறேன். இக்கடிதம் கொண்டு வருபவர் மூலமாக. இன்று மூன்று மணிக்குத் தங்களைச் சந்திப்பதாக வாக்களித்ததை நிறைவேற்ற இயலாமைக்கு மிக மிக வருந்து



ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்குச் சிறந்தது

கடுமையான அஜீரணத்தின் விளைவு எப்போதும் வேதனையும், வலியும்தான். எதிலும் கவனம் செலுத்த முடியாது. எவரிடமும் சமுகமாக இருக்க இயலாது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் அருந்துங்கள்.
அது துரிதமாகவும் திறமையாகவும் செயல்பட்டு, வலியிலிருந்தும், வேதனையிலிருந்தும் விரைவில் உங்களுக்கு நிவாரணம் அளிக்கிறது.
ஜீரண உறுப்புகளுக்கு பாதுகாப்பளித்து, வயிற்று அமிலங்களை சமனப்படுத்தி, எளிதிலே ஜீரணிக்க உதவுகிறது.
ஹ்யூலெட்ஸ் மிக்சர், குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் சிறந்தது.

ஹ்யூலெட்ஸ் மிக்சரை (கறுப்பு மூடி) வயிற்றுப் போக்கிற்கும் உபயோகிக்கலாம்.

C. J. ஹ்யூலெட் & சன் (இந்தியா)
பிரைவேட் லிமிடெட். 150-A/2,மவுண்ட்ரோடு,சென்னை-2

CJH-6098

கிறேன். நேற்று இரவே என் மனைவியின் ஆவி பிரிந்து விட்டது. தங்களுக்கு நன்றி.

தங்கள்

...............''

இவ்வளவுதான் அதில் எழுதப்பட்டிருந்தது. இதற்குமேல் ஒரு கோடுகூட அதிகமாக இல்லை.

நான் அந்த ரூபாய்களையும் கடிதத்தையும் கையில் வைத்துக் கொண்டு வெகு நேரம் நின்றேன் அப்படியே. எதுவுமே எண்ணிப் பார்க்க இயலவில்லை. எத்தனை நேரம் அப்படி மூளை மரத்திருந்ததோ, தெரியாது. நினைவு வந்த பொழுது மணி நான்கு அடித்து விட்டிருந்தது. ஹோட்டலுக்கெதிரே விமான நிலயத்துக்குப் போகும் பெருந்து வந்து நின்று விட்டிருந்தது. ஹோட்டல் ஆள் என் சூட்கேஸைக் கீழே எடுத்துச் சென்று விட்டிருந்தான்.....''

''அப்புறம்....?'' நான் கேள்வியைத் தொடுத்தேன்.

''அப்புறம் என்ன?'' மிஸ்டர் ரிச்சர்ட் கூறினார்: ''இதோ நான் போய்க் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்!'' என்றவர் ஏகமாக உணர்ச்சி வசப்பட்டு விட்டார். உரக்கவே கூவினார் : ''ஆனால் இன்று நான் உங்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இது தவறு; பெருந் தவறு. இது குற்றம்; பெருங் குற்றம். இது அநியாயம்; பயங்கர அநியாயம். இது பாவம், பெரும் பாவம்; கடும் பாவம். இது உண்மை அல்ல; பொய், பச்சைப் பொய். இத்தகைய 'ஆனெஸ்டி'க்கு — நாணயத்துக்கு — இந்த மாடர்ன் உலகத்திலே ஒரு மதிப்பே கிடையாது; கிடையாது !''

மிஸ்டர் ரிச்சர்டின் இத்தனை உரத்த குரலைக் கேட்டு நாற்புறமிருந்தும், மற்ற இடங்களில் உட்கார்ந்திருந்தவர்கள் எங்களைக் கூர்ந்து கூர்ந்து கவனிக்கலானார்கள். நான் பேசாமல் இருந்தேன். அப்பொழுது நாங்கள் பூமியிலிருந்து பதினாறாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தோம். அத்தனை உயரத்தில் உட்கார்ந்துகொண்டு, உலகத்து மக்களின் பிரச்னையைப் பற்றிச் சிந்திப்பது எனக்குப் பெருத்த வியப்பாக,வேடிக்கையாகப்பட்டது. இந்த விலை உயர்ந்த டின்னர், லெமென் ஸ்குவாஷ் — இவற்றினூடே நாட்டுப் பிரச்னைகளைப் பற்றிப் பேசுவதே என் கருத்தில் ஒரு தவறாக, பாவமாகப் பட்டது! கண்ணீர் விடுவதுகூட இங்கே ஒரு குற்றம். இப்படி எண்ணி நான் மௌனமே உருவாக உட்கார்ந்திருந்தேன்.

வெகு நேரம் கழித்து, கொதித்து அடங்கிய பால் என மிஸ்டர் ரிச்சர்ட் திடுதிப்பென்று என்னைப் பார்த்துக் கேட்டார் : ''நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா? விடையளிப்பீர்களா ?''

''என்ன ?''

''நாங்கள் லட்சக்கணக்கான டன்கள் கோதுமை, அரிசி, பால் பவுடர் என்று இந்தியாவில் வாழும் ஏழை மக்களுக்காக அனுப்புகிறோமே, அவையெல்லாம் எங்கே போகின்றன ? அவை ஏன் ஏழைகளுக்குப் போய்ச் சேருவதில்லை?''

மிஸ்டர் ரிச்சர்டின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று எனக்கும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. விமானத்துக்குள்ளே நாங்கள் அனைவருமே தூய்மையான விலை உயர்ந்த கோட், பாண்ட்ஸ், சூட், டை என்று அணிந்து உட்கார்ந்திருந்தோம். எல்லாரும் கொழுத்த பணம் கொடுத்து டிக்கட் வாங்கியிருக்கிறோம். லெமென் ஸ்க்வாஷும் டாஃபிகளும் தின்றிருக்கிறோம். டின்னர் சாப்பிட்டுவிட்டு அதற்கு மேல் காப்பியும் ஊற்றியிருக்கிறோம். இந்த நிலையில் இதைப் பற்றிப் பேச நமக்கு ஏதாவது உரிமை உண்டா? 'ஐயா! ஒரு நாள்தான் நீங்கள் கல்கத்தாவைப் பார்த்திருக்கிறீர்கள். அதிலும் முழுசாகப் பார்க்கவில்லை. அதற்குள்ளேயே இப்படி ஒரு நிலையா? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! நாங்கள் வாழ்க்கை முழுவதுமே இங்கு வாழ்ந்திருக்கிறோம். பழம் தின்று கொட்டை போட்டிருக்கிறோம். அடிக்கு ஒரு தடவை, மனிதனின் கீழ்த்தனத்தையும் அவமதிப்பையும் கண்டு சகித்து வந்திருக்கிறோம். மனிதத் தன்மைக்கு இழைக்கப்படும் துரோகத்தை ஒவ்வொரு மூச்சிலும் கண்டு அநுபவித்து வருகிறோம். அதனால் எங்கள் கண்களில் நீர் வறண்டு விட்டது. எங்கள் தோல்கள் தடித்து விட்டன. எனவே விடுங்கள், இந்த விஷயங்களை! இதில் எல்லாம் என்ன இருக்கிறது? வேறு பேச்சுப் பேசுவோம், வாருங்கள் ! பேசுவதற்கு விஷயங்களா, குறைச்சல்?' என்று சொல்லலாமா என்று ஒரு கணம் தோன்றியது. ஆனால் நான் அதுவும் சொல்லவில்லை.

எதிரே உள்ள விளக்கு எரிந்தது. எனது தர்மசங்கடத்தைத் தவிர்க்கவேதானோ, என்னவோ ? அந்த விளக்கின் ஒளியில் சில எழுத்துக்கள் தெரிந்தன. ''ஃபாஸன் யுவர் பெல்ட்ஸ்' உங்கள் இடுப்புப் பட்டையைக் கட்டிக் கொள்ளுங்கள் !''

நாங்கள் உடனே வரித்து கட்டிக் கொண்டோம். வெளியே எட்டிப் பார்த்தோம். பம்பாய் தெரிந்தது. நகரத்தின் எல்லா விளக்குகளும் வைரச் சிதர்களாகச் சிதறி நாற்புறமும் பளிச்சிடுவதைக் கண்டோம்; களித்தோம். விமானம் கீழே இறங்கத் தொடங்கியது. அடுத்து இமைப்பதற்குள் நாங்கள் சாந்தாக்ரூஸ் விமான நிலயத்தில் இருந்தோம். எனக்குப் பசி வந்தது. சொல்லப்போனால் வயிற்று வலி வந்தது. —ஏ. வி.



அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் ஆர்ட் புக்வால்ட் நம்மை ரொம்பவும் திட்டி வரும் கடிதங்களை 'ஃப்ரேம்'போட்டுத் தமது வரவேற்பு அறையில் மாட்டி வைத்திருக்கிறார்.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' — 'மூத்து'

போராட்டங்கள்

13. இரட்டை வாழ்க்கை

முரளியையும், சாரதாவையும் இணைத்து விடக் கனவு கண்டார் பேராசிரியர். ஆனால் சாரதாவின் மனம்?...

''நான் நினைத்தது வேறு; நடப்பது வேறு'' என்று கூறிவிட்டு நெடிய பெருமூச்சு விட்டார் பேராசிரியர். பிறகு சொன்னார் :

''ஆரம்பத்திலேயே நீ கொஞ்சம் முயற்சி எடுத்து இவளைப் 'பாரத மணி'யில் உதவி ஆசிரியராக்கியிருக்க வேண்டும்.... தவறி விட்டாய்.''

''எங்கேயாவது இவள் சந்தோஷமாயிருந்தால் சரிதான்'' என்று முணுமுணுத்தான் முரளி, தரையைப் பார்த்துக் கொண்டே.

''அதைத்தான் நானும் விரும்புகிறேன் முரளி.... ஆனால், இப்போது அவள் செல்கிற பாதை முடியும் போது 'அந்தச் சந்தோஷத்தை அவள் பெறுவாளா




என்றுதான் சந்தேகிக்கிறேன்'' என்றார் பேராசிரியர்.

''சிவராமனைப் பற்றி நீங்கள் பயப்படத் தேவையில்லை.''

''அவனுடைய துணிவிலும், ஆற்றலிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனால், அவன் தனக்கென்று வகுத்துக் கொண்ட லட்சியங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. ஆரம்பத்தில் அவனைப் பற்றி உயர்ந்த எண்ணங்களைக் கொண்டிருந்தேன். வேதமூர்த்தியின் வலையில் அவன் சிக்கிவிட்டதை அறிந்தபோதுதான் அவன் மீதிருந்த நம்பிக்கையை இழந்து விட்டேன்'' என்றார் கமலசாமி. பிறகு சொன்னார் :

''ஒரு தகப்பனுக்குள்ள கடமையை நான் சரியாகச் செய்யவில்லை. நான் என்னைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்து விட்டேனே தவிர, என் மகளைப் பற்றி ஒரு தந்தை எடுக்க வேண்டிய அக்கறையை எடுக்கவில்லை. என் குற்றம் தான் அது......''

சோபாவில் சாய்ந்தவாறே பேச்சைத் தொடர்ந்தார்: ''ஊரிலே பல பதவிகளையும் வகித்தேன். புகழை அடைந்தேன். என்னுடைய மனம் இழுத்த இழுப்பில் அலைந்தேன். ஆனால் ஒரு தந்தையின் கடமையை மட்டும் செய்யத் தவறித்தான் விட்டேன். இவளுடைய அறிவுக் கூர்மையிலும், குறுகுறுப்பிலும் நம்பிக்கை வைத்தேனே தவிர, ஒரு பெண் மனத்தின் பலவீனங்களைப் பற்றிச் சிந்திக்காமலே இருந்து விட்டேன்..... முரளி, இவளோடு நீ பழகத் தொடங்கியபோது எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேன் தெரியுமா? எனக்கு இனி இவளைப் பற்றிய கவலை இல்லை என்றுதான் நினைத்தேன். அவளுடைய சிந்தனைப் பாங்கு உன் திசையில்தான் செல்லும்; அப்படிச் செலுத்தும் சக்தி உனக்குண்டு என்று நம்பினேன். ஆனால் கடைசியில் ஏமாந்து போய்



விட்டேன்'' என்று கூறிவிட்டு முரளியைப் பார்த்தார்.

முரளி திகைத்து உட்கார்ந்திருந்தான். குற்றச்சாட்டைத் தன் மீதே திருப்பி விட்டாரே என்று புழுங்கினான். ஏற்கனவே வேதனையைச் சுமந்தவனுக்குப் பேராசிரியரின் குற்றச்சாட்டு, சிறிது கோபத்தைக் கிளறியது.

''என்னுடைய திசையில் நான் யாரையும் திருப்ப முயன்றதும் இல்லை. முயலப் போவதுமில்லை. அவரவர்களுடைய திசையை அவரவர்கள்தான் முடிவு செய்து கொள்ள வேண்டும்'' என்றான் முரளி.

அவனுடைய குரலில் தொனித்த கடுமையை உணர்ந்தார் பேராசிரியர்.

''நான் உன்னைக் குறை கூறவில்லை, முரளி. கோபப்படாதே. நான் என்ன நினைத்தேன் என்பதைத்தான் சொல்லுகிறேன்......ஏதேதோ கனவுகள் கண்டேன். சிதைந்து விட்டன. அவ்வளவுதான். இதற்கு யார் மீதும் பொறுப்பைப் போடவில்லை. நான் நினைத்தபடி நடந்திருந்தால், என் மனம் நிம்மதி அடைந்திருக்கும்'' என்று கூறிவிட்டு நிறுத்தினார்.

முரளி தரையையே பார்த்தவாறு அமர்ந்திருந்தான். பேராசிரியருடைய மனக் கலக்கத்தின் காரணத்தைத் தனக்குள் அலசினான்:

சிவராமன் கம்யூனிஸ்ட் கட்சியில் இல்லாமல் இருந்தால் இவர் இப்படிப் பதறுவாரா? அக்கட்சியில் இருக்கிறான் என்னும் ஒரே காரணத்தினால் தானே அவனை வெறுக்கிறார்? இல்லையென்றால், அவனுடைய தொடர்பைப் பற்றி என்னிடம் சொல்வாரா, என்னைப் பற்றித்தான் அக்கறை எடுப்பாரா.... என்மீது அக்கறை கொள்ள இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்?

''சரி, நேரமாகிறது. நான் வரட்டுமா?'' என்று கூறித் திடுதிப்பென்று எழுந்தான் முரளி. பேராசிரியர் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். அவனை உற்றுப் பார்த்தார். அவனுடைய கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டான்.

''நிஜமாகவே கோபித்துக் கொண்டு விட்டாயா என்ன?'' என்று கேட்டுக் கொண்டே அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டார்.

''என்னைத் தவறாக எண்ணிவிடாதே, முரளி.... உன் மீது நான் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறேன்! நீகூட என்னைப் புறக்கணித்து விட்டுப் போகிறாயா?'' என்று கேட்டார். அவருடைய குரல் கெஞ்சியது.

''நான் கோபப்படவில்லை... நேரமாகிறதே என்றுதான் எழுந்தேன்'' என்று கூறிவிட்டு மீண்டும் சோபாவில் அமர்ந்தான். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. இருவருடைய சிந்தனையும் எங்கெல்லாமோ திரிந்து கொண்டிருந்தது. திடீரென்று கமலசாமி பேசினார்:

''இப்போதுகூடச் சிவராமனைப் பார்க்கத்தான் போயிருக்கிறான். ஏதோ புஸ்தகம் வாங்கப் போவதாகக் கூறினான்... கம்யூனிஸ்டுக் கட்சியின் சித்தாந்தங்களைப் பற்றிய புத்தகங்களைத்தான் இப்போதெல்லாம் படிக்கிறான். எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை'' என்றார்.

அப்போது போர்டிகோ பக்கத்தில் காலடி ஓசை கேட்கவும், இருவரும் திரும்பினர். சாரதா வந்து கொண்டிருந்தாள். தந்தையும் முரளியும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டுச் சிரித்துக் கொண்டே அவர்களை நெருங்கினாள். முரளி சிரிப்பை வரவழைத்துக் கொண்டான். பேராசிரியர், ''மணி பத்தாகி விட்டதே! எங்கே போயிருந்தாய்?'' என்று கேட்டார். அவருடைய குரல் அவரையும் அறியாமல் சற்றுக் கடுமையாக ஒலித்தது.

''என்னப்பா, அதற்குள்ளா மறந்து போய் விட்டீர்கள்? சிவராமனைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லி விட்டுத் தானே போனேன்.''


''ஆறு மணிக்கே போனாயே......?''

''ஆமாம்.... இவ்வளவு நேரமாகி விட்டது. அடுத்த வாரம் கம்யூனிஸ்ட் கட்சி மண்டலக் காரியதரிசிகள் கூட்டம் நடக்கிறதாம். அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க என்னையும் அழைத்தார்.''

''கட்சிக் கூட்டம் நடந்தால் உனக்கென்ன?'' என்று சற்றுக் கோபத்துடன் கேட்டார் கமலசாமி.

''கட்சிக் காரியதரிசி நல்லதம்பியும் உதவிக்கு இல்லை. ஹைதராபாத்துக்குப் போயிருக்கிறாராம். பாவம், இவர் தனியாகக் கிடந்து வேலை செய்கிறார். நானும் கூட இருந்து வேலை செய்தேன். அதனால்தான் நேரமாகி விட்டது'' என்றாள் சாரதா. அவளுக்குக் கமலசாமியின் கேள்விகள் திகைப்பைக் கொடுத்தன. ஒரு நாளும் இல்லாமல் அவர் இப்படிக் கேள்விகள் கேட்கிறாரே என்று திகைத்துக் குழம்பினாள். ஒரு முறை ஓரக் கண்ணால் முரளியைக் கவனித்தாள்.

அவனோ வெளியே இருளை நோக்கிக் கொண்டிருந்தான்.



வீட்டையே ஏன் பாங்காக வைத்திருக்கிறீர்கள்?

யுகோபாங்கில் பணத்தைப்போடுவது அதிக பாதுகாப்புடையது, லாபகரமானது!

யுகோபாங்க் டிபாஸிட் ஸ்கீமில் நீங்கள் போடும் பணத்திற்கு வட்டி கிடைக்கிறது. விவசாயம் சிறு தொழில்கள், ஏற்றுமதி இவற்றை அபிவிருத்தி செய்ய அது உதவுகிறது. அது இந்தியாவின் பொருளாதார, வேலை வாய்ப்பு பிரச்னைகளுக்குத் தீர்வு காண மிக இன்றியமையாதது.

யுகோபாங்க் மூலம் உங்கள் பணத்தை புழங்கவிட்டு வளம் பெருகுவதற்கு உதவுங்கள்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை ஆபீஸ் : கல்கத்தா

''சரி, நேரமாகி விட்டது. நீ சாப்பிடப் போம்மா'' என்று கூறினார் பேராசிரியர்.

''என்ன எடிட்டர் சார், மௌன விரதமா?'' என்று கேட்டாள் சாரதா.

''நீயும் பேசவில்லை; நானும் பேசவில்லை'' என்றான் முரளி.

''வந்த உடன் அப்பாதான் குறுக்கு விசாரணையில் இறங்கி விட்டாரே!'' என்றாள் சாரதா. கமலசாமியின் முகத்திலிருந்த கடுகடுப்பு மறைந்து விட்டது.

சிரித்தவாறே சோபாவில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''நேரமாகி விட்டதே என்று கேட்டேன்..... பாரப்பா முரளி, அதற்குள் இவளுக்குக் கோபம் வந்து விட்டது'' என்றார். ''முதலில் நீ போய்ச் சாப்பிடு, பசியோடு வந்திருப்பாய். இப்போது உனக்குக் கோபம்தான் வரும்'' என்றார். சாரதா சிரித்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள்.

''முரளி! உன்னிடம் நிறையப் பேச வேண்டியிருக்கிறது. வாயேன் பார்க் வரை போய் விட்டு வருவோம்'' என்றார் கமலசாமி.

முரளி தயங்கினான். அவனுடைய மனம் அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தது. எங்கேயாவது தனிமையாக இருந்தால் மனம் அமைதியடையும் என்று நினைத்தான். ஆனால் பேராசிரியரின் வேண்டுகோளையும் தட்ட முடியவில்லை. சரியென்று தலையை ஆட்டினான்.

இருவரும் காரில் ஏறிக் கொண்டு பார்க்கை நோக்கிச் சென்றார்கள்.

பத்து மணிக்கு மேல் இரவில் பார்க்கில் கூட்டம் அதிகம் இல்லை. இருள் அப்பிக்கிடந்த ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் ஆணும் பெண்ணுமாகச் சில ஜோடிகள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். விளக்கொளி அதிகமில்லாத புல் தரையில் போய்க் கமலசாமி அமர்ந்தார். அவருக்குப் பக்கத்தில் கால்களைக் கைகளால் கட்டிக்கொண்டு அமர்ந்தான் முரளி. அவனுடைய கண்கள் இருளில் அமர்ந்திருந்த ஜோடிகளைக் கூர்ந்து பார்த்தன. சில ஜோடிகள் மிகவும் நெருங்கியிருந்து சரசமாடிய காட்சி அவன் பார்வையில் பட்டதும், பார்வையைத் திருப்பிக் கொண்டான். அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''என்ன சிரிக்கிறாய்?'' — பேராசிரியர் கேட்டார்.

''வீட்டில் வசதி இல்லையென்று இங்கே இப்படிப் பொது இடத்தில் வந்து இருந்து கொண்டு இந்த ஜோடிகள் தவிக்கிறார்களே'' என்றான் முரளி, சிரித்துக் கொண்டே. பேராசிரியர், கண்களை இடுக்கிக் கொண்டு முரளி பார்த்த திசையில் தம் பார்வையைச் செலுத்தினார். இருட்டினுள் இரு உருவங்கள் அசைவது தெரிந்தது. பேராசிரியரும் சிரித்துக் கொண்டார்.

''இது சட்டபூர்வமான ஜோடியோ, அல்லது தாற்காலிக ஜோடியோ'' என்று கேட்டுவிட்டு மீண்டும் சிரித்தார். பிறகு ''மனிதனுக்கு எத்தனையோ ஆசைகள்'' என்று முனகிக் கொண்டே, இருட்டில் தெரிந்த இரு உருவங்களையும் உற்றுப் பார்த்தார். அவை இரண்டும் எழுந்து பூங்காவை விட்டு வெளியேறுவதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு முரளியின் பக்கம் திரும்பினார்.

''இரண்டு கேள்விகள் கேட்பதற்குள் சாரதாவுக்குக் கோபம் வருகிறதே, பார்த்தாயா... உம்... அவளைச் செல்லமாகவே வளர்த்து விட்டேன். அவள் அம்மா இருந்திருந்தால் அவள் குணம் இப்படி ஆகியிருக்காது. என்னால் எவதையும் கண்டிப்புடன் அவளிடம் சொல்ல முடியவில்லையே? அதற்குள்ள தெம்பு எனக்கு இல்லை. தகுதிகூட இல்லை, முரளி'' என்றார்.

முரளி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவர் மீண்டும் பேசினார்.

''அவளைக் கண்டிக்கவோ, திருத்தவோ எனக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று கேட்பது போல்தான் சில சமயங்களில் அவள் என்னைப் பார்க்கிறாள். அவளுடைய அந்தப் பார்வையில் சிந்தும் வெறுப்பு, என்னை தலைகுனிய வைத்து விடுகிறது... என்னுடைய குற்ற உணர்ச்சி என்னைத் தலைகுனிய வைக்கிறது... குற்றமுள்ள மனத்

கடல் ஏன் செத்தது?

இறந்த கடல் (Dead Sea) என்று ஒரு கடல் குறிப்பிடப்படுகிறதே அது ஏன்?

அதுவும் எல்லாக் கடலையும் போல் 'உப்புக் கடல்'தான்! மற்ற கடல்களில் உப்பின் அளவு மூன்றிலிருந்து நான்கு சதம் வீதம். ஆனால் அந்தக் கடலில் நூற்றுக்கு இருபத்தாறு பங்குக்கும் அதிக உப்புக் கலந்திருக்கிறது. இவ்வளவு உப்பு உள்ள கடலில் எந்த நீர் வாழ்வனவும் வாழ்ந்துவிட முடியாது. ஒரு சிலவே இச்சூழலில் ஜீவிக்கும் சக்தி பெற்றுள்ளன. எனவே தான் ரோமானியர் இதை 'டெட் ஸீ' ஆக்கிவிட்டனர்.

''தேநு''



தைச் சுமந்து கொண்டு அவனுக்கு எதிரில் நிமிர்ந்து நிற்க முடியவில்லையே...''

பேராசிரியரின் பேச்சு முரளியைத் திகைக்க வைத்தது. எதைப் பற்றி அவர் குறிப்பிட விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்டான். மிகுந்த அக்கறையோடும், சிறிது வெட்கத்தோடும் அவரைப் பார்த்தான். அவர் தொடர்ந்து பேசினார் :

''எத்தனையோ பதவிகளை வகித்து விட்டேன். புகழ் என்னைத் தேடி வந்தது. எங்கு சென்றாலும் மதிப்பும், மரியாதையும் இருக்கிறது... ஆனால்..... ஆனால் பெற்ற மகள் முன்னால் நான் கூசத்தான் வேண்டியிருக்கிறது. முரளி, என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

இந்தக் கேள்வியை முரளி எதிர்பார்க்கவேயில்லை. திடீரென்று வந்து விழுந்த கேள்வி அவனைத் திணறடித்து விட்டது. குழப்பத்துடன் வெறிக்கப் பார்த்தான். பதில் ஏதும் கூறத் தெரியாமல் விழித்தான்.

''முரளி, நான் யாருடனும் நெருங்கிப் பழகுவதில்லை. ஆனால் உன்னோடு மட்டும் எனக்கு ஒருவித நெருக்கம். என்னுடைய மாணவன் என்ற முறையில் நான் உன்னோடு பழகவில்லை முரளி. எனக்கு நீ தோழன் மாதிரி... ஒளிக்காமல் சொல்... என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''நினைக்க என்ன இருக்கிறது'' என்றான் முரளி, மரியாதையுடன்.

''என்னைப் பற்றி ஊரில் பேசுவதை நீயும் கேட்டிருப்பாய். எனக்கு எதிரே எதுவும் பேசாவிட்டாலும், எனக்குப் பின்னால் பேசத்தான் செய்வார்கள். எனக்குப் பின்னாலிருந்து எல்லாரும் என்னைக் கூர்ந்து பார்க்கத்தான் செய்வார்கள்...... நீயும் கேள்விப்பட்டிருப்பாய்... சும்மாச் சொல்லு முரளி...''

பாவம், முரளி இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்டு திணறினான். எதைச் சொல்லுவது? அவனுடைய மனத்தில் மிக உயர்ந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் புகழ் வாய்ந்த பேராசிரியர் அவர். ஒரு தந்தையைப் போல் அவனிடம் பரிவும், பாசமும் கொண்ட அவருடைய நடத்தையையும், பலவீனத்தையும் அவரிடமே எப்படிச் சொல்ல முடியும்? பதில் ஏதும் கூறாமல் அவரையே வெறிக்கப் பார்த்தான்.

''கொஞ்ச நாளைக்கு முன்னால், ஞாபகம் இருக்கிறதா...? மறந்திருக்க மாட்டாய். நீயும் சாரதாவும் இரவு வெகு நேரம் வரை வராந்தாவில் அமர்ந்தபடி எனக்காகக் காத்திருந்தீர்களே.... அப்போது என்னால் சாரதாவை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியவில்லை. அவளுடைய பார்வை என்னைக் காரில் கொண்டு வந்து விட்டுவிட்டுப் போன ஜானகி மீதே பதிந்திருந்ததைக் கண்டேன். ஜானகியின் கார், வெளி கேட்டைத் தாண்டிய பிறகுதான் சாரதாவின் பார்வையும் திரும்பியது.... நான் வருவதற்கு முன் சாரதா உன்னிடம் ஏதாவது சொன்னாளா?''

'இல்லை' என்று தலையசைத்தான் முரளி. அவனுக்கு அவரைக் காணவே பரிதாபமாக இருந்தது.

எவ்வளவு பெரிய மனிதர்; தம்முடைய குறையை எண்ணிக் குறுகிப் போகிறாரே...!

பைக்குள்ளிருந்து ஒரு சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டே கமலசாமி பேசினார்.

''தனக்காகத் தனிமையில், இரகசியத்தில் ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு தான் ஒவ்வொருவனும் வாழ்கிறான். ஆனால், சமூகத்தின் நடுவில் நின்று கொண்டு மற்றவர்களைப் பார்க்கும்போது, வேறு மாதிரியாகப் பார்க்கிறான்! இந்த இரட்டை வாழ்க்கை அவசியமாகத்தான் இருக்கிறது. சமூகத்தையும் திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது; தன்னையும் திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது..... சமூகத்துக்காகத் தன்னுடைய சுய உணர்ச்சிகளையும், ஆசை வெறிகளையும் ஒழித்து யாருமே வாழ்வதாகத் தெரியவில்லை. அதெல்லாம் மகான்களாலும், தெய்விகப் பிறவிகளாலும் மட்டுமே ஆகக் கூடிய செயல். ஆனால் நான் ஒரு சாதாரண மனிதன்தான் முரளி.''

இப்படிக் கூறிவிட்டுக் கமலசாமி முரளியை உற்றுப் பார்த்தார். அவனோ மிகுந்த வியப்புடன் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது இதையெல்லாம் ஏன் சொல்லுகிறார் என்ற கேள்விதான் அவனுள் குமைந்துகொண்டிருந்தது.

தம்முடைய செயலுக்குக் காரணம் காட்டி நியாயம் தேடுகிறார் என்பது மட்டும் அவனுடைய உள்ளுணர்வில் தட்டுப்பட்டது. பதில் ஏதும் கூறாமல் மௌனமாக அமர்ந்திருந்தான்.

''மகாத்மாக்களையும், துறவிகளையும் பற்றிப் படிக்கும்போது வியப்பாகத்தான் இருக்கிறது. ராமலிங்க அடிகளையும், ரமண மகரிஷியையும் நினைக்க நினைக்கப் பிரமிப்பாயிருக்கிறது. மனைவியைப் பக்கத்தில் இருத்திக் கொண்டே அவளைத் தாயாகப் பாவிக்கும் மன உறுதி பரமஹம்ஸருக்கு எப்படி வந்

தது...? நம்முடைய கண்ணாலேயே காந்தியடிகளைக் கண்டோமே... இவர்களெல்லாரும் அடிப்படையான மிருக உணர்வைக் களைந்தெறிந்துவிட்ட விசித்திரத்தை என்னால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியவில்லை. கேவலம் இந்தச் சுருட்டைக்கூட என்னால் தியாகம் செய்ய முடியவில்லை. சாரதா அடிக்கடி சொல்லுவாள், நாற்றம் பிடித்த சுருட்டை எப்போதுதான் விடுவீர்களோ என்று.... நாளாகப் பழகிக் கொண்ட இந்தச் சுருட்டையே விட்டொழிக்க முடியவில்லையே; உடலுக்குள் இயல்பாக எழும் வேகங்களையா ஒழித்து விடப் போகிறேன்....?''

இப்போது முரளி குறுக்கிட்டான்: ''நீங்கள் குறிப்பிடுகிற மகாத்மாக்களும் மனிதர்கள்தாம்'' என்றான்.

இதைக் கேட்டதும் பேராசிரியர் நிமிர்ந்து உட்கார்ந்தார். முரளியை வியப்புடன் உற்றுப் பார்த்தார். தம்மை முரளி மடக்கி விட்டான் என்னும் உணர்வு அவரிடம் சோர்வை உண்டாக்கி விட்டது. அவர் சொன்னார்: ''என் மீது நீ கொண்டிருக்கும் அன்பினாலும், மரியாதையினாலும் என்னைப் பற்றிக் குறை கூறவோ, மட்டமாகப் பேசவோ மாட்டாய். ஆனால் என்னைப் பற்றி நீ உன் மனத்தில் என்ன நினைக்கிறாய் என்பதை நான் புரிந்து கொள்ள முடிகிறது முரளி....''

''நான் உங்களைப் பற்றித் தவறாக ஒரு போதும்....'' — பரபரப்புடன் குறுக்கிட்டுக் கூறினான் முரளி.

''நோ... நோ... உன்னை நான் குறை கூறவில்லை. என்னிடமுள்ள குறைகளைத்தான் சொல்லுகிறேன். இதைப் பற்றி நீ நினைத்துப் பார்த்திருப்பாய். சாரதாவுக்கும் என் மீது கோபந்தான். வெளியே சொல்ல முடியாமல் இருக்கிறாள். வேறு நபராக இருந்தால் விமர்சனமே செய்திருப்பாள்....''

பேச்சை நிறுத்திவிட்டுக் கமலசாமி இருளில் பார்வையைச் செலுத்தினார். அவருடைய சிந்தனை வெகுதூரத்துக்கப்பால் திரியத் தொடங்கி விட்டது என்பதை அவருடைய பார்வையிலிருந்து உணர்ந்தான் முரளி. அவரைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாகத்தான் இருந்தது.

மீண்டும் பார்வையை முரளியின் பக்கம் திருப்பினார் கமலசாமி.

''சாரதாவுக்காகத்தான் நான் இரண்டாந்தாரமாகக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அவளை எந்தக் கவலையும் இல்லாமல் வளர்க்க வேண்டும் என்று நினைத்தேன். அப்படியே இன்று வரை வளர்த்து விட்டேன். அம்மா இல்லாத குறையே அவளுக்குத் தெரியக் கூடாது என்பதுதான் என் ஆசையெல்லாம்.... அம்மா இல்லாத குறையை நான் தீர்த்து விட்டேன். ஆனால் மனைவி இல்லாத குறை, என்னை வேறு திசையில் இழுத்து விட்டது. இதைத் தவிர்க்க என்னால் முடியவில்லை. ஆமாம்? என்னைப் பொறுத்தவரை இது தவிர்க்க முடியாததுதான். இதைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், பின்னாலிருந்து என்னைத் தூற்றலாம். அதற்காக நான் கவலைப்படவில்லை'' என்று கூறிவிட்டு எங்கோ சூனியத்தில் பார்வையைச் செலுத்தினார். அவருடைய மனக் குழப்பம், முகத்தில் நன்றாகப் பிரதிபலித்தது. முரளியின் பக்கம் திரும்பி அவனை உற்றுப் பார்த்தவாறு சொன்னார்: ''முரளி...! என்னுடைய செயல்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டியவள் எப்போதோ போய் விட்டாள். என்னுடைய போக்குக்குக் காரணமே அவளுடைய மறைவுதான். இதைப் பற்றிப் பேசவோ, விமர்சனம் செய்யவோ, அவள் ஒருத்திக்குத்தான் உரிமை உண்டு....ஆமாம்! வேறுயாருக்குமே உரிமை கிடையாது.'' அவருடைய குரலில் கோபம் தொனித்தது. சமூகத்தின் குரல், அவர் காதில் அப்போது ஒலித்ததோ என்னவோ; முரளி தான் ஏதாவது அவர் மனம் புண்படும்படி பேசி விட்டோமோ என்று பயந்தான். ஆனால் அவர் கோபம் உடனேயே தணிந்துவிட்டது. (தொடரும்)



''கடிதங்களை டைப் செய்கிறபோது நீ செய்கிற தவறுகளை அழிக்க ரப்பர் வேணும்னியே; அதற்காக இரண்டு டஜனாக வாங்கிண்டு வந்துட்டேன். இரண்டு நாளைக்குக் காணும்னு நினைக்கிறேன்!''



எதிர்பாராமல் கிழிந்து விட்ட இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுகளை ஸ்டேட் பாங்கில் கொடுத்து மாற்று நோட்டு கேட்ட போது ரிசர்வ் பாங்கிக்கு அனுப்பி மாற்றிக் கொள்ளுமாறு கூறிவிட்டனர். இச் சிறு தொகையைத் தபால்மூலம் இன்ஷ்யூர் செய்து அனுப்புவதில் சிரமங்கள் இருக்கின்றன. தபால் கட்டணமும் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. கால தாமதமும் ஏற்படக்கூடும். அரசாங்க பாங்கியான ஸ்டேட் பாங்கிலேயே இம்மாதிரி கிழிந்த நோட்டுகளை மாற்றும் வசதி யில்லாமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. மேலும் எல்லாப் பெரிய பாங்குகளுமே இப்போது அரசினர் பாங்குகள் தாமே? இம்மாதிரி சிறு தொகைகளைக் கூட ரிசர்வ் பாங்குக்குத்தான் அனுப்பி மாற்றிக் கொள்ள வேண்டும் என்று விதிகள் இருப்பின் அதை மாற்றி ஆங்காங்குள்ள பாங்குகளிலேயே மாற்றிக் கொள்ளும் வசதியைப் பொது மக்களுக்குச் செய்து கொடுப்பார்களாக.

ஈரோடு.
11-9-70 மா. தனராஜன்.

❋ இக்கடிதம் 15 ரூபாய் பரிசு பெறுகிறது

சென்னையிலிருந்து திருச்சிக்கு நம் தமிழக அரசின் (மாடி) துரிதப் பேருந்து மூலம் வந்து சேர்ந்தேன். முன்னதாகவே சீட் ரிசர்வ் செய்ததில் எனக்கு முதல் ஸீட் கிடைத்தது. முதல் இரண்டு ஸீட்டுகளும் பேருந்தின் முன் சக்கரத்தின் மேல் அமைந்துள்ளன. முன் சக்கரத்தின் "மட்கார்டு" பேருந்தின் உள்ளே வளைந்திருக்கிறது. அதனால் கால்களைக் கீழே வைக்க முடியாமல் சாய்ந்திருக்கும். இம் மட்கார்டுகளின் மேல் இரவு முழுவதும் கால்களை வைத்துக் கொண்டு வரவேண்டியிருக்கிறது.

காலை நீட்டலாமென்றாலோ முன் இரண்டு ஸீட்டுகளுக்கும் முன்னால் தண்ணீர் ஜாடியைப் பொருத்தியிருக்கிறார்கள். ஆகையால் முன்பும் நீட்ட முடியாமல் கீழேயும் வைக்க முடியாமல் "திரிசங்கு சொர்க்கத்தில்" மாட்டிக்கொண்டேன்.

இவ்வளவு கஷ்டங்களுக்கிடையேயும் சிறிது கண்ணயர்ந்தால் ஒரு பிரயாணி நம்மை எழுப்புகிறார். அசட்டுச் சிரிப்புடன், "தாகத்துக்குத் தண்ணீர் வேண்டும்" என்றபடி. நம் கோபத்தைக் காட்ட முடியாமல் அவருக்குத் தண்ணீர் கொடுக்கிறோம். இரவு முழுவதும் இதற்காக அடிக்கடி நம் தூக்கம் கலைகிறது. பிரயாணிகள் தாங்களாகவே தண்ணீர் எடுக்க முடியாதபடி தண்ணீர் ஜாடி பொருத்தப்பட்டிருக்கிறது.

முதல் இரண்டு சீட்டுகளையும் ஒரே சீட்டாக மாற்றி அதைக் 'கண்டக்டர் சீட்டா'க்க வேண்டும். கண்டக்டர் பிரயாணிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதன் மூலம் தொண்டு செய்யலாம்.

டால்மியாபுரம்,
21-9-70 சி. ஆர். திருவேங்கடத்தான்

பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துவதற்காக மாணவர்களிடையே பணம் வசூலிக்கப்படுகிறது. பள்ளியில் பயிலும் ஒவ்வொரு மாணவரும் கண்டிப்பாக ஐந்து ரூபாய் தர வேண்டுமாம். இந்தச் செயல் மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. அன்றாடம் சரியான உணவு, உடை, புத்தகங்கள் இன்றித் தவிக்கும் ஏழை மாணவர்கள் ஐந்து ரூபாய்க்கு எங்கே போவார்கள்? மேலும் ஒரு குடும்பத்தில் நான்கு அல்லது ஐந்து பேர்கள் பள்ளியில் படித்தால் தலைக்கு ஐந்து ரூபாய்க்கு என் செய்வர்? பணம் வசூலிப்பதாயிருந்தால் மாணவர்களின் நிலை, தரத்துக்குத் தக்கவாறு ஐம்பது பைசா, ஒரு ரூபாய் என்று வசூலிக்கலாமே! அதை விடுத்து மாணவர்களிடம் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று வசூலிப்பதென்றால், அந்த அளவுக்கு நாட்டின் வாழ்க்கைத்தரம், பொருளாதாரம் இன்னும் உயரவில்லையே!

திண்டுக்கல்.
6-10-70 வெ. இராசேந்திரன்

❋ சமீபத்தில் ரிசர்வ் பாங்க் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி லாட்டரியிலிருந்து கிடைக்கும் வருமானம் மிகக் குறைவு என்று தெரிகிறது. பெரும் பகுதி ஏஜண்டுகளுக்குக் கமிஷனாகவும், பரிசுகளாகவும், லாட்டரி நடத்தும் செலவுக்கும், நடைமுறைச் செலவுக்கும் போய் விடுகிறது. மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு விற்பனைக் கமிஷனுக்கும், நாற்பது சதவிகிதம் ஸ்தாபனச் செலவுக்கும் விற்பனைச் செலவுக்கும் கரைந்து விடுகிறது. இப்படிப் பெரும் செலவுகளைத் தீர்த்துக் கொண்டது போக மிச்சம்தான் பொது நன்மைப் பணிகளுக்கும், கல்வி வசதிகளுக்கும், வைத்திய வசதிகளுக்கும் அளிக்கப்படுகிறது? இது எந்த அளவுக்கு இருந்து விடப் போகிறது? இந்தச் சிறிய லாபத்தைக் கருதி லட்சோப லட்சம் மக்களின் மனம் சூதாட்டத்தில் ஈடுபட்டுக் கெட அனுமதிக்கலாமா?

ஆரணி
10-10-70 எம். சாம்பமூர்த்தி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon